

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்
சிவகுருநாதர வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்



# வேலுப்பிள்ளை அன்பழகன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# அன்பு தீபம்

**02.05.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்
சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும்கொண்ட

அமரர்

# வேலுப்பிள்ளை அன்பழகன்

(புலமைப்பரிசில் ஆசிரியர் - யா/செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை,
யாழ்ப்பாணம், அன்பொளி கல்வியகம்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# அன்பு தீபம்

02.05.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

**எங்கள் அன்புத் தெய்வத்திற்குக்**
**காணிக்கையாக இந்நூல்**

என்றென்றும் எமது குலவிளக்காய்
ஒளிச்சுடராய் பாசத்தின் பிறப்பிடமாய்
அன்பின் இருப்பிடமாய் பண்பிற்கும் கடமைக்கும்
உதாரணமான புருசராய் நல்வாழ்வில் நாம்
செழிப்புற்று வாழ்ந்திட வேண்டும் என்றே
பாசத்துடன் அரவணைத்து வழி நடத்தி நின்ற எங்கள்
அன்புத் தெய்வத்தின் பாதார விந்தங்களில்
இம்மலரைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒருமைக் கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு புடைத்து



மண் மகிழ

31
10
1974

கண் நெகிழ

02
04
2021

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்
சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# வேலுப்பிள்ளை அன்பழகன்

(புலமைப் பரிசில் ஆசிரியர் யா/செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலை
யாழ்ப்பாணம் அன்பொளி கல்வியகம்)

## திதிநிர்ணய வெண்பா

வையகத்தோர் வாழ்த்தி ஏத்தும் ஆண்டாம் சார்வரியதனில்
பங்குனித் திங்கள் இருபதாம் நாள் வெள்ளிக்கிழமை
அபரபக்க பஞ்சமி திதிசேர் நன்நாளில் – அன்பழகன் என்னும் நல்லாசான்
நிலையில்லா வாழ்வகற்றி நிலைத்திடு வாழ வாழ்வைத்தேடிய நாளதாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாமாலை

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து"

## தேவாரம்

கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கேஇர வும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீராட்டா னத்துறை அம்மானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன்றனுக்கு
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்தா னந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆழிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
உன் அடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரனைவதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்தபெரு மாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக்கின்ற இதயத்தின் வலிகளோடு
## வேலுப்பிள்ளை அன்பழகன் அவர்களின்



"ஜீவிதப் பதிவுகளைப் பகிர்ந்துகொள்கின்றோம்..."



ஈழமணித் திருநாட்டின் உலகம் போற்றி மகிழ்ந்திடும் வடபால் யாழ்ப்பாணக் குடா நாட்டின் சாவகச்சேரிப் பதியின் சிறப்பு மிக்க மாநகராம் மட்டுவில் தனில் கலைஞர்களும் தமிழ் வித்தகர்களும் செய் பரிய சேவையாளர்களும் கவிஞர்களும் தமிழ் நாடக அண்ணாவிகளும் வாழ்ந்து புகழ் பரப்பிய மண்ணின் மகன் கல்வியின் வித்தக நாயகன் அன்பழகன்.

வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் இனிதான இல்லற வாழ்வில் இறைவன் திருவருளால் ஆறு ஆண் மக்களையும் மூன்று பெண் பிள்ளைகளையும் பெற்றெடுத்து ஒன்பது பிள்ளைகளுடனும் மகிழ் வோடு வாழ்ந்து வரும் வேளை வேலுப்பிள்ளை அவர்களின் கடின உழைப்பினால் கிடைத்த வருமானத்தைக் கொண்டு பிள்ளைகளின் வள மான வாழ்வுக்கு கல்வியே சிறப்பென்பதை உணர்ந்து அனைவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் சிறப்புறச் செய்த பெருமகனாவார். அவருக்குப் பக்கத் துணையாக மனைவி செல்லம்மாவும் செயற்பட்டார்.

பிள்ளைகள் அனைவரும் கல்வியில் மட்டுமல்லாது சிறந்த ஒழுக்க சீலர்களாகவும் பல்வேறு அரச துறைசார்ந்த பதவிகளை வகித்ததனால் வேலுப்பிள்ளை குடும்பம் மட்டுவில் கிராமத்தில் மட்டுமன்றி தென்மராட்சியிலேயே மதிப்புக்குரியவர்களாகத் திகழ்கின்றனர்.

கடைசி மகனாகிய அன்பழகன் பெற்றோரினதும் சகோதர. சகோதரிகளின் அன்பும் பாசமுமுள்ள செல்லத் தம்பியாகத் திகழ்ந்தார். பள்ளிப்பருவம் எய்தவே அவரது சொந்தக் கிராமமான மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார். வீட்டில் அன்பும் பாசமுமாக வளர்ந்த அன்பழகன் பாடசாலையில் ஆசிரியர்களிடத்தும் சக மாணவர்களிடத்திலும் அன்பாகவும் கனிவாகவும் பழகிக் கொண்டார். இதனால் பாடசாலைச் சமூகத்தில் நல் மதிப்புள்ள மாணவனாக அடையாளப் படுத்தப்பட்டார்.

இடைநிலை கல்வி தொடக்கம் உயர்நிலைக் கல்வியையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பயின்றார். அந்த நாட்களில் கல்லூரியில் மாணவத் தலைவனாகவும் நல் மாணவனாகத் திகழ்ந்ததுடன் பாடசாலையில் நடைபெறும் அனைத்துச் செயற்பாடுகளிலும் விருப்பமுடன் சுறுசுறுப்பாகச் செயற்பட்ட அன்பழகன் நல்ல நண்பர்களுடன் கல்லூரியிலும் சமூகத்திலும் பல்வேறு சமூகப் பணிகளைத் தனது இளமைக் காலத்தில் கற்று நின்றார்.

புதிய விடயங்களைத் தேடலின் ஊடாக கற்றுக் கொள்வதில் ஆர்வம் உள்ள காரணத்தினால் க.பொ.த உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி யைத் தொடர்ந்த அன்பழகன் அதிலும் சித்தி பெற்றார். அழகியல் கலை யில் விருப்பம் கொண்டு சிறுவர்களோடு தானும் சிறுவனாக ஆடல், பாடல், அபிநயங்கள், கதை கூறுதல், காகிதாதிகளில் பொம்மைகள் செய்தலென தன்னை வளர்த்துக் கொண்டார். சிறுவர் உலகம் உயர்ந்திட ஆரம்பக் கல்வியே அடித்தளம் என்றுணர்ந்து ஆரம்பக் கல்வி ஆசிரிய நியமனம் பெற்று தனது சொந்த ஊரான மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையில் ஆசிரியர் சேவையைத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு கற்பித்து வரும் வேளையில் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் ஆரம்பக் கல்விப் பயிற்சி ஆசிரிய மாணவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். பயிலும் காலத்தில் சிறந்த ஆரம்பக் கல்வி ஆசிரியரென பலரின் பாராட்டுக்களையும் நன்மதிப்பையும் பெற்றுத் திகழ்ந்தார். இவரின் உதவி செய்யும் மனப்பாங்கும் சிரித்த முகத்துடன் பழகும் பண்பு, எதனையும் தலைமையேற்று செயற்படும் திறனும் கலாசாலையில் யாவரையும் கவர்ந்தது.

கலாசாலையில் கற்ற வேளையில் இரண்டு வாரகாலம் கற்பித்தல் பயிற்சிக்காக யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையைத் தேர்ந்தெடுத் தார். அந்த இரண்டு வாரங்களிலும் அன்பழகனின் கற்பித்தல் பாணி அவருடைய மகிழ்ச்சிகரமான மாணவர் விரும்பும் வகையான அணுகு முறை என்பவற்றை அவதானித்த இந்து ஆரம்ப பாடசாலை நிர்வாகம் கீழ் வானில் சூரியன் உதித்தது போல் ஆரம்பக் கல்வியின் பொக்கிஷம் அன்பழகன் என்றுணர்ந்து ஆசிரியர் கலாசாலை பயிற்சி முடிந்ததும் கடின முயற்சியினால் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் ஆசிரியராக இணைந்து கொண்டனர்.

புயல் வேகத்தில் தென்றலாய் இனித்திடும் தரம் 5 வித்தகர் அன்பழகன் என்ற செய்தி சமூகத்தில் பரவத் தொடங்கியது. ஆதலால் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் பெற்றார் தங்கள் பிள்ளை களை இணைத்துக் கொள்வதில் முண்டியடித்து நின்றது யாவரும் அறிந்த விடயமே.

இவ்வாறு அன்பழகனின் பணி தொடர பல பெற்றார்களின் விருப்பை ஏற்று சில ஆண்டுகள் ஞானக் குழந்தை கல்வி நிலையத்திலும் தனது ஆசிரியர் பணியைத் தொடர்ந்தார். பின்னர் நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் தனியார் காணியில் அன்பொளி கல்வி நிறுவனம் அன்பழகனால் ஆரம்பிக்கப்பட்டு சில ஆண்டுகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில் தரம் 5 வகுப்புக்கள் இடம் பெற்று வருவதோடு யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை விளை யாட்டுத் திடலுக்கு அருகில் தனது சொந்த கட்டடத்தில் 1 - 4 வரையான வகுப்புக்கள் இடம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பொளிக் கல்வி நிறுவனமானது கட்டுழைப்பின் சின்னம் வேலையின் அடையாளம் ஆகும். அன்பழகன் அவர்கள் சிறந்த வளவாளர் தனது கல்வி நிறுவன ஆசிரியர்கள் உதவி ஆசிரியர்களை வளமுள்ளவர்களாக உருவாக்கியுள்ளமை பெருமைக்குரியதாகும்.

அன்பழகன் திருமணப்பருவம் எய்தவே இணுவிலைச் சேர்ந்த கல்வி கற்ற கௌரவ குடும்பத்தினராகிய திரு, திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி தம்பதியினரின் இளைய மகள் கவிதா (BSC) அவர்களை உறவுகளும் உற்றார்களும் நண்பர்களும் வாழ்த்தி நிற்க திருமண பந்தத்தில் இணைத்து கொண்டார்.

இல்லறத்தில் மகிழ்வோடு வாழ்ந்து வரும் வேளை இறையருளால் மூத்தமகன் அனுராகன் பிறந்தான். இவர் தற்போது தரம் 6 யாழ்.இந்துக் கல்லூரி மாணவர் ஆவார். அன்போடும் பாசத்தோடும் வாழ்ந்து வரும் வேளை இரண்டாவது மகன் கவிநயன் பிறந்தான். இருவீட்டார் உறவுகளும் மகிழ்வோடு கூடி வாழ்ந்த வேளை மூன்றாவது மகனாகிய சாருகானன் பிறந்தார். இவர்கள் இருவரும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் முறையே தரம்-4, தரம்-1 இல் கல்வி கற்று வருகின்றனர்.

மூன்று ஆண்மக்களுடன் இனிதாக வாழ்ந்து வரும் வேளை அவர்கள் கல்வியிலும் பிற செயற்பாடுகளிலும் ஒழுக்கத்திலும் சிறந்து வளர்தல் கண்டு மகிழ்ந்தனர். சமூகப்பணி தனது கற்பித்தல் பணி குடும்பத்திற்கு ஆற்ற வேண்டிய கடமை தவறாது செய்து வந்தார். சமூகசேவை கற்றல், குடும்பம் என்பதோடு கல்வித் துறையிலே தன்னை யும் வளர்த்துக் கொண்டார். வெளிவாரி கலைப்பட்டதாரியானார். தொடர்ந்து பட்ட பின் கல்வியிலும் தேர்ச்சி பெற'று முது கலைமாணிப் பட்டத்திலும் சிறப்புற்ற அன்பழகன் விஞ்ஞானம், கலைப்பிரிவு, அழகியல் என தன்னை வளர்த்துக் கொண்ட பெரு மனிதன் ஆவார்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து இடமாற்றமாகி கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் சிறிது காலம் தன் சேவை யினைச் செவ்வனவே ஆற்றி வளம் குறைந்த பாடசாலையை வளப் படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் செட்டித்தெரு மெதடிஸ்த மிசன் பாடசாலைக்கு விரும்பிச் சென்று தன் பணியைத் தொடர்ந்த வேளை அன்பழகன் ஆசிரியர் வந்துவிட்டார் என்று பெற்றோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் பிள்ளைகளை அவரிடம் ஒப்படைக்க மாணவர் தொகை அங்கே அதிகரித்து அப்பாடசாலையிலும் புலமைப் பரீட்சையின் சித்தி வீதம் அதிகரிக்க வழிகாட்டிய சாதனையாளராகத் திகழ்ந்தார்.

நல்லாசிரியர் விருதான "குரு பிரபா பிரதீபா" விருதினை மூன்று தடவைகள் சுவீகரித்த பெருமைக்குரிய ஆசிரியர் அன்பழகன் ஆவார்.

புலம் பெயர் நாடுகளில் வாழுகின்ற உறவினர்களின் விருப்பின் பேரில் சுவிஸ்லாந்து, சிங்கப்பூர் என பல நாடுகளுக்கு மனைவி பிள்ளைகளுடன் சுற்றுலா சென்று மகிழ்ந்த வேளையிலும் கூடுதலாக புத்தகக் கடைகளையே நாடினார். சிறுவர் சார்ந்தும் அறிவியல் தொடர்பான நூல்களைக் கொள்வனவு செய்து அதனைத் தமிழிலே மொழி பெயர்த்து நாடு பூராகவுமுள்ள மாணவர்கள் அள்ளிப் பருகிட கல்வி அமுதளித்த பேராசான் அன்பழகன்.

அழகு அறிவு அன்பு மூன்றையும் தன்னகத்தே கொண்ட அன்பழகன் தன்னுடைய அன்பொளிக் கல்வியகத்தில் கல்வி கற்று புலமைப் பரிசில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கிட்டத்தட்ட 500 மாணவருக்கு மேல் பரிசளிப்பு விழா ராஜா கிறீம் கவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் ஒவ்வொரு வருடமும் இடம் பெறும். அந்த விழாவிலே அழைக்கப்பட்ட விருந்தினர்கள் ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள் மாணவர்கள் என அனைவருக்கும் பரிசில்கள், விருதுகள், கேடயங்கள் உபசரிப்புக்கள் என நிறைவாக தனது சொந்தப் பணத்திலே செலவு செய்கின்ற அன்பழகன் என்பதனால் தான் அன்பொளி நாயகன் சேவையின் அடையாளம் என்போம்.

வீட்டிற்கும் உறவுக்கும் எம் தேசத்திற்கும் முப்பெரும் தேவிகளின் கல்வி, செல்வம், வீரம் அத்தனைக்கும் அதிபதியாய் ஆன அன்பழகனை இறைவன் கண்டு கொண்டான். பூவுலகில் அன்பு வாழ்ந்தது போதும் என்னருகே வாவென்று கொடிய நோய் கொடுத்து உடலை இங்கே விட்டு உயிரை தன் பாதார விந்தத்தில் ஏற்றிட்டான் என்று உணர்வோம்.

ஓம் சாந்தி சாந்தி

**சிவகுருநாதன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனைவியின் விழி நீர் விசும்பல்

எந்தனின் மருமார் பில்
மங்கள நாண் சாற்றியே
வாழ்வின் துணை நலமாய்
அரவணைத்தே இன்புற்றே
அன்பாக வாழ்ந்திருந்தோம்.

உங்கள் கண்ணின் ஒளிதனில்
கறையிலா உள்ளத்தைக் கண்டேன்
புன்னகையில் அன்பைக் கண்டேன்
அரவணைப்பில் பாசத்தைக் கண்டேன்
செப்பரிய சேவையினால்
கடமையின் உச்சம் கண்டேன்.

என் அன்பு ஆருயிரே!
காற்றோடு கலந்து
விண்ணுலகம் விரைந்ததேனோ!?
சடுதியாய் உனைப் பிரிந்ததனால்
துடிக்கின்றேன் என் அன்பு
என் தவிப்பு உங்களுக்குக் கேட்கிறதா?

என் ஆத்மா அமைதியுற
உங்கள் அன்பைத் தவிர
யாருளார் இவ்வுலகில்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் சொல்லியே தேற்றிடு என் அன்பு
எம் அப்பாவை எங்கிருந்தாலும்
அழைத்து வா என்றே - உங்கள் மைந்தர்கள்
துடித்து எனை வாட்டுகின்றனர்.
யாரிடம் கேட்பேன் எங்கு தேடுவேன்
என் ஆருயிரே அன்பே!
பதில் சொல்லிட வகை சொல்லு
புலமைக் கல்வியின் புதுமையெலாம்
தேசம் போற்றிட புகட்டி நின்றவரே!
வாடியவரெல்லாம் வாழ்வினில் உயர்ந்திட
அயராது உழைத்திட்ட என் அன்பே!
எம்மையேன் தவிக்கவிட்டு
விண்ணுலகம் விரைந்தீர்கள்?
விரைந்தே பதில் சொல்லும்.
இல்லையெனில் அங்கேயே வீடமைத்து
மகிழ்வோடு மழலைகளுடன் வாழ்ந்திடுவோம்.

குவலயம் போற்றியே
மகிழ்ந்திட்ட எம் குடும்பவாழ்வில்
காதல், நேசம், கருணை, கடமை
எல்லாமே ஒன்றாகி வாழ்ந்தோமே
அத்தனையும் கனவாகி கலைந்ததே அன்பு.

வாழ்வதனில் எப்போது மீண்டும்
உறவாகி மகிழ்ந்திடுவோம்?
என்றே எண்ணித் தவித்திடும்
எந்தனுக்கு
அருள்புரிவாய் என் பிரியமுள்ள
நாயகனே என் அன்பே.

என்றும் உங்கள் நினைவுகளுடன்,

**மனைவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகன்மார் ஏக்கம்!

இனிமையான காலைப் பொழுதினிலே
கட்டி அணைத்து கால்போட்டு
நாம் தூங்க நீங்கள் கொழும்பில் - அப்பா
நாளை வந்திடுவேன் என்றீர்கள்.

மகிழ்வோடு மலர்ந்த விடியலில்
கண்ணிமைத்துக் காத்திருந்தோம்
வந்ததோ கொடிய செய்தி!
நாம் தந்தையை இழந்திட்டோம் என்றது.

செய்வதறியாது திகைத்தோம்
உறவுகள் நட்புக்கள் எல்லாம்
விரைந்தே புடைசூழ்ந்து
சோகத்தோடு எங்களைத் தேற்றினர்.

பரிவோடும் கனிவோடும் - அப்பா!
கட்டி நாம் கதறி அழ
கண்ணீர் குளமாக - வழிமீது
விழிவைத்துக் காத்திருந்தோம் - அப்பா

பெட்டியில் ஏறியே கத்தினோம்
அப்பா விழித்திடு என்றே.
நீங்கள் விண்ணுலகம் சென்றிட்டீர்
இனி இங்கு வரமாட்டார் என்றனரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுலகம் எங்கே யாரிடம்
விண்ணப்பம் கொடுத்து அழைப்பது?
வதை சொல்ல யாருமில்லை!
அது இறைவனின் இராட்சியம் என்றார்கள்.

அப்போதுதான் புரிந்து கொண்டோம்
இறையுலகில் சங்கமம் ஆகிட்டீர்
இனி நாம் கேட்கும் வரங்களைத்
தந்திடும் தெய்வமானீர் என்று.

உறவுகளின் உயிராய்
நண்பர்களின் வழிகாட்டும் தலைவனாய்
மாணவர்களின் மாபெரும் ஆசானாய்
கவினுறு கலைகளின் வித்தகனாய் திகழ்ந்தவரே!

பண்போடு நீங்கள் ஆசிரியப் பணிபுரிந்து
புலமைக் கல்விக்காய் புலன் அனைத்தும்
புகுத்தி நின்ற எம் அப்பாவே
ஏன் எமைவிட்டு விரைந்தீர்கள் அப்பா.

எம் அன்னை உள்ளம் மகிழ்ந்திட
உங்களோடும் உறவுகளோடும் - நாம்
குதூகலித்து நாம் மகிழ்வுடன் வாழ்ந்திட
ஓடி வா அப்பாவே எம் அருகே.

இறைவா உனை இறைஞ்சுகின்றோம்
எம் அப்பாவை உன் பாதக் கமலத்தில்
ஏற்றுவிடு எமக்கருள் புரிந்திடவே.
இல்லையெனில் அப்பாவை எம்மிடத்தில் தந்துவிடு.

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டமளிப்பின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதர சகோதரிகள் மனக்குமுறல்!

அன்பின் உருவாய்
பாசத்தின் ஒளியாய்
தரணி போற்றிட்ட தம்பியே!
கடைசியாய் கூடிப்பிறந்து
குதூகலித்த எம் தம்பியே!
குடும்பம் என்ற விருட்சமதில்
அதிபதியாய் திகழ்ந்தீரே!
எமக்கெல்லாம் வழிகாட்டி
எம் குறைகள் தீர்த்த
அன்புத் தம்பியே!
அன்பின் சொரூபம் நீதானே
தம்பி எமைத் தவிக்க வைத்து
விரைந்தோடி மறைந்தாயே
விழிவழியே நீர் சொரிய
எம் வேதனையின் தவிப்பறியாயோ?
ஊர் எல்லாம் பெயர் சொல்லிடவே
உயர்வாக வாழ்ந்தோமே!
எம் தேசத்தின் புலமைத் தேர்விற்கு
பொக்கிசம் நீ என்று
புகழ் மாலை பெற்றாயே!
மகிழ்ந்து நாம் ஆரத்தழுவி
அணைத்திருந்தோமே
எம் தம்பி அன்பழகா.
இப்புவியில் கனிவான
உந்தன் பாசப் பிணைப்பினை
யாரிடம் காண்போம் தம்பி.
தேசமே சோகத்தில் பரிதவிக்க
திகைத்து நாம் கலங்கி நிற்க
புகுந்த வீட்டிலும் புகழோடு வாழ்ந்த



அன்புருவே
ஒரு நொடிப் பொழுதில்
இறைவன் திருப்பாதம்
விரைந்த தேனோ?
நாம் பக்தியுடன் வணங்கிநின்ற
கடவுளும் பாதகர் ஆனாரோ!
எது நடந்திடினும் எமை
ஆற்றிடவும் தேற்றிடவும்
அருள் தருவாய் - எம்
ஆருயிர் தம்பியே அன்பழகா.

என்றும் உன் நினைவுகளுடன்.

சகோதர - சகோதரிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்களின்
## நினைவுப் பதிவுகள்!

மதிப்பு மிக்க மாமாவாக மாநிலத்தில் திகழ்ந்தவரே!
மிக்க துயர் எமக்களித்து இறைராட்சியம் சென்றீரோ?
வந்தது கொடிது என்பதனால் விரைந்து சென்றீரோ
உங்கள் அன்பு முகம் காணாது ஏங்குகின்றோம்.

பெற்றவள் போல் அன்பு கொண்டு -
பேரறிவாளனாய் வல்லகுருவாய் - எமக்கு
வழிகாட்டிய நேசமிகு எம் மாமாவே
இறை தந்த வித்தகராய் கண்ணியத்தோடு வாழ்ந்த மாமாவே!

உறவுகளின் நாயகனாய் அன்பொளி விளக்காய்
திகழ்ந்திட்ட எம் அருமை மாமாவே!
ஜீவிதத்தில் அருமைமிகு உங்களைப் போல்
எப்பிறப்பிலும் காணோமென கலங்குகின்றோம்.

எம் அம்மாக்களின் கடைசித் தம்பியாய் அவனியிலே
செல்லமாய் வாழ்ந்திட்ட எம் அருமை மாமாவே
கதிகலங்கி விழி நீர் கலங்கிட கலங்கினோம்
நோயின் பிடியில் அல்லற்பட்டு வாழ்ந்தீர்கள்
என்ன செய்வோம் இறை விதியா அன்பு மாமாவே!

தீயினால் அடக்கம் செய்திடவே
தீபமாய் எம் நெஞ்சில் உறைந்திட்ட மாமாவே
ஜீவனோடு ஜீவனாய் வாழ்ந்திட்ட எம் அருமை மாமாவே
எம் வாழ்நாள் முழுவதும் உங்கள் நினைவுகளோடு
இறையருள் வேண்டி இறைஞ்சி நிற்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்,
**மருமக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமன் மாமியின்
## உள்ள வேட்கை...!



கண்ணியமாய் எம் ஏக புதல்வி
கவிதா எனும் நல்லாளை
கரம்பிடித்தே இல் வாழ்வில்
இணைந்த
பாசமிகு மருமகனே அன்பழகா!

குவலயம் போற்றி மகிழ்ந்திடும்
அணையாத ஒளியாய் திகழ்ந்த
எம் பாசமிகு மருமகனே
உமை போற்றியே பூசித்து வாழ்ந்திருந்தோம்.

உந்தன் இனிய இல்வாழ்வு கண்டே
நாம் மகிழ்ந்த வேளை
மூன்று ஆண் மக்களை பேரர்களாய்
நாம் அரவணைத்தே மகிழ்ந்தோம்.

வாழ்வுக்கு நல்வழிகாட்டிய
எம் அன்பு மருமகனே - உந்தன்
திடீர்ப் பிரிவால் தவித்து - கலங்குகிறோம்
இது வென்ன விதியென்று சொல்லிவிடு.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்,
**மாமா, மாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் தம்பியே!
# அழகுத் தெய்வமே!
# எங்கே சென்றாய்...?



எனது அன்னையின் மடியில் இளைய புத்திரனாக உதயம் பெற்று குடும்பத்தின் சிறப்பை உனது அழகிய தோற்றத்தாலும் முக மலர்ச்சியினாலும் கல்விச் செழிப்பினாலும் பூகோளம் போற்ற வைத்தீரே! எனது அன்பு மருவி வந்த மகனே!

தென்மராட்சி மக்களின் இடப்பெயர்வில் பாசமிக்க அன்னையை இழந்த வேளையில் அன்னையாய் நான் உருவெடுத்து அன்புக்கரம் நீட்டி அரவணைத்து நிறைமகனாய் குறையேதும் இல்லாமல் பாசத்துடன் வளர்த்து வந்தேனே!

சாந்தா அண்ணிக்கும், எனது சிறார்களுக்கும் சிறிய தந்தையாகவும், குடும்ப பாதுகாவலராகவும், ஆசானாகவும் வழிகாட்டியாகவும் தொழிற்பட்டு, தமிழ்மொழிமூலமான மழலை சிறார்களுக்கு கல்வியென்னும் கருப்பொருளை தங்களின் கடின உழைப்பினாலும், திறமையினாலும் உயர்ந்த மனப் பாங்குடன் என்றும் அணையாத கல்விச் சுடரை மன நிறைவாக ஏற்றி வைத்தீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது மலர்ந்த முகத்துடனும் இனிய புன்முறுவல் சிரிப்புடனும் பல்துறைசார்ந்த நிபுணர்களையும் அதிகாரிகளையும் கவர்ந்து எல்லாக் கருமங்களையும் நிறைவாகச் செய்து முடித்து மன நிறைவுடன் உலகம் போற்றும் கல்வியின் கருப்பொருளாக வாழ்ந்து வந்தீரே!

யாழ். நகரில் சொந்த உறைவிடம் இல்லாமல் வாடகைக் குடியிருப்புக் களில் பாசமிக்க தம்பியை குறையேதும் இல்லாமல் வளர்த்து வந்தேன். சிறிது காலத்தில் இருவரதும் கடின உழைப்பினால் யாவராலும் போற்றத் தக்க இடத்தில் ஒரே குடும்பத்திற்குச் சொந்தமான இரண்டு எழில் மனைகளை மன மகிழ்வுடன் வாங்கி உரிய திருத்த வேலைகளையும் சைவ சமய முறைப்படி எல்லாச் சடங்குகளையும் செய்து எனது கண் காணிப்பின் கீழ் தினம் தினம் இருக்கக் கூடியதாகத் தங்களை இல்லறத் துடன் வாழ வைத்து எனது குடும்பமும் மகிழ்ச்சியாக கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தோம்.

கொடிய நோயின் தாக்கத்திற்கு உள்ளாகிய எனது அன்புத் தெய் வத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற குறிக்கோளில் அயராது முழு மூச்சுடன் தொழிற்பட்டேன். இறுதி நேரத்திலும் கூட குறித்த நோயுடன் தொடர் புடைய வைத்திய நிபுணர் ஒருவரின் ஆலோசனைக்கமைய தலை நகரில் அமைந்துள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முற்பட்ட நேரத்தில் அன்றைய இனிய காலைப் பொழுதில் எனது பிள்ளைகளுடன் உனது பச்சிளம் பிஞ்சு சிறார்களும் வாகனம் கொழும்பு நோக்கிப் புறப்படத் தயாராக இருந்த நேரத்தில், வீட்டு முற்றத்திற்கு அப்பால் சென்று, வீதிக்கு அருகில் நின்று, "அப்பா விரைவில் குண மடைந்து விரைவில் திரும்பி வாங்கோ" என்று வழியனுப்பி வைத்த கண்கொள்ளாக் காட்சியை என்னால் எத்தருணத்திலும் மறக்கவே முடியாமல் இருக்கின்றது.

இறுதியில் தங்களை இறைவன் தன்கரம் பிடித்தமையால் உங் களை என்னால் உயிருடன் மீட்க முடியாமல் செய்வதறியாது கலங்கி நிற் கின்றேன். தங்களின் பிரிவுத்துயர் ஒலியிலும் வேகமாக உலகெங்கும் பரவியது. அவ்வேளையில் இலங்கைத் திருநாட்டில் இருந்து மட்டுமல்ல உலகின் பல நாடுகளிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான தொலைபேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்புக்கள் மூலம் உன் தம்பிக்கு என்ன நடந்தது என்று கேட்டார்கள். நான் பதிலேதும் கூறமுடியாமல் உன் நினைவாக அன்று கலங்கி நின்றேன். இப்பவும் கலங்கி நிற்கின்றேன்.

தினமும் அப்பா என்று செல்லமாகத் தங்களை அழைக்கும் அனு, கவி, சாருக்குட்டி ஆகிய முத்துக்களுக்கு என்னால் எல்லாவகையிலும் சாந்தமான வார்த்தைகளைக் கூறமுடியாமல் இருக்கின்றது. உனது பிள்ளைகளின் முகத்தை என்னால் கண்கலங்காமல் பார்க்க முடியாமல் இருக்கின்றது. எனது அன்புத் தெய்வமே! இதற்கான பதிலை நீயே எனக்குச் சொல்லித் தா!

தம்பியே! தங்களின் பிரிவு தற்காலிகமானது. நீங்கள் மிக விரைவில் மீள் புத்துயிர்ப்பு (மறுமானிடப் பிறவி) பெற்று இந்த புண்ணிய பூமியில் நிறைவான அன்னையின் மடியில் காவியநாயகனாக அவதரித்து நற் குழந்தையாகப் பிறக்க வேண்டுமென தினமும் கண்ணீர் புஸ்பங்களை இறைவனுக்குக் காணிக்கையாக்கி அதற்காகத் தினமும் பிரார்த்திக்கும்

*என்றும் உங்கள் பிரிவால் துயருறும்,*

**அன்பு ஓசண்ணன், ஓசண்ணி,**

**வே. இராஜேந்திரன் சாந்த நிர்மலா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தம்பியின்!
# நினைவுகளோடு...!



எம் அம்மா அப்பாவின் சிறகுகளுக்குள் குடியிருந்து ஒன்பது சகோதரர்களும் இன்பமாய் வாழ்ந்த வேளை எல்லோருமே கல்வியிலும் நற்பண்பிலும் சமூகம் போற்ற வாழ்தல் கண்டு தந்தை தாய் மகிழ்ந்திட வாழ்ந்தோம். எமது கடைசித் தம்பியாக எல்லோருக்கும் செல்லப்பிள்ளை யாக எம் அரவணைப்பில் கல்வியோடு கவினுறு கலைகள் அனைத்தும் கற்று ஆரம்பக் கல்வியின் புகழ் பூத்த ஆசிரியன் என்று தேசம் போற்றியது கண்டு மகிழ்ந்தோம்.

கடைசித் தம்பி, குட்டிமைத்துனர், குட்டிச் சித்தப்பா என்று மகிழ்வோடு வாழ்ந்த நாட்களை எண்ணியே நாம் வாட நிரந்தர துன்பம் ஆனதே எங்கள் அன்பு.

திருமண பந்தத்தில் இல்லாளோடு இனிதே வாழும் வேளை மூன்று ஆண்களோடு மகிழ்வாக வாழ்தல் கண்டு மகிழ்ந்து அறிவின் சிகரம் அன்பழகா பாசமுடன் அறிவூட்டி பண்போடு வளர்தல் கண்டு மகிழ்ந் தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் ஆருயிரே! ஆசைத் திருவடியே! உன் போன்ற உறவை இப்பிறப் பில் காண முடியாதடா. அன்பு, பாசம் நிரம்பிட பண்போடு பல கதைகள் கூறியே மகிழ்விப்பாயே.

பெரியண்ணா குடும்பமென்று ஓடிவருவாயே. சகோதரர்கள், மைத்துனர்மார், மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள் என்று உன் கருணைக் கண்களும் புன் சிரிப்பாலும் உந்தன் அறிவூட்டல் நற்பண்பு சேவையின் உயர்வு என அத்தனையும் எமக்குரைக்க வழிகாட்ட நீ இருக்கிறாய் என்று மகிழ்வோடு இருந்தோம் அன்பு.

அன்பு நீ நோயிலிருந்து குணமடைய வேண்டுமென்று நாம் வேண்டாத கடவுள் இல்லை. என்றாலும் நாம் தோற்றுவிட்டோம். அன்பு! பூமிதனில் நீ செய்த பணிபோதுமென்று ஆசை அன்பே இறைவன் தன் பணிக்காய் உனை அழைத்தாரே என்று மனதைத் தேற்றிக் கொண்டு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உன் பிரிவால் துயருறும்,
**பெரியண்ணா குடும்பம்**
மயில்வாகனம் கமலாம்பிகை
றவிச்செல்வன் குடும்பம்,
கலைச்செல்வன் குடும்பம்,
பாஸ்கரன் குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பழகன் சகோதரர்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர்மார் புலம்பல்...!





மைத்துனர்கள் என்றில்லாது சகோதரர் போல்
அன்புடனும் பரிவுடனும் வாழ்வெனும் கலைக்கு
அர்த்தம் சொல்வித்த எம் மைத்துனரே
புகழோடு நாம் வாழ வகை சொன்ன
பேர் அறிஞர் நீ தானே மைத்துனரே!

காலங்கள் கடந்து போனாலும் - உந்தன்
நினைவுகள் எம் உயிரோடு கலந்திருக்கும்
யார்தான் ஆறுதல் சொன்னாலும் - அழுது
புலம்பினாலும் தீருமா இந்த சோகம் மைத்துனரே?!

பிறப்பும் இறப்பும் கடவுளின் சித்தமென
எமைத் தேற்றி உந்தனின் ஆத்மா சாந்தியடைய
மனதார கண்ணீர்த் துளிகளை இறைவனுக்கு
காணிக்கையாக்கி திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்,
**மைத்துனர்மார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனிமார் புலம்பல்...!

அழகான காலைப் பொழுதினிலே
சூரியன் முகம் காட்டும் வேளையில்
எங்கள் புன்னகை பறிபோனதே மைத்துனா!
உங்கள் இறந்த செய்தி கேட்டு
இறுகிப் போனோம் - மைத்துனா.



சூரியனைச் சுற்றும் ஒன்பது கோள் போல்
நாங்கள் ஒன்பது குடும்பங்களும்
தென்றலாய் தேனாய் தெவிட்டாத தெள் அமுதாய்
பாசத்தில் கலந்திட்ட உறவுகளாய்
வாழ்ந்திருந்தோமே மைத்துனா.

வெவ்வேறு இடங்களில் நாம் வாழ்ந்தாலும்
பிரிக்க முடியாத உறவாகி வாழ்ந்தோமே
கணப் பொழுதில் காலன் பிரித்து விட்டான்
உனதுயிரை கலங்கி நாம் வாடுகின்றோம்.

அப்பா எங்கே? சித்தப்பா எங்கே?
கலங்கி அழும் குழந்தைகளுக்கு
உன்னைத் தவிர ஆறுதல் கூற யாருள்ளார்?
அண்ணிகள் என்று நீ அழைத்த குரல்
எம் காதுகளில் அமுத கானமாய்
ஒலிக்குது மைத்துனா!

அன்பான மைத்துனரே
இறைவன் திருப்பாதமிருந்து
எமக்கருள் புரிந்திட இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்,
**மைத்துனிமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கல் உரை

## அன்பான மைத்துனர்
## வே. அன்பழகன்!





"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்
ஆர்வலர் புன் கண்நீர் பூசல் தரும்."

**கருத்து :**

"உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது. அன்புக்குரியவரின் துன்பங் காணுமிடத்து, கண்ணீர்த்துளி வாயிலாக அது வெளிப்பட்டு விடும்" என்ற வள்ளுவன் குறளுக்கு உதாரணமாக எமது மைத்து னர் அமரர் ஆசிரியர் அன்பழகனின் மறைவு எனக்கும் எமது குடும்பத்திற்கும் ஆறாத துயரமாக இருந்து,

அழுதழுது எம் குடும்ப உறுப்பினர்களின் கண்ணீர் வற்றிப் போய் விட்டது. அழகன் எனக்கு பிறப்பு வழியால் மைத்துனராக இருந்தாலும் எனது திருமண பந்தத்தில் அவரது அக்காவை நான் மணம் முடித்த வழியாலும் மைத்துனராகி எம் குடும்ப பிணைப்பில் இறுகப்பற்றியவராக இருந்து எமது குடும்பத்திற்கும் பிள்ளைகளுக்கும் சகல வழிகளிலும் உதவியாகவும் உறுதுணையாகவும் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கடும் முயற்சியால் மிகவும் சிறந்த ஓர் ஆரம்ப ஆசிரியராக அரச துறையிலும் தனியார் துறையிலும் சமாந்தரமாக வளர்ச்சி அடைந்து மாணவ சமூகத்திற்கும் உறவுகளுக்கும் அத்திபார கல்வியை உறுதியாக இட்டு பல உயர் தொழில் வல்லுநர்களை உருவாக்கியவர் என்பதை இவரது மரண நிகழ்வு அஞ்சலி உரைகள் தெளிவு படுத்தியபோது அவரை ஆரம்பத்தில் வளர்மதி கல்வி கழகத்தில் கற்பிக்க அனுமதித்து வாய்ப்புக் கொடுத்ததில் வளர்மதி கல்விக்கழக பொறுப்பாசிரியர் என்ற வகையில் நான் பெருமிதம் அடையும் அளவுக்கு இருந்தாலும் இவரது இழப்பின் அதிர்ச்சியும் சோகமும் எமை விட்டு நீங்காதபடி உறைந் துள்ளன .

இந்த அன்பின் ஆத்மா ஆண்டவன் அடியில் சித்தியடைய எனது குடும்பத்தின் சார்பாக கசிந்துருகி கண்ணீர் மலர்களால் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்,
**திரு.ச. கிருஸ்ணன்,**
ஓய்வு பெற்ற அதிபர்
வளர்மதி கல்வி கழக பொறுப்பாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதுகலைமாணி பட்டமளிப்பின்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் சிரம் தாழ்த்தும் ஒரே சித்தப்பா...!

அன்புக்கு இலக்கணமாக
பாசத்திற்கு பாத்திரமாக
பண்புக்கு பகலவனாக
உதவிக்கு உத்தமனாக
எமது குடும்பத்திற்கு வழிகாட்டியாக
எம்மில் ஒருவராக வாழ்ந்து
கல்வி உலகில் சாதனை புரிந்து
ஆரம்ப கல்வியின் தந்தையாக
சின்னஞ் சிறுவர்களின் உள்ளத்தை
கொள்ளை கொண்ட அன்புச்
சித்தப்பாவே நீங்கள் எமை விட்டு
பிரிந்து சென்றது இன்னமும்
எங்கள் மனதில் கனவு போலவே உள்ளது.



உங்களை கொடிய நோய் பீடித்த போது
சகல வழிகளிலும் உங்கள் அருகில் இருந்து
என்னால் இயன்ற சகல சரீர
உதவிகளையும் செய்து
எப்படியும் சுகமாகி விடுவீர்கள் என்ற
தன்னம்பிக்கையில் நான் இறுதிநாள்வரை
உங்களுடனேயே தங்கி உங்களுக்கு
உதவி இருந்தேன்.
நீங்கள் இறந்த அந்த கணப்பொழுதை
இப்பவும் நினைத்தால்
என் நெஞ்சம் பட படக்கிறது.
வைத்திய சாலையில் வைத்தியர்
உங்களின் மரண செய்தியை எனக்கே
முதல் கூறினார் - அந்த நிமிடம்
என் மனம் பட்ட பாடு!
நானே இறந்தால் என்ன?
என் உயிரை எடுத்து விட்டு
சித்தப்பாவின் உயிரை மீளத் தா,
இறைவா என என்னையே
அடித்து அழுத தருணங்கள்
மறக்க முடியாத வடுவாக என்
வாழ்நாள் பூராகவும்
நினைவிலிருக்கும்.

சித்தப்பா நீங்கள் காட்டிய
வழியிலாவது நாம் நடந்து
உங்களை நினைவு கூருவோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்தனை செய்கின்றோம்.

ஞானசந்திரன் விஜி குடும்பம் சார்பாக,
**பெறாமகன்,**
**அபி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஆருயிரே
## சித்தப்பா...!

எம் உயிராய் உயிருக்கு உயிராய்
கலந்து உறவாடி மகிழ்ந்திட்ட
எம் ஆருயிர் சித்தப்பாவே
நீங்கள் எம்மை விட்டு
மறைந்து போனீர்கள் என்று
நினைக்கத் தோன்றுவதில்லை
உங்களை நாங்கள் நெஞ்சிலே
சுமக்கின்றோம் எம் ஆருயிரே - சித்தப்பாவே

சித்தப்பா சித்தப்பாவென்றே
நாம் சுற்றிச் சுற்றி வந்தே
அனுதினமும் நாடி நின்றோம்.
எம் உள்ளமதில் கண்ணீர் அருவி
பாய்ந்தோட எமைப்பிரிந்து
விண்ணுலகம் விரைந்ததேனோ?

ஒன்று கூடி ஒற்றுமையாய்
நாம் வாழ்ந்திட வழி சொல்லி
கற்பித்த எம் அருமைச் சித்தப்பாவே!
உறவுகளின் ஒளியான உத்தமரே
உலகம் போற்ற வாழ்ந்திட்டவரே!

சித்தப்பா நீங்கள் ஒரு
சிறந்த சிந்தனையாளராக
யாவரும் போற்றிடும் வழிகாட்டியாக
பண்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாக
உங்கள் பொறுமையும் கண்டிப்பும்
கொண்ட கொடையாளியாக
திகழ்ந்தது கண்டு மகிழ்ந்தோம் சித்தப்பாவே!
உறவுகளை ஒன்றிணைத்தே
உங்கள் புன் சிரிப்பாலே கட்டிடும்
எம் அருமைச் சித்தப்பாவே!
வாழ்வின் இலக்கணம் அத்தனையும்
ஊட்டி வளர்த்திட்ட அருமைமிகு
சித்தப்பாவே!



நாம் வாழும் வரை உங்கள்
நினைவலைகள் எம்மில்
வாழும்
அதுவரையில் உங்கள் ஆத்மா
ஆறுதலடைய இறைவன்
அருள் வேண்டி நிற்போம்.

என்றும் உங்கள்
பிரிவால் துயருறும்,
பெறாமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பெனும்
# பெரு விருட்சம்...!

அன்றைய விடியல்
என்றும் விடியா சேதி
எடுத்து வந்தது!
வேலுப்பிள்ளை விருட்சத்தின்
இறுதி இள விழுதும்
அன்பு எனும் பெயரும்
அன்பே உருவான
சித்தப்பா மறைந்த
சேதி அது.

கள்ளம் இல்லா புன் சிரிப்பு
கபடம் இல்லா வாய்மொழி
சிறிதும் தீது அறியா நெஞ்சம்
இன்றோ,

இவை அனைத்தையும்
இழந்தோம்; நிற்கின்றோம்.
இனியொரு கதியின்றி.



முகம் வாடாத திருவுள்ளம்.
மனம் கோணாத கொடையுள்ளம்.
நாடியவர்க்கு எல்லாம்.
தொண்டு செய்யும் தொண்டுள்ளம்.
ஊருக்கொரு குறையென்றாலும்.
ஓடிச்செல்லும் கருணையுள்ளம்.
இன்றோ,
வாடாத திருவுள்ளம் எங்கே?
கோணாத கொடையுள்ளம் எங்கே?
ஓடிச் சென்ற திருக்கால்கள் எங்கே?
பொங்கிடும் கருணை இதயம் எங்கே?
அத்தனையும் கானல் ஆனது ஏனோ?
எம் மூவர்க்கும்
உடன் பிறந்த அண்ணனாய்
எம் பெற்றோர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு மகனாய்
சித்திக்கு பாசமிகு கணவனாய்
மகன்களுக்கு
வழிகாட்டியாய் வாழ்ந்தவரே
அன்பு சித்தப்பாவே!

அன்பெனும் பெயர் தாங்கி
அகிலத்தில் பலர் இருக்க
அன்பெனும் ரூபத்தில்
எம் அன்பு சித்தப்பா
நீங்கள் மட்டும் இருக்க
அன்பே உருவான
கடவுள் தன்
அன்பு மொழிக்கு
களங்கம் வந்ததுவோ என்றோ
உமை எமை
பிரித்தார்.

சித்தப்பா,
நாங்கள் சிறிது
கலங்கினாலும் தாங்கும்
கரங்கள் நீங்கள்.
இன்றோ உங்கள்
நினைவுகளை மட்டும்
தாங்கும் கலங்கள்
ஆனோம் நாங்கள்.

31 நாட்கள் என்ன
31 யுகமே ஆனாலும்
மேகம் இல்லா வானம் போல
இழயாது பொழியும் மழை போல
திருவிழா இல்லா சாமி போல
தலைவன் இல்லா கூட்டம் போல
முடியை இழந்த கவரி போல
உருகித் தவிக்கின்றோம்.
வாரீரோ மீண்டும்
வந்து எம் துயர் துடைக்க.

ஆயிரம் மாணவர் ஆரம்பக்
கல்வியை
செதுக்கிய சிற்பி நீங்கள்
அன்பிலே கல்வியை
சாறு பிழிந்து ஊட்டிய
தலை சிறந்த ஆசான் நீங்கள்.

நித்தமும் எம் அப்பாவை
“அண்ணா” என்றும்
அம்மாவை “அண்ணி” என்றும்
அழைத்து வீடு தேடி வருவீரே!
இன்னும் ஒருமுறை
அழைக்க மாட்டீரோ.
ஒருதரம் அழைத்து
எம் துயர் துடைக்க மாட்டீரோ?

எங்கள் நித்திய புன்னகை அழகா
அன்பு சித்தப்பா
நீங்கள் நிறையாத இடம் இல்லை
இன்னும் எம்
நினைவு அகலாத
பொழுது இல்லை.

உங்கள் வழியிலே நடந்திடுவோம்.
உங்கள் நினைவிலே
வாழ்ந்திடுவோம்
உங்கள் கதைகளைச்
சுமந்திடுவோம்
உங்கள் நினைவு நாட்களை உயிரில்
கலந்திடுவோம்.
உங்கள் கனவுகளையும்
நினைவுகளையும்
சுமக்கும்
பெறா மகள்கள்.

நெஞ்சம் கனத்த நினைவுகளுடன்
**பெறாமக்கள்**
**(வர்ணி, நிருஷி, திசா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர் பிரதீபா பிரபா - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் கண்கண்ட கடவுளாக
# எம் அன்பு மாமா ...!



எங்கள் பாசத்தின் உயிர் மூச்சாக இருந்து
எமக்கெல்லாம் பெற்றோர் போல் இருந்து
ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்து
தந்த எம் மாமாவே  நீங்கள் எங்களை விட்டு
பிரிந்த சோகம் நிரந்தர வலியாக
எமக்குள் உறைந்து விட்டது.

எமது அம்மாவின் உடன் பிறந்த
கடைக்குட்டி சகோதரமாக எமக்குள்
இரத்த உறவான எம் மாமா
எம்மை எல்லாம் தன் சொந்த பிள்ளைகள்
போல் எல்லாவிதத்திலும் அன்புகாட்டி
எம்மை அரைவணைத்து எம் உயர்வுக்கு
உறுதுணையாக இருந்தார்.

எமது குடும்பத்தின் ஒரு தூணாக இருந்து
எம் குடும்ப சுமைகள் எல்லாம் தானே
தீர்ப்பேன் என்று அடிக்கடி எமக்கு
சொன்ன எம் அன்பு மாமாவே
இனி எங்கு உங்களை காண்போம்?

எம் கல்வி தொடக்கம் கல்லூரி வரை
எம் கனவு தொடக்கம் நினைவு வரை
எம் பிறப்பு தொடக்கம் உங்கள் பிரிவு வரை
எப்போதும் எம் அக்கறையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாயே மாமா, உந்தன் மறைவால்
எம் கண்ணீர் மட்டுமல்ல எம் உணர்வே
வற்றி விட்டது.

அன்பு மாமாவே!

பிரிவென்ற வலைக்குள்
நாம் சிக்கிக்கொண்ட போதும்
நினைக்க நினைக்க இனிக்கும்
உன் நினைவுகளில் தான்
நாம் இன்னமும் உயிர் வாழ்கின்றோம்
நீங்கள்
கடல் கடந்து,
மலை தாண்டி,
வான் தான்டி
விண்ணகம் சென்றாலும்
நமக்கிடையே உள்ளதென்னவோ
மூச்சுக்காற்று முட்டுகிற தூரம்தான்...!

மாமா நீங்கள் இறைவன் அடியில்
நிம்மதியாக துயில் உறங்க
உங்கள் ஆத்மா சாந்தி பெற
எம் கண்ணீர் பூக்களால்
கசிந்துருகி இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் வழியில்,
இயன்ற வரை பயணிப்போம் என்ற உறுதியுடன்,
**உங்கள் மருமக்கள்**
(நிரோ, நிவேதி, நிருத்தி, நிந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகன் சித்தப்பா!..!



ஒரு மாதம் ஆனது சித்தப்பா!!!
"அழகன் சித்தப்பா" என அழைக்க
நீங்கள் இல்லாத துயரம்.
பார்க்குமிடமெல்லாம் எங்கள் பார்வையில் தெரிகின்றீர்கள்
காலம் கடந்து சென்றாலும் ஒவ்வொரு நொடிகளிலும்
இதயத்தின் துடிப்பைப் போல்
அருகிலே நீங்கள் வாழ்வதை நாம் உணருகின்றோம்.
இக்கணமும் உங்கள் நினைவால் துயருறுகின்றோம்.

அன்பின் உருவானவரே!
பாசத்தின் உறைவிடமே!
தந்தைக்கு நிகர் அற்றவரே!
தாய் போன்று எமை வளர்த்தவரே!
தந்தையின் உடன் பிறப்பே!
தந்தை போன்றே எமை காத்தவரே!

தங்கள் முகம் பார்க்க ஏங்காத நாளில்லை
நல்ல நண்பன் போல் என்னுடன் பாசத்தை காட்டினீர்கள்
தோழன் போல் ஒன்றாக பல இடங்கள் சென்று வந்தோம்
ஆசைப்பட்டதை வாங்கியும் தந்தீர்கள் -என்
சின்னச் சின்ன ஆசைகளையும் நிறைவேற்றியும் வைத்தீர்கள்!

சின்ன வயதில் உங்கள் உறுப்பெழுத்தின் அழகைப் பார்த்தே
நான் தமிழ் மற்றும் ஆங்கில எழுத்துக்களையும்
எழுதக் கற்றுக்கொண்டேன்.
இப்போதும் ஏதாவது எழுத்துக்கள் எழுதும் போதும் உங்கள் மாதிரி
எழுதவேண்டுமென்றே எழுதுகின்றேன்.

காலை எழுந்தவுடன் முகுந்தா என செல்லமாக அழைத்து
பால் தேநீர் தந்தீர்கள்
பசியென்றவுடன் உணவு செய்து தந்தீர்கள்
நாம் கேட்காமலே "நாண் றொட்டி" யும் வாங்கித் தந்தீர்கள்
ஆனால் இன்று நம்மை விட்டு எங்கு சென்றீர்கள்?

தப்புக்களை தட்டியும் கேட்டீர்கள்
வாழ்க்கையெனும் பாதையில் வீறு கொண்டு நடக்கவும் செய்தீர்கள்.
தோல்விகளைக் கண்டு துவண்டிடும் போதெல்லாம் -"அவை
தோல்வியல்ல வெற்றியின் அறிகுறி "என்றும் உற்சாகப் படுத்தினீர்கள்
உண்மையில் நீங்கள் உயர்ந்தவர்தான்
நீங்கள் மட்டுமா? உங்கள் தியாகங்களும்தான் அழகன் சித்தப்பா.

என்றும் உமை மறவா உங்கள்
**அன்புப் பெறா மகன்,**
**து.முகுந்தன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிகரில்லாதவன்
# என் தம்பி ...!



பெற்றோரின் மாண்புடை மகவுகளாய்
மலர்ந்தோம் ஒன்பது பேர்
நாங்கள் அனைவருமே
அன்புடனே வளர்ந்தோம் ஒன்றாய்.

திருமணப் பருவம் எய்தவே
குடும்பமாகி இல்வாழ்வில்
குழந்தைகளுடன் வாழும் வேளை
என் தம்பி சாதனைகள் பல புரிந்து
தன்னிகரில்லா ஆசான் எனக் கேட்டு மகிழ்ந்திட்டோம்.

வந்த கொடிய நோய் மாறியது - என்று
மகிழ்ந்திருந்தோம் - எம் அன்புத் தம்பியே
உலகை உலுக்கும் கொடிய நோய் இவையெனில்
பறந்தே உன் காலடியில் தரிசனமாகியிருப்போமே.

எம் செல்லக் குட்டி அன்பு அந்திம காலமதில்
உன் திருவதனம் காணும் பாக்கியத்தை
இழந்து நாம் தவிக்கின்றோம்.
என் மைத்துனனா விண்ணுலகம்
விரைந்தான் ? உந்தன் அத்தான் கலங்குகின்றார்.
மாமாவைக் காணும் பாக்கியம் இல்லையா என்று
உன் மருமக்கள் எனை வாட்டிட
கலங்கி நாம் கண்ணீர் விடுவதைத் தவிர
யாது செய்வேன் என் அன்பு!
என்றென்றும் உன் ஆத்மா எம்மோடு
உறவாடி வாழ்ந்திடவே இறைவன்
திருப்பாதம் இறைஞ்சுகின்றேன்.

என்றும் தங்கள் நினைவுகளை நினைவு கூரும்
**திரு.திருமதி குணசிங்கம் செல்வராணி (அன்ரி)**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**திரு.திருமதி மனோரஞ்சிதம் இராசேஸ்வரி**
**பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பரிசளிப்பு விழா கௌரவிப்பின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் குடும்பத்தின் குறைதீர்க்க பிறந்தவன்
## எம் **குலம்சிறக்க** உழைத்தவன்



சுவிசில் இருந்து சகோதரி
**செல்வராணியின்** அஞ்சலி

என் கண்ணீரை மையாக்கி!
உயிர்தனை கருவியாக்கி!
உணர்வால் எழுதுகின்றேன்!
மண்ணில் விதையான
என் தம்பிக்கு அஞ்சலியை!

என் தாயின் கருவறையில்!
எனக்கு பின்பு குடியிருந்தவன்!
என் தாயின் மடியில் இருந்த
போது தூக்கி நான் விளையாடிய
அழகு குட்டியே!

உனக்கு நடைபழக்கி
அக்கா என்று என்னை
அழைக்க பழக்கி
நான் சோறு ஊட்டியவனே
ஆருயிர் தோழனாய்
என் மீது அதிகமான
அன்புகொண்ட நேசனாய்
நெஞ்சமெல்லாம் நின்றவன்!

என் குடும்பத்தின் குறைதீர்க்க
பிறந்தவன்!
எம் குலம் சிறக்க உழைத்தவன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகள் பல புரிந்தவன்.
இன்னும் சாதிக்க கனவுகள் பல கண்டு
நிறைவேறாமல்
இறந்து போய்விட்டான்

உன்னை பார்க்க வர
வெளிநாட்டில் இருந்து நான்
துடித்த போதும் கொடிய கொரோனா
அதை தடுத்த கதையை
நிச்சயம் உன் ஆத்மா அறியும்

இது காலம் செய்த பாவமா
இல்லை காலன் கொண்ட பாசமா?
இல்லை கடவுள் செய்த மோசமா?

கண்ணீர் சிந்துகின்றேன்
என் நினைவுகளில்
அவன் நினைவுகள் நீந்துவதால்!
என் சகோதரத்துவம்!
விண்ணிலும் தொடரும்
என்ற நம்பிக்கையில் கழிகிறது
என் மீதி வாழ்க்கை !

முப்பத்தொராம் நாளில்
உன் ஆத்மா சாந்திக்கு
நானும் என் குடும்பமும்

கண்ணீர்பூக்களால் இறைபாதம்
நாடுகிறோம்.



என்றும்உன் நினைவுகளுடன்
**குணசிங்கம் செல்வராணி குடும்பம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பொளி கல்வியக பரிசளிப்பு விழாவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வியின் ஆதார சுருதி "மாமனிதன்"





**"நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு"**

எனும் பொய்யாமொழிப் புலவரின் வார்த்தைகளின் கனதியை அண்மைய நாள்களில் நான் அதிகம் உணர்ந்தது அன்பழகன் ஆசிரியரின் பிரிவுச் செய்தியறிந்த அந்தக் கணத்தில் தான். நேற்று வரை எங்களோடு அவர் உள்ளார், எங்கள் மண்ணின் குழந்தைகளோடு தனது வகுப்பறையில் குதூகலிக்கின்றார், தனது ஆசிரிய நண்பர்களுடன் இணைந்து அடுத்த மட்ட கற்பித்தல் நுட்பம் குறித்து அளவளாவுகின்றார் என்கின்ற நினைப்புத்தான் அவரது பிரிவுச் செய்தியை அறிகின்ற அந்தக் கணம் வரை எங்கள் அதிகமானவர்களின் மனதில் இருந்தது. கொடிய நோயிலிருந்து அவர் மீண்டார் என நாம் இடையிட்டு அறிந்த செய்தியினால் விளைந்த நம்பிக்கையாகக்கூட இருக்கலாம். ஆனால் அந்த நம்பிக்கைகள் அனைத்தும் பொய்த்துப்போய் அவரது பிரிவு நிரந்தரமாகி இருக்கின்றது.

எல்லாம் வல்ல பரம்பொருள் சிவபெருமானின் கழுத்தைச் சுற்றி ஊர்ந்துதிரியும் பாம்பை நாம் காலசர்ப்பம் என்கின்றோம். அந்தக் கால சர்ப்பம் தான் எங்கள் காலக்கணக்கை அவதானித்து கண்காணிக்கின்ற கடமையைச் செய்கின்றது. அதன் காலக்கணிப்பிலிருந்து எவரும் விலகிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல முடியாது. எம்மைப் படைத்த இறையருள் எதற்காய் எம்மைப் படைத்ததோ அந்தக் கடமை நிறைவுற்றதும் எங்கள் காலக்கணக்கை நிறைவுறுத்துகின்றது. கடமைகள் என நாம் சாதாரண மனிதராய் எமக்கு வகுக்கப்பட்ட கடமைகளை முன்னிலைப்படுத்துவோம். ஆனால் முன்வினைப் பயனாய் நாம் கொண்டுவந்த தீவினைப் பயன் நிறைவுற்றதும்தான் எம் கணக்கு முடிவுறுத்தப்படும். அன்பழகன் அவர்கள் கொண்டுவந்த தீவினைக்கணக்கின் அளவு குறைவென்பதால் வாழ்வின் அரைப்பாகத்தில் ஐம்பதை அண்மிக்கும்போது விடைபெற்றுக் கொண்டார். மீண்டும் தீவினைக் கணக்கைச் சுமந்து பிறக்காத வாழ்வையும் இப் பிறப்பில் வாழ்ந்து நிறைவுறுத்தினார்.

ஆம், அன்பழகன் ஒரு அற்புதமான ஆசிரியர். பலர் ஆசிரியர் எனும் தகைமையால் வாழும்போது ஒரு சிலர் மட்டும்தான் ஆசிரியர்களாகவே வாழ்கின்றார்கள். அத்தகையவர்களுள் எமது கல்விச் சமூகத்தில் முக்கியமானவர் அன்பழகன். குழந்தை மையக்கல்வி, பிள்ளை மையக்கல்வி, மாணவர் மையக் கல்வி என கல்வியுலகில் பேசப்படும் கோட்பாட்டுக் கருத்தியல்களை அன்பழகன் தன் வகுப்பறைச் செயற்பாடுகளில் பிரதிபலித்தவர். குழந்தைகளுக்குக் கற்பிக்கும்போது குழந்தையாகவே மாறுகின்ற அவரது சுபாபம் அவரது தனித்துவ அடையாளம். "ஆசிரியரியல்" எனும் அர்த்தத்தை வலுப்படுத்திய நாம் தரிசித்த தனித்துவமான ஆளுமை அன்பழகன்.

அன்பழகன் தனது பல்வேறு தனித்துவமான திறமைகளினால் அதிகம் எனது கவனத்தை ஈர்த்தவர். முன்பள்ளிகள் மற்றும் ஆரம்ப பாடசாலைகளின் விளையாட்டு நிகழ்வுகளில் ஓர் அறிவிப்பாளராக அவர் ஆற்றிய பங்கு முக்கியமானது. அவரது அறிவிப்புப்பாணி என்னை அதிகம் ஈர்க்கும். அறிவுறுத்தல்களை வழங்கும் இடைவெளிகளில் நிகழ்வுப்பொருத்தமாக அவர் இடைச்செருகும் சிறு கவிதைகளுக்காகவே அவரது அறிவிப்புக்கு காதுகொடுத்து காத்திருந்திருக்கின்றேன். இன்று எல்லாம் கனவாய், பொய்யாய், பழங்கதையாய் போயிருக்கின்றது.

பல மனிதர்களின் பிரிவுத்துயர் என்பது வெறுமனே ஒரு குடும்பத் துயராகவே கடந்துவிடுகின்றது. ஆனால் மிகச் சில மனிதர்களின் பிரிவுத் துயர் என்பது ஒரு சமூகத்துயராகவே நிலைத்துவிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பழகனின் பிரிவுத்துயர் அவரது குடும்பத்துக்கு மட்டுமன்றி எமது சமூகத்துக்கும் ஆழ்ந்த கவலையளிக்கும் பிரிவுத்துயராகும். பிரிவுத்துயரில் இருந்து மீள்வது என்பது நெருப்பாறுகளை நீந்திக் கடப்பது போன்றது. அறிவின் ஆழத்திலும் தத்துவவிசாரத்திலும் எந்த மட்டத்திலிருப்பவர்களாலும் தாங்கிக் கொள்ளமுடியாத துயராக பிரிவுத் துயர் வரலாறுகள் தோறும் இலக்கியங்கள் தோறும் சித்திரிக்கப்பட்டுள்ளது. தனயனின் பிரிவுத்துயரினால் துவண்ட தசரதச் சக்கரவர்த்தியும் தந்தையினதும் மனைவியினதும் பிரிவுத்துயரினால் துவண்ட அவதார புருசன் இராமனும் கிருஸ்ணரின் பிரிவுத்துயரினால் துவண்ட கோபியரும் கோவலனின் பிரிவுத்துயர் பொறுக்காது பெரும் உளச்சீற்றம் கொண்ட கண்ணகியும் என எங்கள் இதிகாசங்கள் தோறும் பிரிவுத்துயருக்கான சான்றுகள் நிறைந்து கிடக்கின்றன.

பிரிவுத்துயரில் இருந்து மீள்வதற்காக நாம் பிரிந்தவரின் பிரியத்துக்குரியவர்களுக்கு எவ்வளவு ஆறுதல்கள், தேறுதல்கள் கூறினாலும் அது இலகுவில் கடந்துவிடும் துயரல்ல. இந்த விதிக்கு அன்பழகனின் அன்புறவுகளும் விதிவிலக்கல்ல. அன்பழகனின் மனைவி திருமதி. கவிதா அன்பழகன் பல்கலைக்கழகத்தில் எனது மாணவி. விஞ்ஞான பீடத்தில் கல்வியியலில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர். அமைதியான சுபாபம் கொண்ட அவருக்கு ஆத்மார்த்த பொருத்தமுடைய இணையாக அன்பழகன் இருந்தார். அவர்களது இனிய இல்லறம் மூன்று ஆண் குழந்தைகளால் சாட்சியம் செய்யப்படுகின்றது. அன்பழகன் இல்லாது கவிதா உணரும் வெற்றிடத்தை அந்தக் குழந்தைகள்தான் நிரப்புகின்றார்கள். அந்தக் குழந்தைகளின் எதிர்காலம் வலுவானதாக அமைய வேண்டும். அதை வலுப்படுத்துவதற்காகவேனும் கவிதா பிரிவுத் துயரின் பாரத்தைச் சமனாக்கவல்ல தன்னம்பிக்கையைத் தன்னகத்தே உருவாக்கிக் கொள்வார் என நம்புகின்றேன்.

நல்ல ஆத்மாக்கள் அவர்கள் மண்ணுலகில் வாழும்போது கொண்டுள்ள ஆற்றலை விட விண்ணுலகம் ஏகிய பின்னர் அதிக ஆற்றலைக் கொண்டிருப்பார்கள். அழிவற்ற அந்த ஆத்மா தன் வல்லமைகளினால் தான் சார்ந்தவர்களின் நலன்களை என்றும் ஆசிர்வதித்த வண்ணமிருக்கும். அன்பழகனின் ஆத்மாவும் அவரது பிரிய மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக் குழந்தைகளைச் சுற்றிய வண்ணம் அவர்களைப் பாதுகாக்கும் கவசமாக என்றுமிருக்கும். எங்கள் பிறப்பின் மூலம் எமது உடலுக்குள் புகுத்தப்படும் ஆத்மா தன் மண்ணுலகத் தொடர்பை நிலைப்படுத்தும் வரை விண்ணுலகத் தொடர்புடனான தனது நீட்சியைக் கொண்டிருப்ப துண்டு. பிறந்த குழந்தைகளின் முப்பதொரு நாள் நிறைவுவரை அவர்களது ஆத்மாவுக்கு அந்தத் தொடர்பிருக்கும். அதனால்தான் தாயின் முகம் பார்த்துச் சிரிப்பதற்கு முன்னரே தமக்குள் சிரிக்கும் வழக் கம் குழந்தைகளிடம் இருப்பதுண்டு. தமது முன்னோர்களின் ஆத்மாக் களுடன் அந்தக் குழந்தை பேசி கலந்து மகிழ்ந்தே சிரித்து மகிழ்கின்றது. பின் முப்பத்தொருநாள் சடங்குடன் விண்ணுலகத் தொடர்பறுத்த ஆத்மா தன் உலகியல் வாழ்க்கையுடன் ஸ்திரப்பட்டுக்கொள்ளும்.

பின் இறப்பு நிகழும்போது உடல் அழிந்தாலும் ஆத்மா அழிவ தில்லை. அந்த ஆத்மா தன்னைச் சார்ந்தோருடனேயே சுற்றிக்கொண்டி ருக்கும். இறப்பின் தன்மையைப் பொறுத்து குறித்த ஆத்மாவுக்கான அந்திமக்கிரியைகள் செய்யப்படும் நாள்கணக்கு வரை அந்த ஆத்மா தன் வாழ்ந்த இடத்தில் தன்னைச் சார்ந்தோருடன் கலந்தேயிருக்கும். இதை நாம் எங்கள் அனுபவங்களிலும் உணரலாம். அவ்வாறு இருக்கும் ஆத்மா தனது பிரிவினால் துயருறும் உறவுகளுக்கு ஆறுதல் ஏற்படத்தக்க காரியங்களைத் தன் வலிமையினால் ஆக்கிவைக்கும். நிறைவில் அந்திமக் கிரியைகளுடன் வாழ்வியல் சூழலிருந்து விலகும் ஆத்மா பின் வேறு வழிகளில் தான் சார்ந்தோரை ஆசிர்வதிக்கும். அன்பழகன் போன்ற எல்லோருக்கும் நல்ல மனிதர்களின் ஆத்மா தன் கடமைகளைச் செவ்வனேயாற்றி தன் பிரிவால் துயருறுவோருக்கு நம்பிக்கை அளிக்கும் ஏற்பாடுகளைக் கச்சிதமாக செய்யும். இந்த தத்துவ உண்மையை அன்பழ கனின் மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள், சக ஆசிரி யர்கள், மாணவர்கள் அனுபவித்து உணர்ந்திருப்பார்கள். அன்பழகனின் ஆத்மாவின் ஸ்பரிசத்தை அனுபவித்த அவர்கள் அன்பழகன் என்றும் தம்மோடுதான் உள்ளார் என்பதை உணர்ந்து ஆறுதல் அடைய வேண்டும். அதற்கான உளவல்லமையை ஆண்டவன் அவர்களுக்கு அருள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். இந்து ஆரம்பம் பாடசாலை அறிவிப்பாளராக...



யா/ செட்டித்தெரு மெ.மி வித்தியாலய ஆசிரியர் தரவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பழகன் எங்களுள் பலரின் பிள்ளைகளின் எதிர்காலத்துக்கு அத்திவாரமிட்டவர். அவர் இட்ட அத்திவாரத்தில் நிமிர்ந்து நிற்போர் ஏராளம். அத்தகையதொரு மனிதரின் பிள்ளைகளின் எதிர்காலத்துக்கு தேவைப்படும் வகைகளில் கைகொடுப்பதற்கும் வழிகாட்டுவதற்குமான ஏற்பாடுகளை இயற்கை நிச்சயம் செய்திருக்கும் எனும் நம்பிக்கை எனக் குண்டு. அந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் பயனுறுதியாக அமையவும் அன்பழகனின் ஆத்மா நித்தியப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறவும் இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் சி.சிறிசற்குணராசா**
கணிதவியல் பேராசிரியரும் துணைவேந்தரும்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எழுதரிது முன்னம் எழுதிய பின்னர்
பழுதறவா சிப்பரிது பண்பாய் - முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தானந் நிலை.

- **ஔவையார்** -



எழுதுவது அரிதான செயல்
எழுதியபின்னர் அதைத் தவறின்றி வாசித்தல் அரிது.
வாசித்தாலும், பண்புடன் அதை முற்றவும் கற்றல் அரிது.
கற்றாலும் நற்பயனைக் காணல் அரிது.
கண்டுவிட்டாலும் அந்நிலையில் தளராமல் நிற்கும்
மனவலிமையோடு இருப்பது அரிதினும் அரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திரமாய் நம் தமிழுக்கோர்
## பாத்திரமாய் தான்திகழ்ந்த ஆசிரியரே
# அன்பழகா மறைந்தனையோ
# நினைவு கூர்வோம்...



புலமைப்பரிசில் பரீட்சைக்கோர் பாலமாகி
பலம் மிகுந்த பாதையிலே மாணவரை வழிநடத்தி
நலம்செறிந்த வெற்றிகளை நம்மவர்க்காய் ஆக்கிவிட்ட
நிலத்திலுயர் அன்பழகா மறைந்தனையோ நினைவு கூர்வோம்.

நினைவோடு கனவெல்லாம் மாணவரின் சிறப்பாகி
தனையறுத்தே மாணவத்தை மேன்மையுற வழிகாட்டி
முனைப்போடு யாழ்மண்ணில் வரலாறு படைத்திட்ட
இணையில்லா அன்பழகா மறைந்தனையோ நினைவு கூர்வோம்.

பிள்ளைகளின் தரத்தினையும் குறையினையும் சீர்தூக்கி
உள்ளன்பால் பிள்ளைகளின் பெற்றோர்க்கு அதையுரைத்து
அள்ளக்குறையாத ஆற்றலினை ஊட்டிவிட்ட
வள்ளலே அன்பழகா மறைந்தனையோ நினைவு கூர்வோம்.

சுகதுக்கம் அனைத்தையுமே தனக்குமாய் தானாக்கி
அகத் தூய்மையோடதை அனைத்திலுமே கடைப்பிடித்து
மிகச்சிறப்பாய் பொற்றோரின் பிள்ளைகளுள் கலந்திருந்த
தகவுடைய அன்பழகா மறைந்தனையோ நினைவு கூர்வோம்.

மகளோடு மகனார் படித்துயரும் உறவாகி
அகத்துணையாள் பிறந்தவூர் பிறந்துமோர் பேறாகி
சகவாழ்வு வாழ்ந்தெங்கள் நலனுக்காய் பாடுபட்ட
செகம்புகழும் அன்பழகா மறைந்தனையோ நினைவு கூர்வோம்.

ஆத்மீகத் தொடர்பொன்றை எமக்குள்ளே உருவாக்கி
சாத்வீகப் பாதையிலே சரித்திரங்கள் பல படைத்து
காத்திரமாய் நம் தமிழுக்கோர் வரலாறாய் தான் திகழ்ந்த
ஆசிரியரே அன்பழகா மறைந்தனையோ நினைவு கூர்வோம்.

மறைந்த ஆசிரியர் அவர்களை நினைவு கூரும்
**திரு. சி.சதீஸ்தரன்,**
மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பொளி கல்வியக கற்பித்தலின் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு, பண்பு, அறிவு கொண்டவன்
# மனித வடிவில் தெய்வம்



அன்பழகன் என்ற பெயர் அகிலத்தின் அறிவின் ஊற்று
அவ்வூற்றின் பெயர் இன்று அன்பொளி.
இனிப்பும் பேனாவும் புதிய பணநோட்டும்
பரிசாக வழங்கி அன்று திருநெல்வேலி சிவன் அம்மன்
வீதி கல்வி நிலையத்தில் எம்மைப் புன் சிரிப்புடன்
கற்பித்து கல்வியாளன் ஆக்கினீரே!

எம்முடன் அன்பைச் சொரிவதில் அன்பழகனாய்
நல் அறிவைப் புகட்டுவதில் அறிவழகனாய்
கண்களால் பேசி மகிழ்விப்பதில் கண்ணழகனாய்
இனிமையான சொற்களைப் பேசுவதில் இன்பழகனாய்
வகுப்பறையில் கற்றல் செயற்பாடுகளால் கல்வியழகனாய்
மாலையில் நாம் கிரிக்கெட் விளையாட எமக்கு ஏற்ப
பந்து வீசும் ஆண் அழகனாய்
மொத்தத்தில் ஒரு குருவிக் கூடாய் இருந்தோம்.

ஒன்று மட்டும் உண்மை மீண்டும் ஒரு கல்விப்
புகழ் அழகானாய் பூமியில் ஜனனம் எடுப்பீர்!
அப்போது பார்புகழ் உமது பிள்ளைகள்
கல்வியாளர்களாகத் திகழ்வதைப் பார்த்து
மாலை போடக் காத்திருப்பீர் என்பதும் உண்மை.

உயிர் என்பது உன்னுள் வாடகைக்கே
தங்கியுள்ளது, காலம் முடிந்தவுடன்
நீ பணம் கொடுத்தாலும் தங்க வைக்க
முடியாது, என்ற கசப்பான உண்மையை
ஏற்று ஆறுதல் அடைகிறோம்.

ஓம் சாந்தி!

உம்மோடு பயணித்த,
**திரு. சிவகுமார் மேகலாதன் குடும்பத்தினர்**
பிரதி முகாமையாளர்,
மக்கள் வங்கி, சங்கானை.
(டச்சு வீதி, சித்தன்கேணி) அகில இலங்கை சமாதான நீதவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SIVAPOOMI TRUST
## சிவபூமி அறக்கட்டளை

Head Office : Sivapoomi
Kondavil East,
Kondavil.
E_mail: sivapoomi@gmail.com
Web:- www.sivapoomi.org
T.P No: 021 2227938



# மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

**செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனை உரை**

இறைவன் படைத்த இனிய பிறவி. புகழின் உச்சிக்குச் சென்ற ஆசிரியர். பல்லாயிரம் மாணவர்கள் அகத்தில் வாழும் ஆத்மா... இப்படி எத்தனையோ அவரைப்பற்றி அடிக்கிக்கொண்டே போகலாம்... என் செய்வது அன்பழகனின் பிரிவு என்பது யாழ். குடாநாட்டை ஏங்க வைத்துவிட்டது. எல்லாப் பருவத்தினரும் அழுத காட்சி மறக்க முடியாது.

பல வருடங்களாக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைப் பெருமைப் படுத்திய சாதனையாளராக மட்டுமன்றி, ஏனைய பாடசாலை மாணவர் களையும் சாதனை படைக்க வைத்த நிபுணன். ஆடிப்பாடி ஆனந்தமாக வகுப்பை நடாத்தி தன் பெருமையை நிலை நாட்டிய ஒரு வித்தகனை இனி எங்கே சந்திப்போம். தனது வித்துவத்தால் எத்தகைய உயர்பதவி வகித்தவர்களையும் தன் கல்விச்சாலை வாசலிலே காத்திருக்கச் செய்த கல்வியலாளன் அன்பழகனிடம் பிள்ளைகளை ஒப்படைத்தால் போதும் என்று பெற்றவர்கள் அனைவரும் நாடி ஓடி வரவைத்தாய்.

எல்லாமே கண்ணூறு பட்டது போல் கதை முடிந்ததே. அன்பழகனே ஆறுதல் கொள்வாய் மகேன. உனது ஆற்றல் விண்ணுலகத்துக்கும் தேவைப்பட்டுவிட்டது. எம் மண்ணில் ஏதோ தவக்குறைவு.. உன்னைப் பாதி வயதில்.... இழந்து விட்டோம்.

அன்னாரின் மனைவி பிள்ளைகள், உறவுகளுக்கு இறையருளால் ஆறுதல் கிடைக்கப் பிரார்த்தித்து, அன்பழகனின் ஆத்மா இறையடியில் நிரந்தர நிம்மதியடையப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறுதிருமுருகன்**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருவினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பால் வசமாகா இதயம் எது?





தரம் 05 ஸ்கொலசிப் சுப்பர் ஸ்டார் என்றுதான் அவனை அடிக்கடி அழைப்பேன். தமிழ்க்கல்வி உலகின் புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளி அன்பழகனின் கற்பித்தலிலும் தங்கியிருந்தது. கடந்த பல ஆண்டுகளாகப் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் அன்புவின் வழிப்படுத்தல்களைப் பெற்றனர். மாணவர்களுக்கு மாத்திரமல்ல ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் பலருக்கும் அவன் வழிகாட்டி என்பதை அறிவேன். அதனால்த்தான் அவன் சுப்பர் ஸ்டார்.

அன்பழகனுக்கும் எனக்கும் ஆன உறவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அவனது பாடசாலைக் காலத்தில் மட்டுவில் வளர்மதி கல்வி நிலையத்தில் அவன் என் மாணவன். நான் அவனுக்கு விஞ்ஞான ஆசிரியர். அதன் பின்னர் தென்மராட்சி இடப்பெயர்வின்போது புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் உடன் கற்பித்த ஆசிரியன். அன்பொளி ஸ்கொலசிப் வகுப்பு முயற்சிகளில் என்னை மேடையேற்றி வாழ்த்துப் பெறும் பிரியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கொலசிப் வகுப்பு நிறைவு நாள் என்றாலென்ன வெற்றி விழா என்றால் என்ன தியாகலிங்கம் சேர், ஞானகாந்தன் சேர், ஈஸ்வரன் சேர், நான் என வழமையாகப் பிரசன்னமாக வேண்டிய விருந்தினர்களாக எழுதப் படாத விதி ஒன்றைப் பேணிவந்தான். தன்னை ஏற்றி வைத்த ஏணிகள் என்று தன் பிள்ளைகளுக்கு எங்களை அறிமுகம் செய்வான். அந்த நேரத்தில் அன்புவுக்கு கற்பிக்க என்ன தவம் செய்திருந்தேன் என நான் வியந்ததுண்டு.

விஞ்ஞானத் துறையில் பயின்று ஆரம்பக் கல்வி ஆசிரியராகிய சிறப்பு அன்பழகனுக்கு உண்டு. அந்த விஞ்ஞானக் கல்விக்கான ஈடுபாடு என்னால் ஏற்பட்டது என்பது அன்பழகன் எனக்கு வழங்கும் மதிப்பு மொழி. அத்துடன் பின்னாளில் நான் தமிழ்த்துறைக்குள் சென்றமையும் எனது கலை ஈடுபாடுகளும் எம் இருவருக்கும் இடையிலான உறவுப் பிணைப்பை இறுக்கமாக்கிற்று.

இதைவிடப் பாடுதல், ஆடுதல் கைவினை என அனைத்திலும் சிறப்புத் தேர்ச்சி அன்பழகனிடம் உண்டு. இதனால் பிள்ளைகளை ஈர்க்கும் இனம்புரியாத கவர்ச்சி அன்பழகனிடம் மிகுந்திருந்தது.

எந்தவொரு விடயத்தையும் சலிப்பின்றி நேரம் செல்வது தெரியாமல் அத்தனை பேரையும் ஈர்த்து வைத்துக் கற்பிப்பதில் அன்பழகனுக்கு நிகர் அன்பழகன்தான்.

அன்பழகன் மூலம் பலர் நன்மை பெற்றனர். தொழில்வாய்ப்புப் பெற்றனர். அத்தனைபேருக்கும் அமுதசுரபியாக வாரி வழங்கும் கருணைக் குணத்தை நான் அவனிடம் தரிசித்துள்ளேன்.

நோயுற்று இருந்த வேளையிலும் தனது கற்பித்தல் பணியைக் குறைவின்றி மேற்கொள்ள வேண்டும் என்ற வேட்கை அன்பழகனிடம் இருந்தது. இதனால் தனது வாழ்வின் கடைசி நேரம் வரைக்கும் கற்பித்தலை நேசித்தான். கொவிட் தாக்கத்தின் போதும் சூம் மென்பொருள் வாயிலாக அன்பழகனின் கற்பித்தல் தொடர்ந்தது.

எங்கள் மண்ணில் ஆரம்பக்கல்விக் கற்பித்தலுக்கு முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்க ஆசிரியர் என்றால் நான் உரத்து உதாரணப்படுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது அன்பழகனைத்தான். அன்பொளி நிறுவனத்தில் மாத்திரமல்ல தான் கற்பித்த பாடசாலைகளிலும் பெரும் எண்ணிக்கையில் மாணவரைச் சித்தியடையச் செய்து பெருமை பெற்றான்.

கற்பித்தலில் புதுமைகளைப் புகுத்தும் வேட்கை அன்புவிடம் இயல் பாகவே மிளிர்ந்தது. இதனால் பலரும் கற்றலுக்கு விரோதமாகக் கொள் ளும் சினிமாக் காட்சிகள் மற்றும் பாடல்களைக் கற்றலுக்குச் சிநேகமாக அமைத்துக் காட்டினான். உவமை, உருவகம், இரட்டைக் கிளவி, இணைமொழி, அடுக்குத் தொடர் என யாவும் கனகச்சிதமாகச் சினிமாப் பாடல்களால் பிள்ளைகளிடம் உதாரணப்படுத்தினான்.

கற்பித்தல் பாணி என்று அடையாளப்படுத்தும் போது அன்பழகனது பாணி என்பதுவும் தனித்துவமான - பிள்ளை நேயக் கற்பித்தலாகவே அடையாளப்படுத்தப்படும். அவன் ஊக்கப்பரிசாக வழங்கிய பத்து ரூபா நோட்டை மாணவப் பருவத்தில் பெற்று இன்றும் பத்திரமாக வைத்திருக்கும் மருத்துவர்களை எனக்குத் தெரியும்.

விதி யாரைத்தான் விட்டது. இன்று அது தனது வலிமையை உறுதிப்படுத்திவிட்டது. இன்னும் வாழ்ந்து சாதிக்க வேண்டியவனை அது தன்வசப்படுத்திவிட்டது. விதியை நொந்து கொள்வதைத்தவிர எங்களாலும் என்ன செய்துவிட முடியும்?

அவனது இறுதி அஞ்சலி நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய நேரம் இந்த உணர்வே என்னுள் மேலெழுந்து நின்றது.

அன்பழகனின் நேசிப்பை முன்னுதாரணமாகக் கொள்வோம். சிரிப் பால் வசியம் செய்யும் சீரிய நல்லாசிரியன் அவன். அன்புவின் புன்ன கைக்கு வசமாகா இதயம் எது?

அவன் உருவாக்கிய ஆளுமைகள் ஊடாக அன்பு எம்மிடையே வாழ்வான்.

செந்தமிழ்ச்சொல்லருவி **சந்திரமௌலீசன் லலீசன்**
பிரதி முதல்வர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் அழுதிட மௌனித்த "மாமனிதன்".



ஒவ்வொரு மனிதனும் மனிதப் பண்பினனாக வாழ்தல் என்பது விதிமுறை. அத்தகைய பண்பின் இயல்பினனாக வாழாத போது அவன் மனித வடிவமுடையவனாயினும் பண்பு ரீதியில் மனித குலத்தைச் சார்ந்தவனாகக் கொள்ளலாகாது. இன்றைய சூழல் வாழ்வியல் தடங்களை மறந்து தேவையற்ற விடயங்களில் நாட்டம் கொண்டு செயல்வழி தடம் மாறி தம்மையும் சூழலையும் குழப்படையச் செய்து கொண்டு உள்ளன. இத்தகைய சூழலில் மனிதனைத் தேடிக் கொண்டு, செல்ல வேண்டியுள்ளது. ஒவ்வொரு உயிர்க்குள்ளும் இறைவனின் வியாபகம் செறிந்திருக்கின்றது. அத்தகைய எண்ணம் நிறைவாக, மனதில் கொள்வோர்கள், உடலையும் உயிரையும் அன்பு, கருணை, பாசம் என்பவற்றால் சுத்தம் செய்து மனிதனும் தெய்வமாகலாம் என்ற மகா வாக்கியத்திற்கேற்ப சமூக நோக்கோடு செயற்படுவார்கள்.

இத்தகைய பண்புடையாளர்களே மறைவுகளின் பின்னும் மனங்களில் அழியாது வாழ்ந்து கொண்டிருப்பார்கள். ஒவ்வொருவரின் வாழ்வியலிலும் இத்தகையவர்களின் சந்திப்புக்கள் ஏற்படும் போது உள்ளத்து உணர்வுகள் வலுப்பெற்றனவாகவும், புதியதோர் உலகத்தில் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசிப்பதாகவும் தோன்றும். இதனை நேரில் அனுபவம் மூலம் சந்தித்துத் தெளிந்தவன் என்ற வகையில் காட்சிப்புலங்களை விரியச் செய்து கல்விப் புலத்தில் கருத்தொருமித்து வழி நடத்திய சித்திரத்தை நெஞ்சிடை ஏற்றி நினைவுகளால் தெப்பமிட்டுச் சுமந்துகொண்டிருக்கின்றேன்.

ஏறக் குறைய நாற்பது ஆண்டுகள் கல்விப் பணியில் பயணித்தவன் என்றவகையில் கல்வி வழங்கலில் தெளிவான பண்பான ஆசிரியர்களைத் தேடியிருக்கின்றேன். ஆசிரியர்கள் இறைவனால் படைக்கப்பட்டவர்கள் என்பது தொன்றுதொட்டு வந்த மரபு. அவர்களின் கடமையும் சமூகம், சார்ந்ததும், ஏணி போல் ஏற்றி வைக்கும் திறன் சார்ந்ததும் ஆகும். கற்றலானது கற்போனின் ஊக்கலில் செல்வாக்குறுகின்றது. அதனை மேம்படுத்தும் ஊக்கியாக விளங்குபவன் ஆசிரியன். அந்த வகையில் யான் கண்ட ஆசிரிய மணிகளுக்குள் நடுநாயகமாக ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தவன்தான் வேலுப்பிள்ளை அன்பழகன் ஆசிரியர் என்றால் மிகையாகாது.

பிஞ்சுமனம், பெயருக்கேற்ற அழகன், அன்பு, கனிவு, பரிவு ஆற்றல்களால் விஞ்சி நிற்கும் உள்ளம். சினம் கொள்ளா செம்மல். கல்வியுலகில் கரைகாணா காருண்ணியன். சிறந்த எழுத்தாளன், கவிஞன், மொழி நடையாளன், கல்வியை இனிக்கக் குழைத்து ஊட்டும் அருளாளன். பாடல் ஆடல், சித்திரம், பேச்சுக்களில் வல்லவன், பண்பால் தெய்வீகமானவன். கொடுத்துச் சிவந்த செம்மையாளன். தேடி வருவோரின் ஐயங்களுக்கு விளக்கமளிப்பவன். மாணவர் நேயம் தொடர தொடர்பிலிருப்பவன். ஆசிரியர்களின் வாஞ்ஞைகளுக்கும் அவர்களின் வாண்மை விருத்திக்கும் நம் மண்ணில் காரண கர்த்தாவாக விளங்கியவன்.

மிக இளமைக்காலத்தில் தாயை இழந்த தவிப்பில் வளர்ந்தவன். சகோதரர்கள், சுற்றம், உறவுகளில் கருணையோடு வாழ்ந்தவன். வாழ்க்கைப் பயணத்தில் “கவிதா” கை கொடுத்தபோது அவனது புதிய வாழ்க்கை உதயமாவதைக் கண்டு உலகமே பூரித்து நின்றது. பூவாய், நறுமணமாய், பூரிப்பாய் ஆரம்பக் கல்வியுலகில் கற்பித்தலில் புதுப்புது யுத்திகளையும் மாற்றங்களையும் உருவாக்கி வெற்றித்தடம் பதித்தவன். ஒரு பெரிய கோட்டினை அழிக்காது சிறிய கோடாக மாற்றுவதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுரீதியான வழிமுறையை வகுத்துக்காட்டி வெற்றிக்கு வழிவகுத்தவன். மனைவி, பிள்ளைகளிடத்தே வலுவான பற்றுதலும் பரிவும், இப்படியும் ஒரு குடும்பம் என்று பேசுமளவிற்கு வாழ்ந்து காட்டியவன். தன்முனைப் பற்று தாராளமானமுடையோனாய் எல்லோருக்கும் இனியவனாக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும் அதனைப் போல் சென்ற இடங்களி லெல்லாம் தன் நினைவைப் பதித்துள்ளான்.

கல்வி மேம்பாட்டிற்கு எது மூலமோ அப்பணியை வினைத்திற னுடனும் விளைதிறனுடனும் அர்ப்பணித்து உய்வித்த பெருமையாளன். ஆசிரியர்கள் எத்தகு நிலைமாற்று வகிபாகங்களைக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றதோ அதற்கு மேல் தனது நடத்தை மாற்றத்தைக் கொண்டு விளங்கியவன். அவற்றைச் சிறு அளவிலேனும் தொட்டுச் செல்வதன் மூலம் வாசிக்கும் ஆசிரியர் உள்ளங்களுக்குப் பயனுடையதாக அமையும்.

01. மாணவரிடையே தரிசன நோக்கினை விருத்தி செய்து அதனை அடைவதற்கு அவர்களை இடையறாது ஊக்குவித்துள்ளார்.

02. மாணவர்களிடையே நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கொண்டி ருப்பதோடு உடன்பாடான மனப்பாங்குகளை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார்.

03. மாணவர்கள் அடையும் சிறுவெற்றிகளைக் கூட முதன்மைப்படுத்திக் கொண்டாடுவார்.

04. தனது நல் நடத்தையால் நட்பு, சகிப்புத்தன்மை, பண்புடமை, நெகிழ்ச்சி, ஜனநாயகப் பண்புகளைக் கொண்டு மாணவர்களை அரவணைத்துள்ளார்.

05. சுயவிளம்பரம், அங்கீகார எதிர்பார்ப்பு ஆகியவற்றை முழுமையாகத் தவிர்த்து பாடசாலை அணியில் ஒரு பொறுப்புமிக்க உறுப்பினராகச் செயற்பட்டுள்ளார்.

06. மாணவர் மன நிலைகளைப் புரிந்துகொண்டு அவ்வப்போது கற்பித் தலில் மாற்றங்களை உண்டுபண்ணி, அவர்களின் உள்ளங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சிப்படுத்தி கற்றலின் பால் ஈர்த்தவர் (ஆடல், பாடல், கதை, நடிப்பு)

07. பாடசாலைச் சமூகத்துடனும் பெற்றோர்களுடனும் பயனுள்ள இடை வினைகளை என்றும் மேற்கொண்டு வந்துள்ளார்.

08. மாணவரின் கற்றலுக்கும், பூரணவிருத்திக்குமான வகை கூறலைக் கொண்டிருந்தார்.

09. க.பொ.த. (உ/த) விஞ்ஞானம் கற்று ஆரம்பக் கல்வி ஆசிரியராக வந்தது முதல் தனது வாண்மை விருத்தியியில் கோலோச்சி கலைப்பட்டதாரியாக, பட்டப்பின் கல்வித் தகைமையாளராக முதுகல்விமாணியாகத் தம்மை வளர்த்துக் கொண்டதோடு எந்நிலையிலும் தனது கற்பித்தலில் தாக்கமேற்படாது புதுமையுடன் நடைபயின்ற பண்பாளன்.

10) மாகாண கல்வித் திணைக்களம் வரை ஆரம்பக்கல்வி தொடர்பான புத்தாக்கச் சிந்தனைகளைப் பயனுடையதாக விதைத்தவன்.

11) அகில இலங்கை ரீதியில் பல்வேறு இடங்களிலும் தனது கற்பித்தல் நுட்பங்களைக் கருத்தரங்குகள் மூலமாகவும் புத்தகங்கள், வினாத் தாள்கள் மூலமாகவும் கையளித்தவர்.

12. கற்பித்தலில் மூன்று தடவைகள் தேசிய மட்டத்தில் "பிரதீபா" விருது பெற்றவர்.

13. எத்தகைய பாடசாலையிலும் கடமையாற்றிப் பணி செய்து வெற்றி கண்டவர்.

எல்லோருக்கும் நல்லவனாக எல்லோர் மனதிலும் ஆழமாக, வேரூன்றிப் பதித்த செம்மையாளன், "பரிபூரணம்" இறைவன். மனிதரிடையேயும் இத்தகு தன்மைகள் ஏற்புடையதாக அமைந்துவிடுகின்றன. அத்தகைய தன்மைகளை இவரிடத்தே ஆராய்ந்து பார்க்கையில் மனித நேயம் மிக்க சகல துறை ஆற்றலும் வலுப்பெற்ற கல்வியாளனாகக் காண்கின்றபோது அவன் இந்தப் பூமியில் ஒரு காட்சிப் பொருளாக மற்றவர்கள் கண்டு தம்மைத் தேர்ச்சிப்படுத்தும் பொருளாக நாற்பத்தேழு ஆண்டுகளே வாழ்வை நிலைப்படுத்திக் கையளித்திருக்கின்றான் என்று எந்தவொரு உள்ளமும் எண்ணிப் பார்த்திருக்கமாட்டாது. கொடுநோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைந்த, விதமறிந்து, குடும்பமும் நாமும் குலைநடுங்கி வேண்டாத தெய்வமில்லை. நோற்காத நோன்பில்லை. பாலகர் மூவர், மனையாள், சுற்றம் பதைக்கவிட்டுச் செல்லும் பண்பாளனல்ல. கண்மூடிவிடுவேன் என்று நினைத்துப் பார்க்காமலே முழுமையானாய். உன்னைக் காப்பாற் றத் துடித்த மருத்துவர்கள், மாணாக்கர்கள், சமூகத்தினர் எல்லோரை ஏமாற்றும் வகையில் காலைப் பொழுதில் வந்த தொலைபேசி அழைப்பு அழுகின்றோம். அழுகின்றோம் உன் பாச வலையில் சிக்கி உன்னோடு வாழ்ந்த கால சிந்தனையில் பரிணமித்த காட்சியை எண்ணி ஊர் கூடி அழுகின்றோமே! குடும்பத்திற்குத் தோன்றாத் துணையாய் இருந்து மனைவி, பிள்ளைகளின் உயர்விற்காய் உரமாய் இருக்கவும். உன்னுடைய ஆத்மா இறைவனின் நித்தியானந்த பெருவெள்ளத்தில் திளைக்கவும் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**திரு. வே. ஞானகாந்தன்,**
முன்னாள்
அதிபர் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை நிகழ்வின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய சேவையில்

# தன்னிகரில்லா தடம்பதித்த பண்பாளன்!





**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வான் உறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்."**

பிரிவு என்பது மிகப் பெரிய வலிமை கொண்டது. யார் மீது அதிக பாசம் வைக்கிறோமோ அது பிரிந்தவரை மட்டுமல்ல பாசம் வைத்த வரையும் உருக்குலைத்துவிடும். மனித வாழ்வின் தோற்றம் மறைவு, இன்பம், துன்பம் அனைத்தும் எமக்கு அப்பாற்பட்டவை. ஆயினும், பெறுதற்கரிய வாழ்க்கைக் காலத்தை நல்ல முறையில் தமக்கும், மற்றையவர்களுக்கும் நன்மை தரக் கூடியதாக வாழ்ந்தவர்தான் அன்பழகன் ஆசிரியர்.

அன்புக்க அழகனாகவே தம்மோடு பழகிய அனை வரிடமும், அன்பு, பண்பு, இனிமை, எளிமை போன்ற நற்குணங்களுடன் இடம் பிடித்தவர். பிளைப் பருவ மாணவர்களின் கற்பித்தல் கற்றலில் எமது நாட்டிற்கே தனி இடம் பிடித்து பெயர் பெற்றவர். புலமைப் பரிசில் பரீட்சைக்கான தயார்படுத்தலிலும் கற்பித்தலிலும் தனிச்சிறப்புப் பெற்றவர். தம்மிடம் கற்கும் ஆரம்பக் கல்விச் சிறார்கள் ஒவ்வொருவரின் உளநிலை அறிந்து அக்கறையுடனும் சேவை மனப்பாங்குடனும் அவர் களின் கற்றல் நிலையில் உயர்வு பெற வைத்து மன நிறைவடைந்தவர். எமது சமூகத் தின் சொத்தாக வலம் வந்த அன்பழகனை இன்று இழந்து நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடம் வருகின்ற மாணவர்களை நல்ல அறிவு சார்ந்தவர்களாக (அறிவு, திறன், மனப்பாங்கு) பெற்றோரிடம் கையளிக்க வேண்டும் என்ற மனவலிமை கொண்டு செயற்பட்டவர். அது மட்டுமன்றி தாம் கற்பித்த பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர்கள், மாணவர்கள், மற்றும் தமக்குள் கற்பித்த ஆசிரியர் போன்றோரையும் மதித்து நடக் கும் பண்புடையவர். பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளில் இணைந்து மகிழ்வோடும், அர்ப்பணிப்போடும் செயற்பட்டவர். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கடமை ஆற்றிய காலத்தில் அகில இலங்கையில் முன்னி லைப் பாடசாலையாக 5S, 6S யப்பான் கல்விச் செயற்றிட்டத்தில் அனைத்து ஆசிரியர்களுடன் இணைந்து பங்காற்றி யவர். இவரது காலம் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் ஒரு பொற் காலம் என்றே கூறலாம். நான் அதிபராகச் செயலாற்றிய காலத்தில் பாட சாலையின் வளர்ச்சிக்குப் பக்கபலமாக முன்னின்று உழைத்த உத்தமர்.

இவரது அர்ப்பணிப்பான சேவையும், தூய உள்ளமும் நாற்பத்தாறு (46) வயதுக்குள்ளேயே அனைத்துப் பேறுகளையும் பெற்று வாழ்வதற் கான சிறப்புக்களைப் பெற்றுக் கொடுத்தன. அன்புத் துணை வியாள் மூன்று ஆண் குழந்தைகளுடன் மகிழ்வாக வாழ்வாங்கு வாழ்ந்து வந்தவர்.

விதியைப் போல வலிவுள்ள ஒரு பொருள் உலகில் வேறு இல்லை. அவ் விதி மனிதனுடைய முயற்சிகளை எல்லாம் அழித்து முடிவில் வென்று விடுகின்றது என்பதை இவ்வாறான இழப்புக்களின்போது உணரமுடிகின்றது.

"ஒரு பொல்லாப்பும் இல்லை. எப்பவோ முடித்த காரியம்" என்ற யோகர்சுவாமிகளின் வாக்கின் வழி ஆறுதலடைவோமாக.

உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது. நாம் உள்ளவரை என்றும் எம் உள்ளங் களில் நிலைத்து நிற்கும். உமது ஆத்மா அமைதிபெற இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு. சு. தியாகலிங்கம்,**
ஓய்வு நிலை அதிபர்,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யா/ இந்து ஆரம்பப் பாடசாலை பரிசளிப்பு விழாவில் அதியர்களுடன் அன்பழகன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்மதியில் முளைத்த அறிவுநிறைமதி "அன்பழகன்"





வளர்மதியில் முளைத்த அறிவு நிறைமதி "அன்பழகன்" ஆற்றொணாத துயர்பகிர்வு. (பாரிஸிலிருந்து என்.கே.துரைசிங்கம்) பெற்றோர் சூட்டிய பெயருக்கு ஏற்ப வாழ்ந்து, அதற்கு அடையாளமாக அர்த்தம் தந்தவன்தான் அன்பு நண்பன் அன்பழகன்.அன்பின் வசிப்பிடம், அழகின் இருப்பிடம் அன்பழகன் என்றால் அது மிகையல்ல.பழகிய நாட்தொடக்கம் "அழகன்"என்றுதான் அவனை நான் அழைப்பேன்; பிறரிடம் பேசும்போதுகூட அதையே உச்சரிப்பேன்.உருவம் மட்டுமல்ல உள்ளமும் அழகு; செயல்களும் பழக்க வழக்கங்களும் அழகு. நடை, உடை, எடை என எல்லாமுமே அழகு. ஏன் அவன் கையெழுத்துக் கூட அச்சு போலவேயிருக்கும்.கள்ளம் கபடமற்றவன்.அதனால்தான் எங்கள் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கிறான். அவனது வசீகரமான வார்த்தைகள், தீர்க்கதரிசனமிக்க கருத்துகள், அழகியலோடு கலைநுணுக்க கற்பித்தல், நுண்ணறிவு ஆரம்ப கல்வி நிலை மாணவர்களிடத்தில் அவனைச் சேர்த்துள்ளது.கற்பித்தல் வடிவங்களில்,முறைமைகளில் அவன் கையாண்ட பண்புகள் மாணவ செல்வங்களுக்குப் பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதால் அன்பழகன் பின்னாலே அவர்கள் திரண்டார்கள். ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதற்கு அதிசிரத்தை எடுக்க வேண்டும்.மாணவரின் உளவியலைப் புரிந்து கொள்ள வேண்டும். அன்பழகன் அதனை தெரிந்து அதற்கும் மேலாக அவர்களில் ஒருவனாகி படிப்பிக்கும் வகையே தனியானது.பாடல்களை அபிநயத்துடனும், கதை களை ஆற்றுகையுடனும் அவன் நடத்திய வகுப்புகளில் மாணவர்கள் சித்தி பெற்றனர்.ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயனாளிகளானார்கள் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்"எமது முன்னோர்கள் கூறியதற்கு இணங்க ஆசிரிய சமுதா யத்தை நாம் வணங்க வேண்டும். மாதா பிதா குரு என எமது பெற்றோர் களுக்கு நிகராக ஆசிரியர்களுக்கு உரிய இடம் முன்னோர்கள் வழங்கி யுள்ளனர்.அன்பழகன் போன்ற ஆசிரியபெருந்தகைகளும் அப்படித்தான் போற்றப்படுகிறார்கள்.அன்பழகன் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி உரைகளை நிகழ்த்திய அனைவருமே அவனது கல்விப் பணிகளை வியந்து விதந்து உரைத்தனர்.பட்டதாரிகள், பேராசிரி யர்கள், புத்திஜீவிகள் பலரது பிள்ளைகளும் அன்பழகனின் மாணவர்கள் என்பதனால் அவர்கள் ஆழ்ந்த துயரத்துடன் அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாண சமூகம் கல்விக்கு முன்னுரிமை அளிப்பவர்கள். அத னால் பல புலமையாளர்கள், சிந்தனையாளர்கள், கல்வியாளர்கள் உரு வானார்கள்.ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையிலிருந்தே தமது எதிர்காலச் செல்வங்களைச் செப்பனிடத் தொடங்குவார்கள். அதனால் இதனைப் பெரும் சவாலாக எதிர்கொள்வார்கள். இந்த பரீட்சைக்காக மாணவர்களை தயார்ப்படுத்தி வெற்றிச் சிகரத்தை காட்டியவன் அன்பழகன் அரச பாடசாலைகள்,தனியார் கல்வி நிலையங்கள் என எங்கும் அன்பழகன் உச்சாடனம் செய்யப்பட்டான்.பத்திரிகைகளிலும் அன்பழகன். மாதிரி வினாத்தாள்கள் வெளியிடப்பட்டன. அத்துடன், அன்பு வெளியீடு என அவனின் வெளியீடுகள் மாணவ சமுதாயத்திடம் சென்றது; மாற்றத்தை ஏற்படுத்தியது. மாணவர்கள் ஏற்றம் பெற்றனர். அன்பழகன் கல்விப்பாரம்பரியம் குடும்ப பின்னணியில் இருந்து ஆரம்பமாகிறது சகோதரங்கள், மைத்துனர்கள் என கல்விப்பணி புரிபவர்கள்; அவனது சுற்றாடல், உறவுகள் என எல்லோருமே கல்வியில் பயணிப்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் சார்ந்த வளர்மதி சனசமூக நிலையம் தன்னார்வத்துடன் வளர்மதி கல்வி நிலையம் அமைத்து தரமான கல்வியை மாணவர்களுக்கு ஊட்டிவந்தனர். அதில் விதையிட்டு முளைத்து பெருவிருட்சமானவன் தான் அன்பழகன்.

அழகனுடன் உருவான நட்பு நான் நாடு கடந்த பின்னர் தொடர முடியவில்லை; ஆனாலும் அவனுடைய செயற்பாடுகள் எல்லாம் அறிவேன். அதுபோல என்னைப்பற்றியும் அவன் அறிந்து கொண்டேயிருப்பான். அவன் உடல்நிலை பாதிக்கப்பட்ட தகவல் வந்த போது சுகமடைவார்தானே என்றிருந்தேன் நாளடைவில் பேரிடியான செய்தி கிடைத்தபோது ஒரு கல்வியாளனை இழந்துவிட்டோமே என ஏங்கித் தவித்தேன். ஒரு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு. அவனது புன்னகை தவழும் உதடு பொன்பூச்சொரியும் முக அழகு, அரிசிப்பல வரிசை, குமிழ் மூக்கு, வார்த்தெடுத்த சொர்ணவிக்கிரகம் போன்ற அழகு எல்லாம் கண்முன்னே விரிகிறது. அழகன் பிரிவுத்துயரில் மூழ்கியுள்ள அவனது திருமதி ,பிள்ளைகள் மற்றும் உறவினர் துயரத்தில் பங்கெடுத்து கொள்கிறேன்.

ஆத்மா சாந்தி பெறுக.

**திரு. துரைசிங்கம் கோதன்**



"பேனாவும், எழுத்தும்
புத்தகமும் வாசிப்புமே
யுத்தத்திற்கும் - வன்முறைக்கும் எதிராக
நாம் தூக்கும் ஆயுதங்கள். "

**-நெல்சன் மண்டேலா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி ஊடக பங்களிப்பில்
## ஆசிரியர் *திரு. வே. அன்பழகன்*





மறைந்த ஆரம்ப கல்வி ஆசிரிய இமயம் என போற்றக்கூடிய தரம்5 புலமைப்பரிசில் புகழ் பூத்த ஆசிரியரான அழகன் அண்ணாவின் மறைவு வடக்கு கல்வி சமூகத்திற்கு வெகு விரைவாக ஈடுசெய்ய முடியாத ஒரு பாரிய இழப்பு ஆகும்.இந்த வகையில் இவரது 31ம் நாள் நினைவு நாளில் இவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்து கொண்டு இவரது கல்விச் சேவையில் இவர் ஊடகங்கள் ஊடாக ஆற்றிய பங்களிப்பு பற்றி நினைவு கூர்ந்து உறவினர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

என்னை விட இரண்டு வருடங்கள் மூத்த இவர். உயர்தர கல்வியின் பின்னர் மட்டுவில் வளர்மதி கல்வி நிலையத்தில் ஆரம்ப பிரிவில் சிறப்பாக கற்பித்து வந்தார்.எனது உயர்தர பரீட்சையின் பின் நானும் இவருடன் ஒரு வருடம் இணைந்து கற்பிக்கும் வாய்ப்பு கிடைத்தது.பின்பு நான் பல்கலைக்கழக கல்விக்காக 4 வருடங்கள் ஈடுபட இவருக்கும் ஆசிரிய நியமனம் கிடைத்து பயிற்சியும் முடிவடைந்திருந்தது. பின்பு நான் ஊடகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைக்கு தொழில் நிமித்தம் செல்ல இவர் மாவட்ட ரீதியில் பிரபல ஆசிரியராகத் தன்னைச் செதுக்கிக் கொண்டார். 2002ஆம் ஆண்டு தொடக்கம் இவருடன் ஊடகத்தின் ஊடாக பரீட்சை வழிகாட்டல்கள் எனும் விடயத்தில் இணைந்து பணியாற்றிய ரீதியில் கீழ்வரும் பெருமைகள் அன்பழகன் அண்ணாவைச் சேரும்

01. 2000 ஆம் ஆண்டுகளில் உதயன் பத்திரிகைக்கு அந்த நிறுவன ஆசிரியரின் வேண்டுதலின் பேரில் வாராவாரம் தரம் 5 மாதிரி வினாத்தாள்களைத் தொடர்ச்சியாகத் தயாரித்து வழங்கி வட மாகாணம் முழுவதும் உள்ள மாணவர் பயன் பெறவும் பத்திரிகை விற்பனை மேம்படவும் உதவி ஆசிரியர் இவராவார். இதில் பத்திரிகை ஆசிரியர் வித்தி ஐயாவின் பங்கும் அளப்பரியது

2. 2004 ஆம் ஆண்டில் இருந்து உதயன், சுடரொளி பத்திரிகையின் கல்வி பிரிவு பொறுப்பாசிரியராக நான் இருந்த போது இரண்டு பத்திரிகையும் இணைந்து வருடா வருடம் நடாத்திய தரம் 5 புலமைப் பரீட்சை வழிகாட்டல் நேரடி கருத்தரங்கில் எனது வேண்டுகோளின் பேரில் 15 வருடங்களாக மிக சிறப்பான முறைகளில் வளவாளராகச் சேவை அடிப்படையில் பங்குபற்றியவர். குறிப்பாக என்னுடன் நாடாள விய ரீதியில் 20 வளவாளர்கள் இணைந்து பணியாற்றிய போதும் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் அன்பழகன் ஆசிரிய ருக்குரிய கேள்வி உச்சமாகவே இருக்கும். புது பிரதேச மாணவர்கள் கூட அன்பழகன் என்றால் கருத்தரங்கு மண்டபத்தில் பூரிப்புடன் மகிழ்ந்து கற்க ஆர்வம் காட்டுவார்கள். நான்கூட இவரது கற்றல் உத்திகளை கவனிக்க அவரது மண்டபத்தையே கடமைக்காகத் தெரிவு செய்வேன்.

3. ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான புலமை சுடர் கையேட்டிற்காக தொடர்ச்சியாக 10 வருடங்கள் ஆக்கங்களை இலவசமாக தந்து உதவி தனது கற்பித்தல் சேவைகள் நாடு முழுவதும் கிடைக்கச் செய்தவர் .

4. பிற்பட்ட காலத்தில் வலம்புரி, தினக்குரல், காலைக்கதிர் போன்ற பத்திரிகைகள் மூலமும் வினாத்தாள் சேவை ஆற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. ஊடகங்கள் மூலம் கற்பித்தல் நுட்பங்களை நேர்காணல் மூலம் தெளிவுபடுத்தியவர்.

06. ஒட்டு மொத்தத்தில் அதிக சேவைகளைக் குறைந்த காலத்தில் ஊடகத் துறைக்கு வழங்கிய சாதனைக்குரியவர் அன்பழகன் ஆசிரியர் என்றால் மிகைஆகாது.

இப்படி சிறந்த சேவையாளராகத் திகழ்ந்த அமரர் அன்பழகன் இப்போதும் உயிருடன் இருப்பது போன்ற உணர்வே என்னிடம் உள் ளது. இவரது கற்பித்தல் சாதனையை கௌரவிக்கும் முகமாக இவருக்கு ஒரு கௌரவ பட்டத்தை யாழ் கல்வி சமூகம் ஊடாக வழங்க வேண்டும் என்ற எனது ஆதங்கத்தையும் தெரிவித்து மீண்டும் இவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை மன்றாடி எனது இரங்கலுரையை நிறைவு செய்கிறேன் .

**திரு. இ. ஜனதன்**
பிரதி முதல்வர்,
ஆசிரியர்,
யா/ மத்திய கல்லூரி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.



“ மனிதனுடைய முழுத் திறமைகளின் வெளிப்பாடே உண்மையான கல்வி ”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தலைமையுரை: வே. அன்பழகன், இயக்குநர்,
அன்பொளி கல்வியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள்
## "நினைவு அஞ்சலி"



*கண்ணிமைக்கும் காலத்துள்*
*காலனுமைக் கவர்ந்து*
*சென்றதேனோ?*

அரவணைத்த உம் பிரிவு அறிந்துள்ளம்
ஆறாத்துயரதனால் ஆறாய் கண்ணீர் பெருக
இனிய சொல், ஈகை, பண்பு என்று
அனைவரும் போற்றிட வாழ்ந்தீர்கள்
மற்றவர்க்கு உதவும் பண்பு கொண்டு
எல்லோரும் போற்றிட வாழ்ந்தீர்கள்
இறைவன் சந்நிதியின் அமைதியிலே
இனிமை காண இறையருள்
வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

கண்கள் கலங்குகிறதே காற்று வீச மறுக்கிறதே!
உம் மறைவுதனை எண்ணி- எம் நெஞ்சம்
வெடித்து விடும் போல் இருக்கிறதே
நேற்றுவரை வாழ்ந்த வாழ்க்கை- இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரை விட்டு போனதேனோ!
கதறி அழும் எமக்கு
யார் இனி ஆறுதல் சொல்வார்கள்?
கவலைகள் தீர கண்திறந்து பாராயோ?
நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ண மலர் வாசமென
எம் மனங்களிலே வீசிநின்றீர்
கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையெண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்.

**குடும்பத்தினர்**
**மனைவி, பிள்ளைகள், மாமா, மாமி,**
**மைத்துனர்கள், மைத்துனிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பழகனின் வகுப்பறைக் கற்பித்தலின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள்
## நினைவுகளில்

மழலைகளின் அறிவுக்கு
கைகொடுத்த நிறைமதி!





வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையில் தெய்வமாகிவிட்ட எம் ஆசானே

நீங்கள் மறைந்து நாள்காட்டியில் முப்பத்தொரு நாட்கள் ஆகிவிட்டது. ஆனால் நம் உள்ளத்தில் இருந்து நீங்கள் ஒரு துளியும் மறையவில்லை.

கல்வி என்னும் கடலில் மழலைகள் நீந்த பெரும் துடுப்பாய் இருந்தீரே காசுக்குதான் கல்வி என்று இருக்கும் இந்நவீன யுகத்தில் கருணையுடன் பல மழலைகளின் அறிவுக்குக் கைகொடுத்த நிறைமதியே உமது சேவை இவ்வுலகில் நிறைந்திருக்க காலனுக்குச் சேவை செய்யச் சென்ற நோக்கம் கல்வியின் வறுமை விண்ணுலகிலும் ஏற்பட்டதோ?

அன்புக்கும் அறிவுக்கும் ஆதாரமாய் விளங்கிய அன்பழகனே உம் ஆத்மா சாந்தி அடைய ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

**பாரதிபுரம் மக்கள் ஒன்றியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள்
## நினைவுகளில்....

**கற்கவைத்தாய் எம் கால்களில் நிற்கவைத்தாய்**
**இப்போ ஏன் கதற வைத்தாய்...?!**



அறிவுப் புலத்தில்
அதிகம்
அறியப்பட்ட நாமம்
அன்பழகன்.

அறிவானவர்களுக்குள் மிகவும்
அரிதானவராய் விளங்கிய ஒரே நாமம்
அன்பழகன்.

வினைத்திறன் மிக்க கல்வி வழங்கி
முதற்திறன் மிக்க மாணவர்கள் உருவாகக்
குருவானவர்தான் இந்த
அன்பழகன் என்கின்ற ஆசான்.

புலமைப் பரிசில் பரீட்சையிலேயே
அதிக திறமைச் சித்தி பெறுமளவிற்கு கல்வி
முறமையை வகுத்தவரும் இவரேதான்.

இலகுவான வழிகாட்டல்
இயல்பால் முழு
இலங்கைக்குமே முன்மாதிரியானார் இவர்.

ஐந்தெழுத்து மந்திரமாய்
யாழ் எங்கும்
ஐந்தாம் ஆண்டு பிள்ளைகள் ஏன்
பெற்றோரும்
எந்த நாளும் உச்சரித்ததே இந்த
அன்பழகன் பெயரைத்தான்.

நல்ல நிர்வாகி
நட்பிற்கு இனியவன்.
எல்லோருக்கும் உதவும்
எண்ணம் மிகுந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து பழகி
நெஞ்சில் ஆழமாய்
இடம்பிடித்த அன்பழகன் என்னும் இனிய நட்பு
விடைபெற்ற துயரிலிருந்து இன்னும்
விடுபட முடியவில்லை.

அன்பழகா! பலருக்கும் நீ இங்கே
கல்விக்கண் திறக்க வைத்தாய்.
யாரைத்தான் உன்னை மறக்க வைத்தாய்?

எல்லாமே கற்றுத் தந்தாய்.
நீயில்லாமற் போனால்
தாங்குவது எப்படி என்று
கற்றுத்தர மறந்து விட்டாய்?

நாம்
கற்காத பாடத்தைப் புகட்டியது
உன் மரணம் மட்டும்தான்.

கற்க வைத்தாய் .
எம் கால்களில் நிற்க வைத்தாய்.
இப்ப ஏன் கதற வைத்தாய்?

தடை தாண்டும் பரீட்சைகளில்
சாதிக்கச் செய்தாய். உந்தன்
உயிர்வாங்கும் நோயை ஏன்
சோதிக்க மறந்தாய்?

மறக்கப்பட முடியாத
ஒரே பெயர் அன்பழகன்.

பெயரில் மட்டுமல்ல
அவர் வாழ்வும்
அன்பும் அழகும்தான்.
நெஞ்சில் உன் நினைவை
நிலைக்க வைத்துப் பூசிப்போம்.

ஆத்மா சாந்திபெற இறைஞ்சுகிறோம்.
ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!

**DMI COMPUTER EDUCATION**

நிரோஜன், மயூரன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிகளுக்காய் ஏங்குகின்றேன்
## எங்கு சென்றீர்கள்...

**அழகு வதனமும் அன்பான**
**குணமும் கொண்ட அன்பழகன் ஆசிரியரே...**



தரிசாய் போயிருப்பேன்...
தாங்கள் பாரிசாய்....
வராமல் போயிருந்தால்

தரம் மூன்றில்
விதையாய் எனை எடுத்து
தண்ணீர் தெளித்து
உரமிட்டீர்கள்...

என் கையில் கல்வி வரமிட்டீர்கள்...
என் வாழ்க்கை செழிப்புற
ஆரம்பக் கல்விக்கு வித்திட்டீர்கள்....

தரம் ஐந்து “F” வகுப்பில்
செல்லரிக்காத் தங்கள்
சொல்லறிந்து, தங்கள் பேச்சறிந்து
அழகிய எழுத்தறிந்து.... கம்பீர நடையறிந்து
அன்பு அதட்டல் அறிந்து.... விளையாட்டு திறனறிந்து
கொடை தரும் மனமறிந்து
சுகயீனம் அற்றவேளை
வேதனை அடையும் பண்பறிந்து
புல்லரிக்கக் கண்டேன்....

சிரக்தையும் அன்பும் சேர்த்து
தாங்கள் எய்த அம்பு
இம்மியும் எடுக்க முடியாமல்
எம்மனதில் குத்தி நிற்கின்றனவே....
ஆ! சிறியவர் அல்ல
தாங்கள் என்றும்
எம்மனதில் தெய்வீக
ஆசிரியரே-
சிறப்பின் மறுசொல் நீங்கள்

அன்புக்குரிய மாணவன்
**உமாகரன் மேனாளனன்**
**5F (2003)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் / செட்டித்தெரு மெ.மி. வித்தியாலய கட்டட அடிக்கல் நாட்டும் விழாவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த ஆளுமை கொண்ட ஆசான்
## ஆசிரியர் திரு. வே. அன்பழகன்





மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் என்றோ ஒருநாள் இறப்பது நிச்சயமே. ஆனால் அவன் இவ் உலகிற்கு எதை விட்டுச் சென்றான். என்ன செய்தியை அவனது இறப்பு இவ் உலகிற்குச் சொல்கிறது எனப்தே நமக்குத் தேவையாகவுள்ளது. தன்னைப் பெற்ற தாய்க்கும், தந்தைக்கும், ஊருக்கும், சமூகத்திற்கும் நல்லவனாகவும் வல்லவனாகவும் வாழ வேண்டும் என்பதே நல்லோரின் அவாவாகும். அந்த வகையில், தனது குடும்பத்தவர்களுக்கும் தான் கற்ற பாடசாலைக்கும் கல்விச் சமூகத்திற் கும் நல்லவனாகவும், நல்வாழ்விற்கு உறுதுணையாக இருந்த மனை விக்கும் உற்ற கணவனாகவும் வாழ்ந்து தமிழ்ச் சமூகத்திற்கு நல்வழி காட்டியாகவும் நற்பணியினை வழங்கி முழு மனிதனாக வாழ்ந்து சிறப்பானப் பணிகளை ஆற்றி அமரத்துவம் அடைந்துள்ளான்.

ஆரம்பக்கல்வி ஆசானாக நியமனம் பெற்று குழந்தைச் செல்வங்க ளுடன் குழந்தையாகவே தன் வாழ்வை அர்ப்பணித்த ஓர் உத்தமன். ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவச் செல்வங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அரவணைத்து பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தார்.

பரீட்சை முடிவடைந்ததும் எப்போ பரீட்சைப் பெறுபேறு வெளியாகும் என்ற ஆர்வத்துடன் எதிர்பார்த்து பெறுபேறு வெளியாகும் என்ற ஆர்வத் துடன் எதிர்பார்த்து பெறுபேறு வெளியிடும் நாளன்று இரவு விழித்திருந்து அவற்றை விரைவாகவும் பெற்று வெளியிடுவதிலும் மாணவர்களுக்குத் தெரிவிப்பதிலும் ஆர்வமாக இருந்தவர்.

நாடு பூராகவும் தமிழ்மொழி மூல மாணவர்களுக்கு மாதிரி வினாக் களையும் வழிகாட்டி நூல்களையும் வழங்கியதோடு மட்டுமன்றி பல பாடசாலைகள் கருத்தரங்கு நடாத்துவதற்கு அழைத்த போது மறுப்பு எதுவும் தெரிவிக்காது திறம்பட நடாத்தி தேசிய மட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் பல சாதனைகளைப் பெற வழி செய்தவர். வசதி குறைந்த மாணவர்களை இனங்கண்டு அவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பல்வேறு உதவியினையும் வழங்கிய உத்தமர்களில் முதன்மையான வராகவும் திகழ்ந்தவர்.

அண்டி வருவோர்க்கு அரும்பசி தீர்த்து பொருள் உதவி நல்கி இன்பம் கண்டவர். நம் அனைவரதும் எண்ணத்தில் அமரர் ஒருஅறிவாளி. மனித நேயம் கொண்ட உத்தமர். சிறந்த ஆளுமை கொண்ட ஆசான். ஏழைக ளுக்கு என்றும் உதவும் பரோபகாரி. அத்தகையவர் இன்று எம்முடன் இல்லை. அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**திரு. பொ. அற்புதரூபன்**
ஓய்வு நிலை பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர்,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்புக்கு இலக்கணமாய்
## எம் நெஞ்சில்
# நிலைத்திட்ட நல் ஆசான்





நட்பிற்கு இலக்கணமாய்
பண்பில் தனித்துவம் மிக்கவராய்
பலரின் முன்னேற்றத்தின் பங்காளியாய்
கல்விப் பணியாற்றிட்ட நல்லாசான்
புன்சிரிப்பால் அரவணைக்கும்
ஆற்றல் மிக்க ஆசானாய்.

அன்பொளி கல்வியகம் தனில்
தனித்துவம் மிக்க நிறுவனராய்
பல ஆயிரம் மாணவர்களை
புலமைப் பரிசில் பரீட்சையிலே
சித்தி பெறவைத்த பேராசான்
என்று புகழோடு வாழ்ந்தீரே!

உதவி ஆசிரியர்களாய்
உங்களோடு இணைந்து பணி புரிந்த
பொன்னான நாட்களில்
உங்கள் தலைமைத்துவப் பண்பு
அன்பு நேர்மை இரக்கம் மகிழ்ச்சி...
எண்ணிப் பார்க்கின்றோம்.
இப்படி நல்ல மனிதரை நல் ஆசானை
இழந்திட்டோம் என்று,
ஏங்கித் தவிக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்,
**உங்கள் அன்பொளி ஆசிரியர்கள்,**
**உதவி ஆசிரியர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்திறன் ஆற்றல்கொண்ட
## ஆசான் திரு. வே. அன்பழகன்





"தோன்றிற் புகளொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிலும் தோன்றாமை நன்று"

என்பது வள்ளுவர் வாக்கு. அதற்கு இணங்க, அமரர் வேலுப்பிள்ளை அன்பழகனைத் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மூலம் நாடளாவிய ரீதியில் பிரபல்யமானவர்.

சின்னஞ்சிறுவர்களின் மனங்களிலே அழகியல் உணர்வோடு கனதியான விடயங்களையும் எளிமையாகப் பதிக்கக்கூடிய ஆற்றல் கொண்டவர். அல்லும் பகலும் புலமைப் பரிசில் பரீட்சைக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். பாடசாலை, கோட்டம், வலயம், மாகாணம் என்ற பல் மட்டங்களில் புலமைப் பரிசில் வினாத்தாள்களைத் தயாரித்து வழங்கு வதிலும் வளவாளராகவும் சிறப்பாகச் செயற்பட்டவர்.

ஆரம்பக் கல்வி ஆசிரியருக்கு இருக்கக் கூடிய பல்திறன் ஆற்றலைக் கொண்டவர். பாடல், ஆடல், வரைதல், விளையாடல், சமைத்தல், நகைச்சுவையாகக் கதைத்தல் போன்ற பண்பால் மாணவர்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பால் ஈர்க்கக் கூடியவர். கணீரென்ற கம்பீரமான குரலூடாக அடுக்கு மொழிகள் பேசி அரங்கை அதிர வைக்கும் நல்லதொரு அறிவிப்பாளர். கொஞ்சும் மொழி பேசி குழந்தைத் தனமாக மற்றவர்களுடன் அன்பாக, பண்பாக பழகுகின்ற பக்குவம் எல்லோரையும் கவரக் கூடியது. மற்றவர் களுக்கு உதவுவதில் பரோபகரியாக இருந்தார். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற அவா கொண்டவர். எதனையம் உற்று நோக்கி அவதானித்து அவர்களின் குணப் பண்புகளைக் கூறும் தன்மை கொண்டவர். நேர்த்தியான ஆடை தான் மட்டுமல்ல தம் மாணாக்கர்களும் அணிய வேண்டும், அழகாக இருக்க வேண்டும் என விரும்புபவர். பயிற்சியே உயர்ச்சி தரும் என முயற்சியுடன் வேலைகள் செய்வார்.

இத்தகைய பல்திறன் ஆற்றலைக் கொண்ட ஆசிரியர் திரு. வே. அன்பழகன் 2016 ஆம் ஆண்டு யா/ செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலையோடு தன்னை இணைத்துக்கொண்டு எம் ஆசிரியர் குழாத் தின் ஒரு செல்லப்பிள்ளையாக, மகனாக, தம்பியாக, நண்பனாக, இருந்து பல் பரிமாணங்களில் செயற்பட்டவர்.

இப்பாடசாலையிலிருந்து இரண்டு தடவைகள் "நல்லாசிரியர்" விருது பெற்றார். வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டு சந்தோசமாக இருந்தார். காலம் செய்த கோலம் என்னவோ இளவயதிலே பிஞ்சுக் குழந்தைகளையும் மனையாளையும் தவிக்கவிட்டு வேண்டா மனத் தோடு சிவகதியே தஞ்சமென அடைந்த அன்பழகனின் துணைவி யாருக்கும் அவரது குழந்தைகளுக்கும் இறைவன் துணையாக நின்று ஆறுதல் அளிப்பாராக.

ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**திருமதி க. சிவராஜா,**
அதிபர்,
யா/நல்லூர் ஸ்தான்சி சி.த.க. பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனத்த இதயத்துடன்
## கண்ணீர் அஞ்சலிகள்





அமரர் வேலுப்பிள்ளை அன்பழகன் அவர்களுடைய ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கின்றேன். அன்பழகன் பெய ருக்கு ஏற்ற பண்புகளுடன் வாழ்ந்து காட்டிய ஒருவர். அவரது சிறந்த பண்புக ளைக் கூற நாட்கள் போதாது. அன்பும், அழகும் நிறைந்த பண்பு களை சிறுவர் முதல் பெரியோர்கள் வரை நன்கு அறிந்திருப்பார்கள். இப்பேறா னது எல்லோருக்கும் அமைந்துவிடாது.

யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் புகழை உயர்த்தி எல்லோரை யும் யா/ யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையை நோக்கச் செய்த புகழ் பூத்த ஆசிரியர்களில் தலை சிறந்த தலைமகனாக அன்பழகன் திகழ்ந்தி ருந்தார். அவரது அர்ப்பணிப்பான சேவைகளை அவரோடு பணியாற்றிய அதிபர், ஆசிரியர்கள் இன்றும் பசுமையான நினைவுகளாக மீட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆரம்பம் முதல் அவருடன் பழகி வந்தாலும் 2014 ஆம் ஆண்டிலி ருந்து நெருங்கிப் பழகுவதற்கும் சிறப்பாகப் பணியாற்றுவதற்கும் இறைவன் பணித்திருந்தான். அதாவது யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் 2014 ஆம் ஆண்டு அன்பழகன் ஆசிரியர் இடமாற்றம் பெற்று வந்து அர்ப்பணிப்போடும் ஆர்வத்துடனும் பணியாற்றத் தொடங்கிய அந்த நினைவுகள் மறக்க முடியாதவை.

தான் கடமையேற்ற பாடசாலையில் நிர்வாகக் கட்டமைப்போடு சேர்ந்து பாடசாலையின் புகழையும், பெருமையையும் உயர்த்துவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயராது பாடுபட்டார். இவர் மாணவர்களிடத்தே மிகுந்த அன்பு கொண்டவர். அவர்களின் வீட்டுச் சூழல்களையும் தனியாள் வேறுபாடுகளையும் நன்கு அறிந்து பணியாற்றியதோடு உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு தனது நிதியிலிருந்து அவர்களது கற்றலுக்கு உதவிகள் செய்து வந்தார்.

அன்பழகன் மாணவர்களுக்கு மட்டும் ஆசிரியராகத் திகழவில்லை; ஆசிரியர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியுள்ளார். தன்னிடம் உள்ள கற்பித்தல் நுட்பங்களைத் தன்னோடு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களது ஆற்றல்களையும் வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டுள்ளார்.

எப்போதும் பாடசாலைச் சூழலை அழகாகவும் மகிழ்வாகவும் வைத்திருக்க விரும்புபவர். மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி அவர்களை கற்றலில் ஊக்கப்படுத்தி அவர்களின் உயர்வில் மகிழ்வுற்றார்.

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் மூன்று ஆண்டுகள் தனது சிறப்பான சேவைகளைச் செய்து அப் பாடசாலையின் உயர்வுக்கு அடியெடுத்துக் கொடுத்தவர் அன்பழகன் ஆசிரியராவார். அவரது கற்பித்தல் உத்திகளை இன்றும் பலர் பின்பற்றி சிறந்த ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அமரர் வேலுப்பிள்ளை அன்பழகனது அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் பணியாற்றிய காலப்பகுதியிலேயே சிறந்த ஆசிரியருக்கான “குரு பிரதீபா” விருதை மத்திய கல்வி அமைச்சிடமிருந்து பெற்றுக் கொண்டதுடன் தொடர்ந்தும் பல விருதுகளைப் பெற்றிருந்தார்.

அமரர் வேலுப்பிள்ளை அன்பழகனது நினைவுகளைத் தாங்கிவரும் மலருக்கு எனது கனத்த இதயத்துடன் பசுமையான நினைவுகளை மீட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி!!!

**திரு. பே. தனபாலசிங்கம்.**
அதிபர் யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த
## எங்கள் **அன்பழகன்** ஆசான்



அன்பு பாதி
அழகு மீதி என - கல்வியில்
பூரண நிலவாய் ஒளி தந்த
எங்கள் அன்பழகன் சேர்

நாம் இப் பூமியில்
ஜனனம் ஆகிய நாள் முதல்
அள்ளி அரவணைத்து
அன்பு தந்து ஆனந்தம் அடைந்தீர்கள்.

பருவம் பார்த்துப் பயிர் விதைப்பது போல்
உற்ற பருவமதில்....
எம் பிஞ்சு விரல் பிடித்து
அகரம் சொல்லி எழுத வைத்தீர்கள்.

ஆண்டுகள் ஓட ஓட....
கல்வி எனும் மூன்றெழுத்தைக்
கற்கண்டாய் இனிக்க வைத்த
தெய்வம்தான் நீங்கள்

ஆடலா, பாடலா, அபிநயமா,
விளையாட்டா, போட்டி நிகழ்வா...
யாவற்றிலும் நாம் சிறந்து விளங்க
உத்திகள் பல சொன்னீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவப் பருவமதில்
தாயாகி....தந்தையாகி
தோழனாகி குருவாக
வரம், தந்த தெய்வம் நீங்கள...

கல்வியோடு நல்லொழுக்கம் போதித்து
கல்வி எனும் அலை கடலில்
நாம் தெப்பமாய் மிதந்து
காலமெல்லாம் களிப்புடன் வாழ
இளங் காற்றாய் எம் பக்கம் வீசினீர்கள்.

குருவான உங்கள் அன்பில்,
அரவணைப்பில், தாலாட்டில்
உருவான பயிர்கள்தான் நாங்கள்!
பெருங்காற்றோ, மழையோ, புயலோ - எமை
அழிக்காது பாதுகாத்தீர்கள்.

ஆனால் இன்று...!
நெஞ்சம் வெடிக்கும்
சோகத்தை எம் முகவரியாக்கி
எம்மை விட்டு நெடுந்தூரம் சென்று
சொர்க்க வாசல் புகுந்து விட்டீர்கள்.

நீங்கள் விதைத்த பயிர்களாய்....
என்றும் உங்கள் வழிகாட்டலில்
உங்கள் பெயர் நிலைத்திட
காலங்கள் பல கடந்தாலும் "குருவாய்"
என்றும் வாழ்வீர்கள் எங்கள் மனதில்.

என்றும் உங்கள் நினைவுடன்,
**நி. பைரவி, நி. சகானா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நீங்காத நினைவுகள்...





"மலர்ந்து விடும் என்று நினைக்கையில்
உதிர்ந்து விடுகிறது சிலரது வாழ்க்கை.
ஏற்க மறுக்கின்றது இதயம் - கனத்த மனதுடன்
இருக்கும் வரை நினைத்திருப்போம்..."

பெயரில் மட்டுமல்ல தனது நடத்தையினாலும் பெயருக்கு ஏற்றது போல் வாழ்ந்த மனிதம் நிறைந்த ஓர் ஆசிரியர் திரு.வே. அன்பழகன். தொழில், தொழிலில் திறன், பணிவு என மூன்றையும் ஒருங்கே கொண்ட மனிதர்களை இன்று காண்பது அரிதான விடயமாகின்றது. கனிவான பேச்சு, கண்ணியமான நடத்தைப்பாங்கு, அர்ப்பணிப்பான சேவை என அனைத்தையும் ஒருங்கே கொண்ட தனிப்பெரும் ஆளுமை திரு.வே. அன்பழகன். தன்னலம் கருதாது கல்விச்சேவை புரிந்த இவரது இழப்பானது எவராலும் ஏற்க முடியாத பெருந்துயரமாகும்.

புலமைப்பரிசில் பரீட்சை வரலாற்றில் அன்பழகன் தனித்த ஒரு வரலாறு ஆகும். உழைப்பினாலே உன்னத மேன்மை கொண்டு ஆசிரியத்துவப்பண்பிலே உயர்ந்த நிலையைப் பெற்ற பன்முக ஆளுமை கொண்ட ஒரு சிறந்த ஆசிரியன். அர்ப்பணிப்புடனும் சேவையில் பணிவுடனும் கடமையாற்றும் கல்விச் சேவையாளர்கள் அருகிவரும் இன்றைய காலச் சூழலில் திரு. வே. அன்பழகன் தனித்தன்மை கொண்ட மறக்க முடியாத நல்லாசான்.

அமைதியான சுபாவம், கண்ணியமான பேச்சு, மனிதத்துவ அணுகு முறையுடன் கூடிய தொடர்பாடல் திறன் என எண்ணற்ற நற்பண்புகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கென தனி இடத்தைப் பிடித்த மேன்மைமிக்க ஆசிரியராகவே என்னால் இவரை இனங்காண முடிந்தது. வலய ரீதியிலான போட்டிகள், தரவட்டாங்கள், செயலமர்வுகள், செயலட்டை, வினாப்பத்திர தயாரிப்புக்கள் என அனைத்திலும் தன்னால் இயன்ற பங்களிப்பை முன் வந்து வழங்கியமை இன்றும் மறக்க முடியாத நினைவாகவுள்ளது.

நேர்முகமான நடத்தைப் பாங்குடன், நட்பு ரீதியாக உரையாடும் இவரது தனிப்பாங்கு, இவர் சிறந்த ஆசிரியர் என்பதைத் தாண்டி சிறந்த மனிதத்துவம் கொண்ட மனிதன் என்பதை உணர வைத்தது. மனிதத்துவமும் பணிவும் கொண்ட ஆசிரியரை இழந்தமை எனது மனதை ஆழமாகப் பாதித்துள்ளது. நேர்முகமான சிந்தனையுடன் தொழிலை வாழ்க்கை நெறியாக நேசித்த ஆசிரியன். எந்தக் கடமையிலும் நேர்மையை நெறிப்படுத்திய மனிதன்.

பாடகராக, கவிதை புனைபவராக, நேர்முக வர்ணனையாளராக எந்த விடயத்திலும் நேர்த்தியான திறமையை வெளிப்படுத்திய உன்னத சேவையாளன். ஆசிரியப் பணியை மனம் விரும்பி ஆற்றிய நல்லாசான். உயர்ந்த எண்ணங்களைப் பற்றி சிந்தித்ததோடு ஆயிரக்கணக்கான மாணவர் உள்ளங்களில் உயர்ந்த எண்ணங்களை விதைத்த திரு.வே.அன்பழகனுடன் பழகவும் பணிபுரியவும் கிடைத்த சந்தர்ப்ப மானது, மறக்க முடியாத காலப்பதிவாகும். ஒரு நல்ல மனிதனை இழந்த வலி இன்னும் மனதோடு நீடித்து நிற்கின்றது.

இவரது இழப்பானது, எமது கல்விச் சமூகத்திற்கான இழப்பாகவே அமைந்துள்ளது. இவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத் தவர்கள், மனைவி, பிள்ளைகளின் துயரில் நெஞ்சாரப் பங்கு கொள்வதுடன் திரு.வே. அன்பழகனின் ஆத்மா சாந்தி அடைய பரம்பொருளை வேண்டி நிற்கின்றேன்.

தவிர்க்க முடியாத துயரம் இறப்பு - அந்த
இறப்பிலும் வாழ்வதே சிலரது சிறப்பு.

என்றும் உங்கள் நினைவுடன்
**திரு. ப. சசிக்குமார்,**
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
ஆரம்பக் கல்வி - யாழ்ப்பாணம் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆசான்
## அன்பழகன்...





எமது பாடசாலையின் ஆசிரியர் அமரர் வேலுப்பிள்ளை அன்பழகன் அவர்கள், நான் பாடசாலையைப் பொறுப்பேற்ற காலம் சுகயீனம் காரணமாக அவர் பாடசாலைக்கு வருகை தர முடியவில்லை என்பது இன்றும் எனது நெஞ்சில் தேங்கிக் கிடக்கும் கவலை.

சுகயீனமுற்று வீட்டில் இருந்த போதும் எமது பாடசாலை வளர்ச்சியிலும் மாணவர் அடைவை உயர்த்துதல் தொடர்பிலும் மிகவும் அக்கறையுடன்தான் இருந்தார்.

நான் பாடசாலையைப் பொறுப்பேற்ற அடுத்த நாளே வெளி மதிலைத் தானே முன்னின்று வர்ணம் பூசித் தந்து எமது பாடசாலையின் வளர்ச்சியில் ஆரம்பப் புள்ளியானார்.

மிகக் குறைவான மாணவர்களைக் கொண்டதாக இருந்த எமது பாடசாலையின் இன்றைய மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு அவரே மூல காரணமானார்.

எமது பாடசாலையின் பெயரை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து அதற்கான பல வளங்களைத் திரட்டுவதிலும் மிக ஆர்வமாக ஈடுபட்டிருக்கிறார். இன்று எமது பாடசாலையில் காணப்படும் இலத்திரனியல் உபகரணங்கள், தளபாடங்கள் என்பன அவரால் சேகரிக்கப்பட்டவையே.

மாணவர்களைச் செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகளில் ஈடுபடுத்தி வலய, கோட்டப் போட்டிகளில் பங்கு பெற வைக்க கடுமையாகத் தன்னை அர்ப்பணித்திருக்கிறார். அது மட்டுமன்றி, மேலதிக வகுப்பு, மேலதிகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் / செட்டித்தெரு மெ.மி. வித்தியாலய செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிகளில் ஈடுபடும் மாணவர்களுக்குத் தனது நிதியில் உணவு வாங்கிக் கொடுத்து மகிழ்வு காணும் ஓர் உன்னத ஆசிரியராக அவர் திகழ்ந்திருக்கிறார்.

இலங்கையின் ஆரம்பக்கல்வியின் சாதனையாளராக மாணவரைக் கவரும் ஆசிரியராக இரண்டு தசாப்தங்களாகத் திகழ்ந்திருக்கிறார் என்றால் அவரின் கற்பித்தல் திறனுக்கு இதைவிட சான்று தேவை இல்லை என நினைக்கின்றேன்.

மற்றவர்களுடன் பழகுவதிலும் பிறருக்கு உதவுவதிலும் அன்பழக னுக்கு நிகர் அன்பழகன்தான்.

நான் அன்பழகன் சேரை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியின்போது முதன் முதலில் நெருக்கமாகப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. தினமும் எல்லோருக்கும் ஏதோ ஒரு தீன் பண்டத்துடனேயே விடைத்தாள் திருத்தும் பணிக்கு வருகை தருவார்.

இன்று அவரால் பல வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள் என பலரை அவர் உருவாக்கியிருக்கிறார்.

வடக்கின் கல்வியில் நாம் படைக்கும் சாதனையே அவரின் ஆத்மா சாந்திக்காக நாம் செய்யும் கடமையாகும்.

பின் தங்கிய பிரதேசங்களில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வுகளை அவரின் நினைவாக ஆரம்பித்திருக்கிறோம். மேலும் அன்பழகனின் பெயரிலான நிதியம் ஒன்றை உருவாக்கி தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை மாணவர்களைக் கௌரவிக்கும் செயற்பாட்டை அவரின் குடும்பத்தினர், அவரின் மாணவர்கள், நலன் விரும்பிகள் அவரிடம் நல் அறுவடையைப் பெற்ற பெற்றோர்கள் ஆகியோர் முன்வர வேண்டும். அதற்கு எமது பாடசாலை என்றும் ஒரு தளமாக அமையும். அதுவே அமரர் திரு.வே. அன்பழகனின் ஆத்மா சாந்திக்கா நாம் செய்யும் கடமையும் ஆகும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன்,
**திரு. க. சசிகரன் (SLPS)**
யா/ செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஆசான்
## *அன்பழகன்...*





திரு.வேலுப்பிள்ளை அன்பழகன் அவர்களின் திடீர் மறைவு எம் தமிழ் தேசமெங்கும் பேரதிர்ச்சியையும், பெரும் துயரத்தையும் தந்தது. இறக்கும் வரை புலமைப் பரிசில் மாணவர்கள் பற்றிய சிந்தனையுட னேயே இருந்தார்.

தேசங்கள் போற்றுகின்ற அறிஞர்கள் விஞ்ஞானிகள் எவ்வாறு தங்கள் கொள்கையின் இலட்சியப் பயணத்தில் உறுதியுடன் வெற்றிய டைய விவேகமாகத் திகழ்ந்தனரோ. அவ்வாறே ஆசிரியரும் தான் இணைந்து கொண்ட ஆரம்பக் கல்வியின் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் வெற்றிபெற வேண்டுமென்று தணியாத தாகத்துடன் தனக்கென புதிய நுணுக்கங்களைத் தனது கற்பித்தல் செயற்பாட்டிலே புகுத்தி அதில் வெற்றி கண்ட புலமைப்பரிசில் பேராசான் எனலாம்.

அன்பழகன் ஆசிரியரிடம் அன்பு, நேர்மை, எந்த விடயமாக இருந்தா லும் ஆழமாக ஆராயும் திறன், மனித நேயம், பிறருக்கு உதவி செய்வதில் உள்ள விருப்பு, கண்ணியம் மிக்க கனிவான பேச்சு, மிகச் சிறந்த தலைமைத்துவப் பண்பு, எடுத்த காரியத்தைப் பிற்போடாமல் மிகச் சிறப்பாக, நேர்த்தியாகச் செய்யும் ஆற்றல், மாணவச் செல்வங்களை உற்சாகப்படுத்தச் செய்யும் உத்திகள் என அவரிடம் நாம் கண்ட நல்ல பண்புகளைக் கூறிக் கொண்டே போகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் சார்ந்த கல்விப் புலத்தில் மட்டுமல்லாது இயல்பாகவே எல்லோருடனும் அன்னியோன்னியமாகப் பழகும் பண்பும், மற்றவர்க ளுக்குத் தாமாகவே முன்வந்து உதவும் மனப்பான்மை போன்ற விடயங்களினால் மக்கள் மத்தியிலே செல்வாக்குள்ள நல்ல மனிதராய் அன்பழகன் போற்றப்பட்டார்.

அன்பழகன் ஆசிரியரால் ஆரம்பிக்கப்பட்ட அன்பொளி கல்வியகத்தில் ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள் என ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பயணித்தோம். அத்தனை பேருக்கும் நல்வழிகாட்டியாக, மதிப்பார்ந்தவராகத் திகழ்ந்து மாணவர் கல்வியின் அடித்தளம் ஆரம்பக் கல்வியே என சமூகத்திற்கு உணர்த்திய அன்பொளி கல்வியகம் கல்வியின் கலைக்கூடமாகத் திகழ்ந்திட எமை வழிநடத்திய நல் ஆசான்.

கடந்த 2002ஆம் ஆண்டு யா/யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் அறிமுகமாகி இன்றுவரை ஆசிரியருடன் பயணித்த காலப்பகுதியில் எவரையும் மனம் நோகச் செய்ததோ, மனம் புண்படக் கதைத்ததையோ நான் கேட்டதே இல்லை, அவ்வாறான நல்லுள்ளம். இவ்வாறான நல்ல உள்ளம் கொண்ட மனிதரை எமது வாழ்வில் இனிமேல் சந்திக் கவே முடியாது என்பதுதான் எமது தீராத கவலை.

அன்பழகன் எம் நல்ல தம்பியாய், நல்ல நண்பனாய் நல்லாசானாய், எமது குடும்ப உறவாய் எங்கள் ஜீவிதத்தில் கலந்திட்ட உந்தனை மரணத்திலும் மறக்கவே முடியாது. எனினும் உமது மனைவி, பிள்ளைகள், உறவுகளோடு என்றென்றும் நாம் உறவாகப் பயணிப்பதே உமக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

என்றும் உங்கள் நினைவுடன்,

**திரு.திருமதி இ. தர்மரத்தினம்**

ஆசிரியர்கள்,

நெடுந்தீவு - 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்பூத்த ஆசான்
## *அன்பழகன் நினைவாக*





"விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பார்கள் எம் மூத்தோர். அதேபோல் அன்பழகன் சிறுவயதிலிருந்தே உயர்ந்த சிந்தனையுள்ள மாணவனாகத் திகழ்ந்ததை நான் நன்கு அறிவேன். விஞ்ஞானப் பாடத்துறையில் க.பொ.த. உயர்தரத்தைக் கற்றாலும் ஆசிரியரிடமிருந்த கலையுணர்வு காரணமாக ஆரம்பக்கல்வியில் நாட்டத்தை ஏற்படுத்தி ஆரம்பக்கல்வி ஆசிரியராக்கியது.

ஆரம்பக்கல்வியில் தன்னைத் தடம்பதித்த அன்பழகன் யா/ யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை, யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, யா/ செட்டித்தெரு மெ.மி வித்தியாலயம் என்பவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றி நல்லூர் கோட்டம், யாழ். வலயம் எனும் நிலையில் தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேற்றில் முன்னணியாகத் திகழ வழிவகுத்தவர் என்பதை எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

அந்த வகையில், எனது நல்லூர் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.

**திரு. F.X அன்ரன்,**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர் கோட்டம்,
யாழ். கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையா அன்பு ஒளி



எத்தனையோ
விடயங்களை
எழுதியிருக்கின்றேன்
உன்னை எழுதுகையில்
பேனா தழுவ
விரல்களுக்குத்
திராணியற்றதுபோல்
ஓர் உணர்வு.
என் கண்ணீரையே
பேனாவில் நிரப்பி
உன்னைப் பற்றி
மெய்யுரை வரையக்
கையும் நடுங்கியது!

உன்னை
யாரென்று முழுமையாய்
அறிந்தவன்
ஆரம்பக் கல்விக்கு
வேரென்று புரிந்தவன்.
மட்டுவில் தெற்கு
மண் ஈந்தது...
யாழ். மண் உனக்கோர்
பெயர் தந்தது.
நீ எல்லார் நெஞ்சத்திலும் நீந்தியவன்
கண்ணில்
கருணையை ஏந்தியவன்

விவேகத்தின் உறைவிடம்
தளம்பாத நிறைகுடம்
உனக்குள் வீரிய சக்தி
அது கொடுத்தது காரியசித்தி
நீயோ பொற் சித்திரம்
உனை அளக்குமா சொற் சித்திரம்
நீ புகுந்த இடமெல்லாம்
மழலைகளுக்குப் பூங்கா
நீ புரிந்த சாதனைகள்
கண்மூடித் தூங்கா
உன் அறிவுப் புலமையை
வித்தகர் யாவரும்
வியந்து போற்றினர்.

புலமை எழுதும்
மழலைகளுக்கெல்லாம்
கால் கொண்டு நடந்த
கடவுளானாய்.
மாகாணம்
அழைக்கும் வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைத்தாய்
உனது உதவிகள் நினைத்து
கடன்காரனானது
கல்வித் திணைக்களம்.
விதி எனும் தேவன்
விபரீதம் புரிந்தான்
ரணமான உன் தேகம்
குணமாகும் என
எமக்குள் பிறந்தது
ஓர் நம்பிக்கை!

உன்னை எண்ணி
நேர்த்திகள் வைத்தோம்.
நேர்ந்தது என்ன?
வானம் விடிந்தது
வந்த செய்தி கேட்டு
விழிகளில்
கொதிநீர் வடிந்தது
நீல வான் நிலா
மூச்சை நிறுத்தி
மறந்தது உலா.
ஆரம்பக் கல்விக்கு
நிழல்தந்த மரம்
அந்தகனாம் சாவு
தொடுத்ததோ சரம்.
நீ அணைத்த
பாவை மனமும்
பாலைவனமானது.

எத்தனை மாணவர்களை
ஏற்றிவிட்ட ஏணி
உன்
சொந்த மழலைகளுக்கு
அந்தப் பாக்கியமில்லை
மீண்டும் பிறந்து வா நீ !

நீ அளித்த கல்வி
மழலைகளில்
வேர் விட்டது
உன்னால்
விருட்சங்கள்
பல தோன்றி
பார் சிறந்தது.

புலமை உலகம்
உன்னால்
புகழ் கொண்டது
புகழுடன் பெயர்
விளங்க
அன்பு ஒளி நின்றது.
மண்ணிடை
மறைந்தாலும்
மனதில் வாழும்
வரம் தந்தது.

**A.S. சற்குணராஜா,**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
ஆரம்பக் கல்வி
மாகாணக் கல்வித் திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயத்தை
# இழந்துவிட்டோம்...!





எல்லோருக்கும் இறப்புண்டு எனினும்
மண்ணில் எங்கள் ஆசானின்
இழப்பை எங்கள் மனம் ஏனோ
ஏற்க மறுக்கின்றது.
இம்மண்ணில் அன்பின் சிகரமான ஆசானே!
ஆலமர விழுதுகள் போல் வேரூன்றி
கல்வியில் மேன்மையுற
நல்வழிகாட்டி வழிநடத்தி மகிழ்வுற்ற
எம் அன்பு ஆசானே.

எப்படி மனம் வந்தது?
எமையெல்லாம் விட்டுச் செல்ல...
எமது பரதத்தை கண்ணிமைக்காது பார்த்து
மகிழ்ந்தீரே!
எமது உயர்ச்சியையெல்லாம் கண்டு
உமது உயர்ச்சிபோல் மகிழ்ந்தீரே!
இன்று நாம் தவிக்கின்றோம்
உமைக் காணாது!

என்றும் அன்பு ஆசானின்
நினைவுகளுடன்,

**சி. சாரங்கன், சி. வைஷ்ணவி, சி. வைதேகி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் அறிவும் கலந்தூட்டிய
## *ஆசான் அன்பழகன்...*





அன்பின் இருப்பிடமாய், அறிவுக்கு அழகு சேர்த்தவராய், மழலைச் செல்வங்களின் மனங்களிலே குடிகொண்ட தெய்வமாய் வலம் வந்தவர் ஆசான் அன்பழகன் Sir அவர்கள்.

“கற்றாரைக் கற்றாரே காமுறுவர்...” என்ற வாக்குக்கேற்ப அறிஞர்களாலும், கல்விசார் பெருமக்களாலும் போற்றப்பட்ட பெருமகன். கல்வி உலகையும், மாணவச் செல்வங்களையும், சுற்றிச் சுற்றி வட்டமிட்டவர். ஏழை, எளியவர்களிற்கு ஈவதில் எப்போதும் இன்முகம் காட்டுபவர்.

வைத்திய நிபுணர்கள், பொறியியலாளர்கள், துறைசார் நிபுணர்கள் எனப் பல பரிமாணங்களிலே வித்தகர்களை உருவாக்குவதற்கு அடித் தளம் அமைத்துக் கொடுத்தவர். ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களின் கலங்கரை விளக்காக ஒளி தருபவர்.

கற்பித்தல் முறைமையில் விந்தைகள் பல புகுத்தி சித்துக்கள் பல செய்து வெளி உலகமும் தன்னை உற்று நோக்கிப் பார்க்க வைத்து பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் எல்லோரும் பின்பற்ற வேண்டிய உதாரண புருசன். மாணவச் செல்வங்களின் மனங்களைப் புரிந்து கற்பிக்கின்ற உளவியல் நிபுணர்.

"தோன்றின் புகழோடு தோன்றுக; அஃது இலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு இலக்கணமாகத் திகழ்ந்து வாழும் காலத்திலேயே புகழ்மாலையால் அலங்கரிக்கப் பட்டவர்.

*"உண்மை, தூய்மை, சுயநலமின்மை இவை மூன்றும் எவனொருவனிடத்தில் இருக்கின்றதோ அவனை அழிக்கக் கூடிய சக்தி இந்தப் பிரபஞ்சத்திற்கே கிடையாது"*

- சுவாமி விவேகானந்தர்.

இந்த மூன்று பண்புகளும் ஒருங்கே அமையப்பெற்றவர் எங்கள் ஆசான். அப்படிப்பட்டவர் என்றுமே எங்களுடன் இருப்பார்.

' True necessity has no laws" என்ற ஞானிகளின் எண்ணக்கருவுக் கேற்ப உண்மையான தேவைக்கு முன்பு எந்த விதியும் செல்லுபடியற்ற தாகிவிடும். எனவே, அவருடைய குடும்பத்தாருடைய தேவையெதுவோ அது நிறைவேறவும், அவருடைய புதல்வர்கள் எல்லோரும் கல்வி உலகில் உயர்நிலையடையவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக !

**Dr. R.Manivasakan,**
(BSc, MBBS, DTCD, MSc, MBA)
**R.Manivannan**
(BSc, (Eng), ACMA, CGMA, CPA (Aus)
MPM (us)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "வீட்டுச் சூழலை கற்றற் சூழலாய் மாற்றுவோம்"

**- பெற்றோர் பக்கம் ஒரு பார்வை.**



அன்புக்குரிய அன்பழகன் ஆசிரியர் அவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஆரம்பக்கல்வி மாணவர் களைத் தயார்ப்படுத்துவதில் இமயம் தொட்டவர். அவரது கற்பித்தல் நுட்பம் எழுத்துப்பரீட்சைக்கு மட்டு மன்றி வாழ்க்கைப்பயணத்திற்கும் அமிர்தமானதை அனுபவித்த வர்கள் சான்றாவர். பிஞ்சு மனங்களைப் பண்படுத்தி நல்விதைகளை விதைத்தவர். ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கறக்கவும் பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக்கறக்கவும் இறையவதாரமானார். கறந்தபால் கன்னலோடு தேன்கலந்து சுவைத்திருந்த எம் சந்ததியைப் பார்த்துப் பார்த்துச் செதுக்கிய சிற்பி விலைமதிப்பற்ற முத்துக்களை ஈன்று இன்று தெய்வமானது. மகிமைமிக்க தெய்வத்தின் பெருமைதனைச் செதுக்கவேண்டும் கல்லில். அவரது கல்விப்பணிக்கு ஓர் அணிகலனாய் இக்கட்டுரையை அவரது பாதகமலங்களுக்குச் சூட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்ற சொல் மிகப் பரந்த கருத்தினைக் கொண்டதாகும். அது நாட்டுக்கு நாடுஇ கலாசாரத்திற்குக் கலாசாரம்இ காலத்துக்குக் காலம் பல மாற்றங்களுக்கு உள்ளாகி வந்திருக்கின்றது. (கல்விச் சீர்திருத்தங்கள்) கல்வித் தத்துவஞானிகளும் கல்விப்புல அறிஞர்களும் கல்வி பற்றிப் பல்வேறு வரைவிலக்கணங்களைக் கூறியுள்ளனர். "லெஸ்டர் ஸ்மித்" என்பவர் **'கல்வி என்றால் என்னவென்று ஆராயும் முயற்சியானது வெறுமனே காலத்தை வீணாக்கும் முயற்சியாகும்'** என்றுகுறிப்பிடப் பட்டுள்ளார். அதாவது இன்னது தான் கல்வி என்று வரையறுத்துக் கூறமுடியாது.

கல்வியை ஆங்கிலத்தில் "EDUCATION" என்பர். இது இலத்தீன் மொழிச் சொல்லான "EDUCATE" என்பதிலிருந்து தோன்றியதென்பர். இதன் பொருள் "வருதல், அப்பால் கொண்டு செல்லல்" என்பதாகும். மாணவனின் அறிவு விளக்கம் ஆற்றல் என்பவற்றை வெளிக்கொண்டு வருதல் கல்வி என விளக்கம் கொடுக்கப்படுகின்றது. எனினும், கல்வித் தத்துவஞானிகள் பலரும் பல்வேறு விதமாக விளக்கங்களை வழங்குவர்.

தற்காலத்தில் 'யுனெஸ்கோ' (UNESCO) அறிக்கையில் கல்வி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களும் உலகில் இன்று முக்கியத்துவமாகின்றன. சர்வதேச கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையில் கல்வியின் நான்கு தூண்கள் பற்றிய கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. அவை யாவன,

1. அறிவைப் பெறுவதற்காகக் கற்றல் (Learning to know)
2. செயலில் ஈடுபடுவதற்காகக் கற்றல் (Learning to do)
3. ஏனையவர்களுடன் வாழக்கற்றல்
   (Learning to.Live Together)
4. வாழ்வதற்காகக் கற்றல் என்பனவாகும். (டுநயசெiபெ வழ டீந)

இவற்றைவிட

1. வாழ்நாள் நீடித்த கல்வி (Life Long Education)
2. வளர்ந்தோர் கல்வி (Elder Education)
3. கற்கும் சமூகம் (Learning Society)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கருத்துகளும் உலகளாவியரீதியில் முன்னிலைப்படுத்தப்படு கின்றன. பொதுவாகச் சொன்னால் கல்வியால் ஒரு முழுமனிதனை உருவாக்க வேண்டும் என்பதே முதன்மையான சிந்தனையாகும்.

இவ்வாறு முழுமனிதனை உருவாக்கும் கல்விச் செயற்பாடு வெறு மனே ஒரு பக்கச் செயற்பாடாக இருக்கமுடியாது. என்பது வெளிப்படை. அந்த வகையில் கல்வி அதிகாரிகள் அதிபர், ஆசிரியர், பெற்றோர், மாணவர் என்ற பல்வேறு தரப்பினரதும் தன்னலமற்ற சேவையே முழு மனிதனைத் திறம்படப் படைக்க உதவும் என்பதில் மிகையில்லை. இப்பல்வேறு தரப்பினருள்ளும் பெற்றோர்களுடனேயே பிள்ளைகள் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர் என்பதும், சமூகரீதியான விழு மியக்கற்றல் முழுமைப்படுத்தப்படும் வேளையும் அதுவே என்பதும் தெளி வான உண்மையாகும். பிள்ளை பாடசாலையில் கற்றுக்கொள்ளும் விடயங்களைச் செயற்படுத்திப் பார்ப்பதும் பரீட்சித்துப் புரிந்து கொள்வதும் வீட்டிலே தான் என்பதைப் பெற்றோர் மறந்துவிடக்கூடாது. எனவே, வீட்டுச் சூழல் கற்றற் சூழலுக்கான ஏதுவான இடமாக அமைந்து விட்டால் அறிவுச் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது சர்வசாதாரணமாக அமைந்து விடும்.




பெற்றோர் "இருமுதுகுரவர்" எனப் போற்றப்படுகின்றார்கள். இதன் பொருள் பெற்றோர் வீட்டில் தமது பிள்ளைகளுக்கான ஆசிரியர்களாக இருப்பதை விளக்குகின்றது. எமது தமிழ் இலக்கியங்கள் பிள்ளையின் கல்விக்குப் பெற்றோரின் பங்களிப்புப்பற்றிச் சிறப்பாக எடுத்து விளம்புகின்றன.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என வரும் புறநானூற்றின் வரிகள். தந்தையின் கடமை. கல்வி கற்பித்தல் அல்லது நல்ல குருவை நாடி பிள்ளையைக் கற்கச் செய்தல் என்று விளக்குகின்றது. இதனை வள்ளுவம் மேலும் தெளிவுறுத்து கின்றது.

"தந்தை மகற்காற்று முதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

அறிஞர்கள் கூடியிருக்கும் சபையில் முன்வரிசையில் அமர்ந்திருக்கும் தகுதியைப் பெற வைக்கும் தந்தையின் கல்விக் கடமை இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

புத்த ஜாதகக் கதைகளில்கூட பிள்ளைகளின் கல்வியானது பெற்றோரின் கடமைகளில் ஒன்றென எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பல ஆராய்ச்சிக் கற்கைகள், பிள்ளைகள் தமது கல்வியைக் குடும்பதில் ஆரம்பிப்பதுடன், அவர்க ளின் கல்வியில் பெற்றோரின் ஈடுபாடுடானது அவர்களது வினையாற்றல் மற்றும் அடைவுகளை மேம்படுத்துவதை நிறுவியுள் ளன. ஒருவர் வீட்டினையும் பாடசாலையும் வெவ்வேறாகப் பிரித்துப் பார்க்க முடியாது. குடும்பங்களும் பாடசாலைகளும் பிள்ளைகள் சமூகத்துடன் சீராக்கம் பெற உதவும் வகையில் இணைந்து கொள்ள வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வரும் புறநானூற்றின் வரிகள். தந்தையின் கடமை. கல்வி கற்பித்தல் அல்லது நல்ல குருவை நாடி பிள்ளையைக் கற்கச் செய்தல் என்று விளக்குகின்றது. இதனை வள்ளுவம் மேலும் தெளிவுறுத்து கின்றது.

**"தந்தை மகற்காற்று முதவி அவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்"**

அறிஞர்கள் கூடியிருக்கும் சபையில் முன்வரிசையில் அமர்ந்திருக்கும் தகுதியைப் பெற வைக்கும் தந்தையின் கல்விக் கடமை இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

புத்த ஜாதகக் கதைகளில்கூட பிள்ளைகளின் கல்வியானது பெற்றோரின் கடமைகளில் ஒன்றென எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பல ஆராய்ச்சிக் கற்கைகள், பிள்ளைகள் தமது கல்வியைக் குடும்பதில் ஆரம்பிப்பதுடன், அவர்க ளின் கல்வியில் பெற்றோரின் ஈடுபாடுடானது அவர்களது வினையாற்றல் மற்றும் அடைவுகளை மேம்படுத்துவதை நிறுவியுள் ளன. ஒருவர் வீட்டினையும் பாடசாலையும் வெவ்வேறாகப் பிரித்துப் பார்க்க முடியாது. குடும்பங்களும் பாடசாலைகளும் பிள்ளைகள் சமூகத்துடன் சீராக்கம் பெற உதவும் வகையில் இணைந்து கொள்ள வேண்டும்.

1979 இல் உருவாக்கப்பட்ட பெற்றோர் பட்டயமானது பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் உரிமைகளையும் கடமைகளையும் உள்ளடக்கு கின்றது. இதில் இருபது உறுப்புபுரைகள் வீட்டில் அவர்களது கடமைகள் உரிமைகள் பற்றியும் பாடசாலைச் செயற்பாடுகளில் பெற்றோரின் ஈடுபாடுகளையும் விளக்குகின்றது.

**பெற்றோர் பட்டயத்திலுள்ள முக்கியபான விடயங்கள் சில வருமாறு:**

01. தமது பிள்ளைகளின் உடல் மற்றும் உள அபிவிருத்திக்குச் சாதகமான எவ்வகையான வேறுபாடுகளுமின்றிய கல்வி மற்றும் சமூக, ஒழுக்க, ஆன்மீகமேம்பாடு, இலவசக்கல்வியின் நன்மைகளை உறுதி செய்தல்.
02. தமது பிள்ளைகளுக்குப் பொருத்தமான கல்வியைத் தீர்மானிப்பதில் பாடசாலை மேற்கொண்ட தீர்மானங்களைப் பற்றிய தமது கருத்துகளைத் தெரிவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. தமது பிள்ளை தொடர்பான எந்தவொரு பிரச்சினை தொடர்பாகவும் அதிபர் அல்லது
04. ஆசிரியரைச் சந்தித்தலும் அவர்களுடன் கலந்துரையாடலும்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்புரிமை பெறுதலும் பதவி வகித்தலும்.
05. பாடசாலை அபிவிருத்திச் சங்க மட்டத்தில் பாடசாலை வளங்களின் போதாத தன்மை காணப்பட்டால் தொடர்புடைய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவருதல்.
06. வசதிகள் சேவைக் கட்டணங்கள் அல்லது பிள்ளைகளிடம் சேகரிக் கப்படும் நிதி தொடர்பான கணக்குகளைப் பரிசீலித்தல்.
07. பிள்ளைகளிடம் காணப்படும் உடல், உள குறைபாடுகளை அறிவித்த லும் அங்கவீனர் களையும் பின் தங்கியோரையும் பாடசாலைகளில் அல்லது விசேட நிறுவனங்களில் அனுமதித்தல்.
08. அரசாங்கக் கல்விக் கொள்கையை விளங்கிக்கொண்டு கல்வித் திட்டமிடல் செயன்முறையில் பங்கேற்றலும் ஒத்துழைப்பு வழங்கலும் என்பன குறிப்பிடத்தக்கன.





**ஒவ்வொரு பெற்றோர்களினதும் கடமைகள்.**

1. தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பான தத்துவங்களையும் கொள்கைகளையும் விளங்கிக் கொள்ளல்.
2. தமது பிள்ளைகளின் அறிவாற்றல் மற்றும் ஒழுக்கம் சார்ந்த அபி விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
3. பிள்ளைகளின் வேலைகளைப் பரீசீலிப்பதன் மூலம் பிள்ளைகளின் கல்வி சார்ந்த அடைவுகள் பற்றி ஒழுங்கான விசாரணை செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கத்தில் உறுப்புரிமை பெறலும் அதன் வேலைகளில் ஊக்கமுடன் பங்கேற்றலும்.
5. பாடசாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பணரீதியபன பங்களிப்பு மாத்திரமின்றி உழைப்பு மற்றும் ஒத்துழைப்பு ஊடாகவும் பங்கெடுத்தல்.
6. பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புதலும் பாடசாலை யில் இருந்து வரும் தொடர்பாடல் எதற்கும் உடனடியாகத் துலங்கு தலும்.
7. கல்விக் காலம் முழுவதிலும் பிள்ளையின் தேவைகளைப்பூர்த்தி செய்தல், இதனுள் தேவையான விடத்து சிகிச்சை சார் பரிகாரங்க ளும். விசேட குறைபாடுள்ளோர் பற்றிய தகவல்களைத் தேவைப்படு மிடத்து வழங்குதலும்.
8. ஒருவருடைய சொந்த அனுபவங்களையும் நிபுணத்துவத்தையும் பாடசாலைக்குக் கிடைக்கச் செய்தல்.
9. பாடசாலையின் வளங்களைப் பாதுகாப்பதை உறுசெய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை அதிபருடன் சேர்ந்து உருவாக்குதல்.
10. தாயும் தந்தையும் பிள்ளைக்கு அதிமுக்கியமானவர்கள் என்ற உணர்வை மதிப்பதுடன் சுதந்திரமான மற்றும் சமத்துவமான சமு தாயத்தின் நன்மைகளை முழுமையாக அனுபவிக்கும் வகையில் வழிகாட்டுதல்.

எனவே, பாடசாலைகளுடன் பெற்றோரின் ஈடுபாடு பெறுமதி வாய்ந் தது. பெற்றோரின் ஈடுபாடு பலவடிவங்களில் உள்ளடக்கப்படுகின்றது. தமது பிள்ளைகளுக்கான அடிப்படைத் தேவைகளை வழங்குதல். வீட்டில் போதித்தல், பாடசாலைச் செயற்பாடுகளுக்கு உதவுதல் தொடக்கம் பாடசாலைகளின் பேச்சாளராகச் சேவையாற்றல் வரையில் இருக்கும். பெற்றோரின் ஈடுபாடு எவ்வளவு தூரம் நேர காலத்துடன் ஆரம்பிக்கின் றதோ அந்தளவுக்கு விளைதிறனும் சக்தியும் கொண்ட விளைவுகளைத் தருமென ஆய்வுச்சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **பிள்ளைகளின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் குடும்பக் காரணிகள்**

- பிள்ளையின் பிறப்பு வரிசை நிலை
- பால்நிலை வேறுபாடு
- குடும்பத்தின் பருமன்
- கருக்குடும்பமும் கூட்டுக்குடும்பமும்
- குடும்பத்தின் வகிபாங்கு
- குடும்ப அமைப்புகளில் ஏற்படும் மாற்றம்
- குடும்ப வருமானம்

ஒரு பிள்ளை குடும்பத்துடன் கொண்டிருக்கும் தொடர்பானது பிள்ளையினுடைய ஆளுமையில் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றது. இது பிள்ளையினுடைய ஆயுட்காலம் வரை நீடிக்கின்றது. ஒரு பிள்ளை தனது ஆயுட்காலத்தில் மிகக் கூடுதலான காலம் குடும்பத்தினருடன் வாழ் தலில் கழிக்கின்றது. அதனால் குடும்ப உறுப்பினர்களின் நடத்தைகள் பிள்ளைகளில் செல்வாக்குச் செலுத்துவதால் பிள்ளைகளின் நடத்தைக ளில் மாற்றங்கள் உண்டாகின்றன.

ஆளுமைவிருத்தியில் நேரடியான செல்வாக்கானது குடும்பத்தில் பிள்ளையைப் பயிற்றுவிக்கும் முறையினால் உண்டாகின்றது. குடும்பத் தில் நிலவும் தொடர்பாடல் முறைகள், மனப்பாங்குகள், பெறுமானங்கள் என்பவற்றில் இது பெரிதும் தங்கியுள்ளது. முதலிலே பிள்ளையின் செயற் பாடுகளை அங்கீகரித்து, அவற்றினை மதித்து அன்பு செலுத்துபவர்கள் கூடுதலான பங்கினைப் பெறுகின்றனர். இந்தவகையில் தாய், வயது முதிர்ந்தவர்கள், இளையவர்கள் ஆகியோரிடத்தில் பிள்ளைகள் நெருக்க மான உறவுகளைப் பேணுவதை அவதானிக்கலாம்.

குடும்பத்தில் நிலவும் மனவெழுச்சி சார்ந்த கவிவுநிலைகள் பாட சாலையின் கவிவுநிலைகளை விட முக்கியத்துவம் வாய்ந்தது. குடும்ப உறுப்பினரின் ஒட்டுணர்வு, இடைவினைத்தாக்கம், ஏனையவரின் கருத் துக்கு மதிப்பளித்தல், ஒன்றுகூடுதல், ஒத்துச்செல்லாத விடயங்க ளையிட்டுக் கலந்துரையாடி முடிவுக்கு வருதல் போன்றவை குடும்பத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதகமான கவிவு நிலைக்கு உதாரணங்களாகும். மறுபுறத்தில் குடும்ப உறுப்பினரிடையே முரண்பாடுகள் நிலவுதல், ஒரு சில பிள்ளைகளுக்குப் பக்கச்சார்பாக நடந்து கொள்ளுதல், குடம்ப உறுப்பினரின் வகிபாங்கில் குறைபாடுகள் நிலவுதல் அல்லது போதாந்தன்மை காணப்படல், வெவ்வேறு பெறுமானங்கள் அல்லது நம்பிக்கைகளையிட்டுக் கருத்து முரண்பாடுகள் தோன்றுதல், அதிகார தோரணையுடன் கட்டுப்பாடுகளை விதித்தல் பிள்ளைகளின் மனவெழுச்சி சார்ந்த சீர்குலைவுகளை ஏற்படுத்துக்கூடியன.

**வீட்டுச் சூழலில் மாணவர் சுதந்திரம்?**

மணவர்களை மதித்து அவர்களைச் சுதந்திரமாகப் பேசவிடுவதற் கான கலாசாரம் பேணப்பட வேண்டும். குழந்தைகள் வீட்டில் கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும். வீட்டில் கேள்வி கேட்டால்தான் பாட சாலையில் கேள்வி கேட்டுப் படிக்கும் நிலை உருவாகும். பெரும்பாலான சமூகங்களில் குழந்தைகளைக் கேட்கவே பெற்றோர்கள் விடுவதில்லை. பெரியவர்களிடம் மரியாதை என்றால் கேள்வி கேட்கக் கூடாது. குழந் தைகள் கேள்வி கேட்கத் தொடங்கினால் எல்லா விடயங்களையும் கேட்க ஆரம்பித்து விடுவார்கள். பெரும் அநீதிகள் மேல் எழுப்பப்பட்டிருக்கும் நம் சமுதாயத்தின் அத்திபாரங்கள் ஆடத்தொடங்கி விடும். இத்தகைய ஒரு பயம் எல்லோர் மனதிலும் இருக்கிறது. அதனால்தான் சின்னக் குழந் தைக்குச் சிறகு முளைக்கும் போதே அதைக் கிள்ளியெடுத்து விடுகின் றார்கள். எனவே, கேள்வி கேட்கும் மனப்பாங்கே குழந்தைகளிடம் உருவாகுவதில்லை. இதனால் அறிவின் விரிவு மட்டுப் படுத்தப் படுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்துச் சூழலில் அமைந்த பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளை ஆய்வு செய்த போது கல்வியில் தாக்கம் செலுத தும் பின்வரும் பண்புகள் சிலவற்றை அடையாளம் காணமுடிந்தது.

- கிராமப்புறத்தில் வேறுபட்ட பிரதேசங்களில் வாழ்தல்.
- பொருளாதாரக் கஷ்டங்களும் வறுமையும்.
- நோய்களும் மந்த போசணையும்
- வீட்டில் செய்ய வேண்டிய பொறுப்புகள் அதிகம்.
- பொற்றோரின் துணை கல்விக்குக் கிடைக்காமை.
- பால்வேறுபாடுகள் பற்றிய மனப்பாங்கு.
- கருத்து, மனப்பாங்கு என்பவற்றில் நெகிழ்வற்றநிலையும் மூடநம்பிக்கையும்.
- விழாக்கள், சடங்குகளுக்கான நீண்டகாலச் செலவு.
- போதைப் பொருள் பாவனையின் அதிகரிப்பு
- சிறுவர் துஷ்பிரயோகங்கள்.
- போக்குவரத்தப் பிரச்சினை.
- வசிப்பிடங்களின் அமைவிடங்கள்.
- ஆசிரியர் பற்றாக்குறை.
- கல்வி முகாமைத்துவ நுட்பங்கள் பயன்பாடின்மை.

என்பன அவற்றுட் சிலவாகும்.

❖ பெற்றோர்களே சற்று நில்லுங்கள்.!

1. நீங்கள் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் ஒளிமயமாக வேண்டும் என்று விரும்புகின்றீர்கள்.
2. எனவே பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை செலுத்து கின்றீர்கள்.
3. வீட்டுச்சுழலை கற்றற்கேற்ற சூழலாக அமைத்துள்ளீர்கள்.
4. உங்கள் பிள்ளையின் கல்வி வளர்ச்சி தொடர்பாக ஆசிரியர்க ளுடன் கலந்துரையாடி ஒத்துழைக்கின்றீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனமெடுத்துச் செயற் படுகின்றீர்கள். (உணவு, உடை, மருந்து, போசாக்கு, ஒழுக்கம்.)
6. பிள்ளையின் நட்பு வட்டத்தை நன்கு அவதானிக்கின்றீர்கள்.
7. உங்கள் பிள்ளையுடன் திறந்த மனதுடன் கருத்துப்பரிமாற்றம் செய்கின்றீர்கள்
8. உங்கள் பிள்ளையை மற்றைய பிள்ளைகளுடனோ சகோதரர்க ளுடனோ ஒப்பிட்டுப் பேசுவதில்லை.
9. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஏற்ப செயற்படுகின்றீர்கள்.
10. பிள்ளையின் உயர்ச்சிக்கான வெகுமதிகளை அன்புகலந்த பாராட்டுக் களாகவே வழங்குகின்றீர்கள்.
11. பிள்ளைகளுடன் எப்பொழுதும் அன்பாகவே கருத்துப் பரிமாற்றம் செய்கின்றீர்கள்.
12. கணவன் மனைவியிடையே ஒற்றுமை உணர்வைப் பேணி வருகின்றீர்கள்.
13. பிள்ளைகள் முன்பாகச்சண்டை பிடிப்பதைத் தவிர்த்துக் கொள்வதில் முனைப்பாகவுள்ளீர்கள்.
14. தினமும் சில மணித்துளிகள் பிள்ளைகளுடன் மனந்திறந்து கதைக்கின்றீர்கள்.
15. ஆன்மீக சிந்தனையை குடும்ப அங்கத்வர்கள் ஒன்றிணைந்து பேணிவருகின்றீரகள்.
16. பிள்ளைகளிடையே வரிசை வேறுபாட்டை முற்றாகத் தவிர்த் துள்ளீர்கள்.
17. பால் வேறுபாட்டை பக்குவமாகக் கையாளுகின்றீர்கள்.
18. ஒரு நாளைக்கு ஒரு வேளையாவது எல்லோரும் சேர்ந்து உண்கின்றீர்கள்.
19. இகழ்ச்சி தரும் பேச்சுக்களையோ, செயற்பாடுகளையோ தவிர்த்து விடுகின்றீர்கள்.
20. பொருளாதார வளத்திற்கேற்ப குடும்பத் தேவைகளை நிறைவேற்றுகின்றீர்கள்.
21. சமுதாயத்தில் நன்மனப்பாங்கைப் பேணி வருகின்றீர்கள்.
22. பிள்ளைகளின் தேவைகளை இயன்றளவில் பூர்த்தி செய்கின்றீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே உங்கள் பிள்ளை சிறந்த கல்விமானாக, சமுதாயச் சிற்பியாக, முழுமனிதனாக வாழ வழி சமைத்திருக்கிறீர்கள். இதையே ஏனைய பெற்றோர்களுக்கும் முன் மாதிரியாக்கு கின்றீர்கள். கவலையை விடுங்கள் உங்கள் பிள்ளைகளே எதிர்காலத்தின் படைப்பாளிகளாவார்கள்.

**திரு.க.க.ஈஸ்வரன்**

தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி,
ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம், வரணி.
தென்மராட்சிக் கல்வி வலயம்.



## படிப்பது எதற்காக?

நண்பர் ஒருவர் ஆபிரகாம் லிங்கனிடம் "படிப்பதால் பணம் கொட்டப் போவதில்லை. பின் ஏன் நீங்கள் எதையாவது படித்துக்கொண்டே இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு லிங்கன்.

"நான் பணம் சேர்ப்பதற்காகப் படிக்கவில்லை. பணம் வரும் போது எப்படிப் பண்போடு வாழ வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளப் படித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனிதனும் மாரடைப்பும்

மனிதனை அச்சுறுத்தும் கொடிய நோய்களிலொன்று மாரடைப் பாகும். மாரடைப்பு ஏற்படும் வீதம் தற்போது அதிகரித்து வருகிறது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்."

ஆம்! நோயில்லாமல் வாழ்வதே குறைவில்லாத செல்வமாகும். மாரடைப்பு ஏற்படுவதனைத் தடுப்பதற்கு மாரடைப்பு பற்றிய அறிவு அவசியமாகும். இந்நோயின் தீவிரத்தன்மையையும் அதன் அறிகுறி களையும் அறிந்து பொருத்தமான நேரத்தில் வைத்திய உதவியை நாடல் மிக முக்கியமானதாகும்.

**மாரடைப்பு என்றால் என்ன?**

மனிதனின் இதயத்தில் வழங்கப்படும் ஒட்சிசனேற்றப்பட்ட குருதி சடுதியாக நிறுத்தப்படுதல் அல்லது அக்குருதியின் அளவு போதுமானதாக இல்லாதிருதத்ல். இதனால் இதயத்தசைகள் தமது தொழிற்பாட்டை நிறுத்தும். இச்சூழ்நிலை தொடர்ந்து நீடிக்குமானால் இதயத்தசைகள் படிப் படியாக இறக்க ஆரம்பித்து முழு இதயத்தின் தொழிற்பாடும் படிப்படியாக் குறைந்து செல்லும்.

**மாரடைப்பு நோய்க்குரிய பொதுவான அறிகுறிகள்**

**நெஞ்சுவலி**

இவ்வலியானது பொதுவாக நெஞ்சை இறுக்கும் தன்மையாகவும் கைகள், தாடை, கழுத்து ஆகியவற்றிற்கு பரவிச் செல்லும் தன்மை யாகவும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சுவலி ஏற்படும் போது வாந்தி எடுக்க வேண்டும் போன்ற உணர்வு, வியர்த்தல் போன்றனவும் காணப்படலாம். இதைவிட நெஞ்சுக் குள் அந்தரம், தலையிடி, தஞ்சக்கேடு, சுவாசிக்க கஷ்டம், இளைப்பு, வேலை செய்யும் போது இளைப்பு, நித்திரை குழப்பம் என்பனவும் ஏற்படலாம்.

இவ்வாறான அறிகுறிகள் இருக்குமிடத்து மற்றொருவரின் உதவி யுடன் வைத்திய உதவியை நாடல் மிகவும் இன்றியமையாததாகும்.

மாரடைப்பு நோயினை உண்டாக்கும் அல்லது அதிகரிக்கும் காரணிகளைத் தெரிந்து கொண்டால் அக்காரணிகளை தவிர்த்து அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் மாரடைப்பு நிகழும் சந்தர்ப்பத்தைக் குறைப்பதுடன் அதனால் ஏற்படும் பாதகமான விளைவு களையும் குறைக்கலாம்.

**மாரடைப்பு ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கும் காரணிகள்**

**( Risk tafactors)**

முக்கியமான காரணிகள் (Major risk factors)

1. சலரோகம் (Diabetes mellitus)
2. உயர் குருதியமுக்கம் (Hypertension)
3. புகைப்பிடித்தல் (Smoking)
4. உயர் கொழுப்பு நிலை (Dyslipidemia)

வேறு காரணிகள் (Others)

- மிகை உடல் நிறை
- உடற் பயிற்சியின்மை
- வயது
- பால்
- போசாக்கின்மை (Poor nutrition)
- சடுதியாக ஏற்படும் தொற்று நோய்கள் (Acute infection)
- மிகை மருத்துவப் பாவனை (NSAIDS)
- பரம்பரை (Genetic)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலரோகம் என்பது குருதியில் குளுக்கோஸின் அளவு நியம மட்டத்தை விட அதிகரித்தலாகும். இது ஓர் நீண்டகால நோயாகும். எனவே குருதிக் குளுக்கோஸின் அளவினைக் கட்டுப்பாட்டில் வைத்திருத் தல் உகந்தது. சலரோகம் உள்ளவர்களுக்கு மாரடைப்பு நோயின் அறிகுறிகளை உணரமுடியாமல் (Silent infarction) போகும். இதனால் தகுந்த நேரத்தில் வைத்திய சிகிச்சை யைப் பெற முடியாமல் இருப்பது ஆபத்திற்குரியதாகும்.

பரம்பரையில் மாரடைப்பு நோயுள்ளவர்கள், வயது வந்தவர்கள், பெண்களுடன் ஒப்பிடுகையில் ஆண்கள் இந்நோய் ஏற்படும் ஆபத்திற் குரியவர்கள்.

இவ்வாறானவர்கள் மற்றைய காரணிகளை கட்டுப்பாட்டிற்குள் வைத்தி ருப்பதுடன் வைத்திய ஆலோசனையை அலட்சியம் செய்யாது அடிக்கடி வைத் தியரை நாடி குருதியமுக்கம், குருதியில் சீனியின் அளவு போன்றவற்றைப் பரிசோதித்து முறையான மருந்துகளை தவறாது எடுத்து வரல் வேண்டும்.

குருதியமுக்கம் என்பது இரத்தவோட்டம் காரணமாக இரத்தக் குழாய்களில் ஏற்படுத்தப்படும் விசையாகும். இரத்த அமுக்கம் அதிகரிக் கும் போது அல்லது சலரோகத்தினாலும் இரத்தக் குழாய்களின் உட்படை பாதிப்படைவதனால் அதில் கொழுப்பு படிவதற்கான தன்மை அதிகரிக் கும். இதனால் குருதிக் குழாய்கள் அடைபட்டு மாரடைப்பு ஏற்படும்.

அத்துடன் இரத்த அமுக்கம் அதிகரிக்கும்போது இதயத்தின் தொழிற்பாடு அதிகரிக்கும். இதயத்தின் வேலை மிகையாக அதிகரிக்கும் போது இதயத்தசை தடிப்படையும். இவ்வாறு இதயம் விரிவடையும் போது இதயத்தின் சுருங்கி அத்துடன் விரியும் தன்மை குறைவடைந்து செல்லும். அத்துடன் தடிப்படைந்த இதயத்தசைக்கு வழங்கப்படும் குருதி யின் அளவும் குறைந்து செல்லும். இதனால் இதயத்தசைகளின் தொழிற் பாடு நிறுத்தப்பட்டு மாரடைப்பு ஏற்படும்.

புகைத்தல், மிகையான மது பாவனை மனிதனுக்கு தீங்கு பயப்பவை. இவை மாரடைப்பு மட்டுமன்றி வேறு பல நோய்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தும். புகைப் பிடிக்காதோருடன் ஒப்பிடுகையில் புகைப்பிடிப்போர் மூன்று அல்லது நான்கு மடங்கு ஆபத்திற்குரியவர்கள்.

புகைத்தலானது குருதியமுக்கத்தை அதிகரிப்பதுடன் உடற்பயிற்சி செய்யும் திறனையும் (Excercice tolerance) குறைக்கும். அத்துடன் இரத்தம் கட்டிபடுதலையும் அதிகரிக்கும். இரத்தக் கட்டிகள் இரத்த வோட்டத்தின் வாயிலாகச் சென்று இரத்தக் குழாய்களை அடைக்கும் முக்கியமாக இதயத்திற்கு குருதி வழங்கும் முடியுரு நாடிகளை அடைப்பத னால் குருதி வழங்கல் நிறுத்தப் பட்டு மாரடைப்பு ஏற்படும்.

உடற்பயிற்சியின்மையும் மிகை உடல்நிறையும் மாரடைப்பு ஏற்படுத்தும் ஆபத்தை மேலும் அதிகரிக்கும். எனவே ஆரோக்கியமான உடல்நிறையை பேணுவதுடன் (உயரத்திற்கு ஏற்ற நிறை) நாள்தோறும் 30 நிமிடங்களேனும் உடற்பயிற்சி செய்துவரல் நன்று. (வேகமாக நடத்தல், சைக்கிள் ஓடல், நீச்சல் என்பன உள்ளடங்கும்.

உண்ணும் உணவின் மூலம் நோய்கள் ஏற்படுத்தும் ஆபத்தைக் குறைக்கலாம்.

சத்தான உணவு முத்தான வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும். தேவையான உணவுகளை தேவையான அளவில் சேர்ப்பதே நல்ல ஆரோக்கியமானதாகும். எனவே பிட்டு, இடியப்பம், பாண், சோறு போன்ற மாச்சத்து உணவுகளை இயன்றளவில் குறைத்து பச்சை இலைக்கறி வகைகள், பழங்கள், தானிய வகைகள் போன்றவற்றை அதிகளவில் சேர்த்தல் நல்லது. சமையலில் எண்ணெய் வகைகள், உப்பு என்பனவற்றைக் குறைக்க வேண்டும். அத்துடன் சிறியளவு உண வேணும் கிரமமான இடைவெளியில் உண்ணுதல் உகந்தது.

குருதியில் உயர் கொலஸ்திரோல் மாரடைப்பு ஏற்படும் வீதத்தை அதிகரிக்கும் குருதியில் கொலஸ்திரோல் அதிகரிப்பதற்கு முக்கியமான காரணங்களாக

1) உணவின் மூலம் உள்ளெடுக்கப்படும் கொலஸ்திரோலின் அளவு அதிகரித்தல்.

2. உடலில் தொகுக்கப்படும் கொலஸ்திரோலின் அளவு அதிகரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக விலங்கு உணவுகளில் கொலஸ்திரோல் அதிகமாகக் காணப்படும். பன்றி இறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, பெரிய மீன்கள், நண்டு, கணவாய் போன்றன கொலஸ்திரோல் செறிந்த உணவு களாகும். சில உணவுகள் குறிப்பாக தேங்காய், கஜு / கொலஸ்திரோ லினை கொண்டிருக்கா விட்டாலும் உடலில் தொகுக்கப்படும் கொலஸ்தி ரோலின் அளவினை அதிகரிக்கச் செய்யும். எனவே இவ்வாறான உணவுகளையும் தவிர்க்க வேண்டும்.

மேலும் நெருக்கீடு (Stress) மனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாத தொன்றாகும். எனவே பிரச்சினைகள் ஏற்படும்போது பிரச்சினைகளை பிரச்சினையாக்காமல் தீர்வு காணுதல் வேண்டும். மன அமைதியைத் தரக்கூடிய யோகா, தியானம், Relaxation techniques போன்ற யுக்திகளை கையாளலாம்.

சடுதியாக ஏற்படும் தொற்று நோய்களிற்கு உரிய நேரத்தில் வைத்திய ஆலோசனைப்படி மருந்து பாவிக்க வேண்டும். தான் தோன்றித்னமாக மருந்து எடுத்தலைத் தவிர்க்க வேண்டும்.

எனவே ஆரோக்கியமான உணவு, அளவான உடற்பயிற்சி, முறையான வைத்திய ஆலோசனை ஏற்புடைய தியானம் ஆகியவற் றைக் கடைப்பிடித்து வர நோய் அகன்று ஆரோக்கியமான மனிதர்களாக வாழலாம்.

அப்போது மனிதன் மாரடைப்பிலிருந்து விடுபடுவான்.

1. It's never too late to begin. Start right now!
2. Be consistent your efforts. Exercise daily.
3. A little bit each day adds up to huge benefits.

**Dr. P. லக்ஸ்மன்**
**இதய சிகிச்சை நிபுணர்**
(Consultant, Cardiologist)
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கொரோனா வைரஸ்: உடலில் பரவுவது எப்படி?



## சில சந்தேகங்களும், விளக்கமும்.

(ஜேம்ஸ் கலேகர், அறிவியல் மற்றும் சுகாதார செய்தியாளர்
15 மார்ச் 2020,புதுப்பிக்கப்பட்டது 23 டிசம்பர் 2020)

கடந்த டிசம்பர் மாதம் சீனாவில் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் இன்று அண்டார்டிகா தவிர அனைத்து கண்டங்களிலும் பரவிவிட்டது.இந்த வைரஸ் தொற்றால் இதுவரை உலகளவில் 42 லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வைரஸ் உடலை எப்படி தாக்குகிறது? இதற்கு எப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது? என்பதை விளக்குகிறது இந்த கட்டுரை.

**நோயாக உருவாகும் காலம்**

**இது வைரஸ் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கான காலம்.**

உங்கள் உடலின் செல்களில் நுழையும் வைரஸ்கள், அவற்றை முதலில் ஆக்கிரமித்துக் கொண்டு, தன் கட்டுப்பாட்டில் கொண்டு வரும். சார்ஸ்-சி.ஓ.வி.-2 என அதிகாரப்பூர்வமாகக் குறிப்பிடப்படும் கொரோனா வைரஸ், சுவாசத்தின் மூலம் (அருகில் யாராவது இருமிய பிறகு) அல்லது வைரஸ் பரவியுள்ள ஒரு பொருளை, இடத்தைத் தொட்டுவிட்டு பிறகு முகத்தைத் தொடும் போது இந்த வைரஸ் உடலில் நுழைகிறது.

தொண்டை அருகே உள்ள செல்களில் அது முதலில் தொற்றிக் கொள்ளும். சுவாசப் பாதை மற்றும் நுரையீரலுக்கு சென்று அவற்றை “கொரோனா வைரஸ் உற்பத்தி தொழிற் சாலைகளாக” மாற்றும். அது பெரும் எண்ணிக்கையில் புதிய வைரஸ்களை உருவாக்கி உடலில் செலுத்தி, அதிக செல்களில் தொற்று ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப கட்டத்தில் நீங்கள் நோயுற மாட்டீர்கள். சிலருக்கு ஒருபோதும் அறிகுறிகள் தோன்றாது. நோயாக உருவாகும் காலம், அதாவது தொற்று ஏற்பட்டு அதன் நோய் அறிகுறிகள் தோன்றுவதற்கான காலம், ஆளுக்கு ஆள் மாறுபடும். ஆனால் சராசரியாக இது ஐந்து நாட்கள் என்ற அளவில் உள்ளது.

**லேசான நோய்**

ஏறத்தாழ அனைவருக்கும் இப்படித்தான் இருக்கும். கொரானா வைரஸ் தொற்று பரவிய 10 பேரில் எட்டு பேருக்கு கோவிட் - 19 நோய் லேசான பாதிப்பாக அமையும். காய்ச்சலும், இருமலும் தான் இதற்கான முக்கிய அறிகுறிகளாக உள்ளன.

**தீவிர பாதிப்பு**

வைரஸ் பாதிப்புக்கு எதிராக நோய்த் தடுப்பாற்றல் உக்கிரமாக செயல்படும்போது, இது நோயாக உருவாகும். உடலின் மற்ற பகுதிகளில் அழற்சியை ஏற்படுத்த இது ரசாயன சமிக்ஞைகளை அனுப்பும். ஆனால் இதை கவனமாக சமநிலைப்படுத்த வேண்டும். அளவுக்கு அதிகமான அழற்சி ஏற்பட்டால் உடல் முழுக்க பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

"நோய்த் தடுப்பாற்றல் எதிர்வினை செயல்பாட்டில் சமநிலையற்ற தன்மையை இந்த வைரஸ் ஏற்படுத்துகிறது. அளவுக்கு அதிகமாக உடல் அழற்சி இருக்கிறது. இதை எப்படி செய்கிறது என்பது நமக்குத் தெரிய வில்லை" என்று லண்டன் கிங்க்ஸ் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் நத்தாலி மேக்டெர்மோட் கூறியுள்ளார்.

நுரையீரல் அழற்சி, நிமோனியா எனப்படுகிறது.

உங்கள் வாயிலிருந்து, மூச்சுக் குழாய் வழியாகச் சென்று, நுரையீரலின் சிறிய குழல்களில் அதனால் செல்ல முடியும் என்றால், நுண்ணிய காற்று அறைகளில் அதனால் போய் அமர்ந்து கொள்ள முடியும்.

அங்குதான் ரத்தத்திற்கு ஆக்சிஜன் செல்வதும், கரியமில வாயு நீக்கப்படுவதும் நடக்கிறது. ஆனால், நிமோனியாவில் இந்த அறைகளில் தண்ணீர் கோர்த்துக் கொண்டு, சுவாச இடைவெளி குறைந்து, சுவா சிப்பது சிரமம் ஆகும். சிலருக்கு சுவாசிக்க வென்டிலேட்டர் தேவைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவில் இருந்து கிடைத்துள்ள தகவல்களின்படி பார்த்தால், 14 சதவீதம் பேருக்கு இந்த நிலை வரை பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிகிறது.

**சிக்கலான நிலையில் பாதிப்பு**

பாதிக்கப்பட்டவர்களில் 6 சதவீதம் பேருக்கு சிக்கலான நிலையில் பாதிப்பு ஏற்பட்டிருப்ப தாகத் தெரிய வந்துள்ளது.

இந்த சூழ்நிலையில் தான் உடல் செயல்பாட்டை இழக்கிறது. இதுவே மரணம் ஏற்படவும் காரணமாக உள்ளது. நோய்த் தடுப்பாற்றல் கட்டுப்பாட்டை மீறி செயல்பட்டு, உடல் முழுக்க பாதிப்பை ஏற்படுத்துவது தான் பிரச்சினை.

ரத்த அழுத்தம் அபாயகரமான அளவுக்கு குறையும்போது உடல் உறுப்புகள் செயல்பாடு குறையும் அல்லது முழுமையாக நின்றுவிடும். நுரையீரலில் பரவலான அழற்சி ஏற்பட்டு, மூச்சுத் திணறல் ஏற்படும் போது, உயிர்வாழ்வதற்குத் தேவையான ஆக்சிஜனை அளிப்பதை நுரையீரல் நிறுத்துவிடுகிறது. ரத்தத்தை சுத்திகரிக்க முடியாமல் சிறுநீரகங்களை அது தடுக்கக் கூடும். உங்கள் குடல்களும் பாதிக்கப்பட லாம்.

"நீங்கள் அதற்கு ஆட்படும் அளவுக்கு பெரிய அளவில் அழற்சியை இந்த வைரஸ் ஏற்படுத்தலாம். அது பல உறுப்புகளை செயல் இழக்கச் செய்யலாம்" என்று டாக்டர் பரத் பன்கானியா கூறுகிறார்.

வைரஸை நோய்த் தடுப்பாற்றலால் அடக்கியாள முடியாமல் போனால், உடலின் அனைத்துப் பகுதிகளுக்கும் அது பரவி, இன்னும் அதிகமான சேதாரத்தை ஏற்படுத்தும்.

இந்த நிலையில் உடலின் செயல்பாட்டில் குறுக்கீடு செய்து சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியம். ECMO உள்ளிட்ட சிகிச்சைகள் அதில் அடங்கும். தடிமனான குழாய்களில் ரத்தத்தை வெளியில் எடுத்து, ஆக்சிஜனேற்றம் செய்து, மீண்டும் உடலில் செலுத்தக் கூடிய செயற்கை நுரையீரல் இது. ஆனால் உறுப்புகள் உடலை உயிருடன் வைத்துக் கொள்ள முடியாமல் போகும் போது, அது உயிர்ப்பலி ஏற்படுத்தக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது மரணங்கள்

சிறந்த சிகிச்சைகள் அளித்தும் சில நோயாளிகள் எப்படி இறந்தார்கள் என்பதை டாக்டர்கள் விவரித்துள்ளனர். முதல் இரு நோயாளிகள் சீனாவில் வுஹான் மாகாணத்தில் ஜின்யின்டன் மருத்துவமனையில் இறந்தனர் என்று லான்செட் மருத்துவ இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலாவது நபர், 61 வயதான ஆண், மருத்துவமனைக்கு அழைத்து வரப் பட்ட சமயத்தி லேயே தீவிர நிமோனியா பாதிப்புக்கு ஆளாகியிருந்தார்.

அவருக்கு தீவிர மூச்சுத் திணறல் இருந்தது. வென்டிலேட்டர் வைத்த பிறகும், அவருடைய நுரையீரல் செயல் இழந்துவிட்டது. இருதயம் துடிப்பை நிறுத்திக் கொண்டது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 11 நாட்களில் அவர் இறந்து போனார். இரண்டாவது நோயாளி, 69 வயது ஆண், அவருக்கும் தீவிர மூச்சுத் திணறல் பாதிப்பு இருந்தது.

அவருக்கு ECMO சாதனம் பொருத்தப்பட்டிருந்தது. ஆனால் அது போதுமானதாக இல்லை. தீவிர நிமோனியா மற்றும் ரத்த அழுத்த குறைபாட்டால் உடல் உறுப்புகள் செயலிழந்து அவர் இறந்து போனார்.

## கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் 5 எளிய வழிகள்

### 1. பரிசோதனை, பரிசோதனை, மீண்டும் பரிசோதனை

ஆரம்பத்திலேயே கண்டறிவது இந்த தொற்று பரவலைக் கட்டுப்படுத்த ஒரு முக்கிய காரணியாக விளங்கும் என்று உலக சுகாதார நிறுவனமும், பிபிசியிடம் பேசிய நிபுணர்களும் தெளிவாக எடுத்துரைத் துள்ளனர்.

அமெரிக்காவின் டெம்பிள் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொற்று நோய்கள் ஆராய்ச்சி பிரிவு பேராசிரியரான ஜான்சன் கூறுகையில், "தினமும் 10,000க்கும் அதிகமான கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்ளும் தென் கொரியா, இரண்டு நாட்களில் சில நாடுகள் ஒரு மாதத்தில் மேற்கொள்ளும் மொத்த பரிசோதனைகளின் எண்ணிக்கை யையும் விஞ்சி விடுகிறது என்று குறிப்பிட்டார்.

"அனைத்து நாடுகளுக்கும் ஒரு முக்கிய செய்தி, பரிசோதனை, பரிசோதனை, பரிசோதனை செய்யுங்கள் என்பதே" என மார்ச் மாத தொடக்கத்தில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேசான அறிகுறிகள் உள்ளவர்களுக்கும் கொரோனா தொற்று பரிசோதனை பலனைத் தரும் என அவர் குறிப்பிட்டார்.

**2. பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தல்**

பரிசோதனை செய்வது பாதிக்கப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தவும், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும் மட்டுமல்ல, புதிதாகப் பாதிக்கப்படுபவர்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறியவும் பயன்படுகிறது.

**3. தயார் நிலை மற்றும் விரைந்து நடவடிக்கைகள் எடுப்பது**

**4. சமூக இடைவெளியை கடைப்பிடித்தல்**

"ஒரு நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்கனவே இருக்கும் பட்சத்தில், வழக்கமான கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மட்டும் போதாது" என யென்ஸ்வா கூறுகிறார்.

**5. சுகாதாரம் பேணுவது**

கொரோனா வைரஸ் பாதிப்பைத் தவிர்க்க அடிக்கடி கைகளைக் கழுவுவது மற்றும் தூய்மையாக இருத்தல் அவசியம் என உலக சுகாதார மையம் கூறுகிறது.

முகக் கவசம் அணிந்திருப்பவர்களுக்கு கொரோனா தொற்று பரவுவதை முககவசங்கள் தடுக்க இயலாது என்றபோதிலும் அவர்கள் மூலம் மற்றவர்களுக்குப் பரவுவதைத் தடுக்க இயலும்.

**புதிய வகை கொரோனாவின் அபாயகரமான 5 அறிகுறிகள்**

தடுப்பு மையம் (சி.டி.சி) வெளியிட்டுள்ளது. அந்த 5 அறிகுறிகள் பின்வருமாறு.

* சுவாச பிரச்சனைகள்
* மனக்குழப்பம்
* தொடர்ச்சியான நெஞ்சு வலி
* சோர்வு மற்றும் விழித்திருக்க முடியாமை
* நீல நிற உதடுகள் அல்லது முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி எனும்
## ஒற்றை வார்த்தையையும் தாண்டி!!



எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வம்

### திரு. வேலுப்பிள்ளை அன்பழகன்

அவர்களின்

பிரிவுச் செய்தி கேட்டு ஓடிவந்து இறுதிக் கிரியைகளுக்கான சகல ஒழுங்குகளையும் ஒத்தாசைகளையும் வழங்கிய அத்தனை உறவுகளுக்கும், அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், நேரிலும் தொலைபேசி மூலமும் மற்றும் இணைய வழியூடாகவும் எமக்கு ஆறுதல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்தவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கண்ணீர் அஞ்சலி, மலர் வளையம் துண்டுப் பிரசுரம், பதாகைகள், வெளியிட்டவர்களுக்கும், மேலும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மாணவப் பெற்றோர்களுக்கும், கல்வித் திணைக்கள பணிப்பாளர்கள், பணியாளர்களுக்கும் மற்றும் நோயுற்று இருந்தபோது சிகிச்சை அளித்த வைத்தியர்கள் வைத்தியசாலை தாதியர்கள், உத்தியோகத்தர்கள், கொழும்பில் இருந்த நாள் தொடக்கம் மரணித்த வினாடி வரை உதவி புரிந்த நண்பர்களுக்கும் இறுதி நாட்களில் உணவளித்த ஆறுதல் தந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும், மேலும் இழப்பு நடந்த நாள் தொடக்கம் இன்றுவரை எம்மைத் தேற்றிக் கொண்டிருக்கும் உறவுகளுக்கும், மேலும், இந்நூலை அச்சிட்டுத் தந்த எவகிறின் பதிப்பகத்தினருக்கும், நன்றி எனும் ஒற்றை வார்த்தையைத் தாண்டி இன்னொரு பெறுமதியான வார்த்தை இருக்குமானால் அதன் வழி எங்கள் கடனைத் தீர்க்கின்றோம்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைதிருந்தாய், அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்து கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -



New Evergreen Printers, Jaffna. Tel : 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org